www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JUDE
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஜூன் 21-27,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 262

## வெடிக்கும் குண்டுகள்

## முதலிட அச்சம்



## குழப்பத்தில் அரசு

## கோமாவில் வீழ்ந்த இளம் நடிகை



## அட்டகாசத் தொடர் ஆரம்பம்

www.padippakam.com

# முரசம்

## ஏற்காத நியாயங்கள்

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

பத்திரிகைகள் வெளியிடும்
செய்திகள்தான்
தமது பின்னடைவுகளுக்கு
காரணம் என்று
பிரதிபாதுகாப்பு அமைச்சர்
கூறியிருக்கிறார்.

செய்தித் தணிக்கையை
நியாயப்படுத்த
கூறப்பட்ட காரணமே அது!

படையினரும் புலிகளும்
அருகருகே நிற்கும்
களமுனையில்
படையினரின் நகர்வு
புலிகளுக்கு தெரியாது
என்பதும் பத்திரிகைகள்
வாயிலாகவே அறிகிறார்கள்
என்பதும் ஏற்கக்கூடியதா?

படையினரின் நகர்வுகள்
தெரிந்து
புலிகள் தாக்கிய பின்தான்
பத்திரிகைகளுக்கே
செய்தி கிடைக்கிறது!

போர்க்கள விபரங்கள்
இரகசியமாக
இருக்க வேண்டும் எனில்,
அங்கே பத்திரிகையாளர்களை
கூட்டிச் சென்று
காண்பித்தது ஏன்?

ரவை துளைக்காத
ஆடைகள் அணிவித்து
கிளிநொச்சி மற்றும்
புளியங்குளம் வரை
முக்கிய தளங்களுக்கு
பத்திரிகையாளர்களை அழைத்துச்
சென்றதே அரசாங்கம்தானே!

தமது விருப்பப்படி
தகவல் வெளியிடவில்லை
என்பதைத்தவிர,
பத்திரிகையாளர்கள் மீது
வேறெந்த கோபமும்
அரசுக்கு ஏற்பட்டிருக்காது!

இன்றுவரை புலிகள்
தங்கள் முன்னரங்கங்களுக்கு
வெளியாரை அனுமதிக்கவில்லை!

பிரசார நோக்கம் கருதி
அரசு போர்க்கள
முன்னரங்கங்களுக்கு
பத்திரிகையாளர்களை
அழைத்துச் சென்றது!

அப்படிச் சென்று வந்த
பத்திரிகையாளர்கள் பலர்
வெளியிட்ட தகவல்கள்
பூகோள நிலவரத்துக்கே
முரண்பாடாக இருந்தன!

வன்னியின் பூகோள அமைப்பே
தெரியாத பத்திரிகையாளர்களால்
இரகசியங்கள் எப்படி
வெளியாக முடியும்?

அரசின் படைகள்
கனரக வாகனங்கள்,
கனரக ஆயுதங்கள்
சகிதம் முன்னேறுபவை!

காதும் காதும் வைத்ததுபோல்
முன்னேற முடியாது.

எனவே, உளவறியாமல்கூட
புலிகளால்
விபரம் அறிய முடியும்!

படையினரின் மனோவலிமையை
உயர்த்துவதற்காகவே
செய்தித் தணிக்கை
என்றும் கூறப்படுகிறது!

களத்தில் என்ன நடக்கிறது
என்பது அங்குள்ள
படையினருக்கு தெரியும்!

உண்மைக்கு மாறான
தகவல்களாக இருந்தால்
அவை எப்படி
மனநிலையைப் பாதிக்கும்?
என்று தெரியவில்லை!

அது தவிர, தற்போதும்
வெளிநாட்டு வானொலிகள்
ஊடாக
களநிலவரச் செய்திகள்
வெளியாகிக் கொண்டிருக்கின்றன!

பத்திரிகைகள்கூட
களமுனைக்கு செல்ல
பல நாட்கள் ஆகலாம்!
ஆனால், வானொலிச் செய்திகள்
சுடச்சுட
களமுனைக்கு எட்டுகின்றனவே!
அரசு என்ன செய்யப்போகிறது?!

எனவே, செய்தித் தணிக்கைக்கு
அரச தரப்பின் காரணங்கள்
நியாயமானவை அல்ல!

கைப்புண்ணுக்கு
கண்ணாடி எதற்கு?
தணிக்கைக்கான காரணம்
யாவருக்கும்
தெரிந்தே இருக்கிறது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஆலய வழிபாடு

எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் குடிகொள்ளும் இடம் கோயில். எனவேதான் அண்டத்தில் வியாபித்து இருக்கும் இறைவனை சிறப்பாக வழிபட சிறந்த இடம் கோயில் ஆகும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

உதாரணம்: பசுவின் உடலில் எல்லா இடத்திலும் பாலைப் பெறமுடியாது; அதனுடைய முலைக் காம்பு மூலம்தான் பாலைப் பெறமுடியும்.

அதேபோன்றுதான் ஆன்மாக்கள் இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு உகந்த சிறப்பான இடம் கோயில் ஆகும். ஆன்றோர்கள் கூட 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' எனக்கூறி இருக்கின்றார்கள்.

ஆகவே பெறுவதற்கரிய மானிடப் பிறவியை நாம் பெற்றுள்ளது., ஆலய வழிபாட்டிற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வதற்கே. ஆண்டவனின் திருவருட் கமலங்களை அடைவதற்கு ஆலய வழிபாடு அத்தியாவசியமானதொன்றாகும்!

அனுப்புதல்: சேனையூர் அ. அச்சுதன்



## அண்ணல் நபி அலி (றலி)க்கு அருளியவை:

1. இருளான இடத்தில் உட்கார்ந்து உணவு உண்ணாதீர்.
2. உமக்கு தீங்கு செய்வோருக்கு நன்மையே செய்வீராக.
3. நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பீராக.
4. தினமும் நூறு தடவை பாவமன்னிப்பு தேடிக் கொள்வீராக.
5. விருந்தினரை உள்ளன்புடன் உபசரிப்பீராக.
6. எதையும் பேசும்போது பிறர் புரியும்படி பேசுவீராக.
7. பிறரின் குற்றங்குறைகளை தேடித்திரியாதீர்.
8. அதிகமாக தூங்காதீர். அதனால் இதயம் மரித்து விடுவதோடு கை சேதமும் உண்டாகும்.
9. நன்மைகள் புரிவதன் பக்கம் பிறரைத் தூண்டுவீராக.
10. உமது உணவைப்பற்றி கவலை கொள்ளாதீர்.
11. பகைவர்களை எளிதில் நம்பி விடாதீர்.
12. அகம்பாவம், ஆணவம் கொள்ளாதிருப்பீராக.
13. உட்கார்ந்து கொண்டு தலைப்பாகை அணியாதீர்.
14. சூடான உணவிலும், சுடுநீரிலும், சுஜூதின் இடத்திலும் ஊதாதீர்.
15. விலக்கானவற்றை நோக்காதிருப்பீராக.

நஸீர்.எம். அஸ்ரிப், எருக்கலம்பிட்டி-08.

## கவிதைப் போட்டி இல.259

### பரிசுக்குரிய கவிதை

### தமிழ்க் கட்சிகள்

**கொள்கைகளைப் பாயாக**
**காற்றில் பறக்கவிட்டு**
**வள்ளங்களில் தமிழ்க் கட்சிகள்**
**வாழ்க்கை நடத்தலாம்-**
**வெள்ளமாய் ஓட மக்கள்**
**விழிநீர் இருக்கும் மட்டும்!**

ந. திருவேலழகன்- மட்டக்களப்பு.



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### எங்கே அவர்கள்?

புறப்பட்டதோ
ஆயிரம் அகதிகள்:
கரை சேர்ந்ததோ
வெறும் படகுகள்!

அ. சந்தியாகோ-அசோகா வித்தியாலயம், கண்டி.

### பயம்

நடைபோடும் போதே
பயமாக இருக்கு:
படகேறிப் போனால்
பயமின்றிப் போமா?

கயல்வண்ணன்-வவுனியா

### காணவில்லை!

அன்று
அமெரிக்கா வரை சென்றது
அன்ன பூரணி!
இன்று
ஆற்றைக் கடக்குமுன்னே
ஆளில்லாமல் போனதோ-
பாய்மரத்தோணி?

ப. விஜி - நீர்கொழும்பு.

### ஓயாது

காற்றோயும் வரை
படகோட்டம் ஓயாது!
இனவாதம் உள்ளவரை
துப்பாக்கி வேட்டும் ஓயாது!

திருமதி சுவர்ணகலா-கல்முனை.

### கா(கோ)லம்

பாய்மரக் கப்பலோட்டி.
பாரறிய வெற்றியீட்டி.
சாதனை படைத்தஇனம்.
வேதனையிலின்று வீழ,
யார் யாரோ கப்பலோட்டி
வீரப்புக் காட்டுகிறார்!

ஆரையம்பதி இதயம்.

### எங்கே?

கடலுக்குப் போனோரும்
காணாமல் போனாரோ?

ஜோதி-வவுனியா.

### ஏலேலோ ஐலசா

அதோ வருகுது ஐலசா!
ரவை வருகுது ஐலசா!
சாகப் போறோம் ஐலசா!
வேகமாப் போ ஐலசா!

சோழியூர் சிவபரீஸ்வரன்- சுழிபுரம், யாழ்.

### ஏன்?

கடலே தோள்கொடுத்தாய்!
காற்றே கை கொடுத்தாய்!
தரையே ஏன் வெறுத்தாய்-

ஏ.எம். முபாறக்- ஒலுவில்-01.

### சந்தேகம்!

தோணியிலே பாய்விரித்து
தொலை தூரம் வந்துவிட்டோம்
மீன் பிடித்துப் போவதற்குள்
மிஞ்சிடுமா எமது உயிர்.?

ஏ. முஹம்மது முஸ் பே ரச்சீன்- நிந்தவூர்-15

### விடுகதை (அரசியல்வாதி)

வான் கடலில் படகுவிட்டு.
வடிவாக வலைவீசி-ஒரு
நெத்தலி மீன்பிடித்து
நூறுபேருக்கு சமைப்பார்கள்!
யாரவர்கள்?

சுபா வரன்-கண்டி.



முரசு கிடைத்ததும் முதலில் இடி அமீனிடம் ஓட வைக்கிறார் ரசிகன். அதனால் நாரதர், இராஜ தந்திரி போன்றோர் பொறாமைப்படவேண்டாம்!

செல்வி கே. எமில்டா, மன்னார்.

கார்லோசை வீழ்த்திவிட்டான் இடி அமீன்-கலக்கல் அமீன். மனித இறைச்சியை இடி அமீன் உண்பதைப் பற்றி முன்னரே அறிந்திருந்தேன். தற்போது சம்பவங்களோடு படிக்கையில் உலுக்குகிறது.

பி. ஹாரித், மொரட்டுவ

காதிலை பூ கந்தசாமி யாருக்கு வயதாக வயதாக (வாரமாக வாரமாக) பிரமாதமாக வருகிறது கிண்டல்! தமிழ்க் கட்சிகளிடம் மாட்டினால் தொலைந்தார். 'பயோடேட்டா'க்களும் தொங்கல்தான். 'தொங்கல்' என்றால் சூப்பர் என்று அர்த்தமப்பா.

மு. குமாரதாஸ், இலண்டன்.




'இடி அமீன்' குத்துப் போலவே வாராவாரம் ரசிகனும் குத்துகிறார். மலைப்பாம்பை ருசி பார்த்து சாப்பிடும் 'இடி அமீன்' கலக்க மூட்டி விட்டான்.

தா. மனோன்மணி, மட்டக்களப்பு.

முரசே!

'அரசியல் அலசல்' மிகத் தெளிவாக- இன்றைய ஆட்சியாளரின் எண்ணப்பாடுகளை மட்டுமன்றி, பொதுவாகவே ஆட்சியாளர்கள், பேரினவாதிகள், அவர்களது தந்திரங்கள் பற்றி அம்பலப்படுத்தி வருகிறது. இக்காலகட்டத்தில் இராஜ தந்திரியாரின் அலசல் மிக்க பயனுடையதே. ஏனெனில் கானல் நீரையெல்லாம் தாகம் தணிப்பன என்று நம் தமிழ்க்கட்சிகளேகூறி ஏமாற்றும் காலம் இது.

வி. துஷ்யந்தன், யாழ்ப்பாணம்.

### இதுதான் ஜனநாயகமா?

முரசே!

பேரினவாத சக்திகளை ஒன்றுபடச் செய்ய முற்படும் தமிழ்க் கட்சிகளுக்கு எத்தனை பரந்த மனம்?! இதுவல்லவோ அரசியல் மதியூகம்! இதுவன்றோ தமிழினப் பற்று! இத்தனையையும் செய்துவிட்டு இதுதான் ஜனநாயகம் என்றும், இந்த ஜனநாயகத்தை அச்சுறுத்தலாமா? என்றும் இவர்கள் கேட்பது ஏமாற்றுவேலை.

திருமதி க. சிவரஞ்சனி, கொழும்பு-09.

'அன்னபூரணி அம்மா' அருமையான வரலாற்று சாட்சியம்! திரு. ராஜகோபால் சுவையான நடையில் எழுதியுள்ளார். நம் 'டைட்டானிக்' அன்னபூரணி அம்மா!

எஸ். சுதர்சன், நோர்வே.

## கவிதைப் போட்டி இல.262



**கவனியுங்கள்!**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 27.06.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.262, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## அதற்காக இப்படியா?

அன்பு முரசே! உனது நோக்கம் வியாபாரம் என்று நீ கூறிவருகிறாய். நாம் அதை நம்பத் தயாரில்லை. பத்திரிகை விற்று பணம் வந்தால்தான் தொடர்ந்து பத்திரிகை வெளியிடலாம். குறிப்பிட்ட இலாபம் இருந்தால்தான் தாக்குப் பிடிக்கலாம்.

ஆனாலும் இங்கே உன்னைவிட குறைந்த பக்கங்களோடு, உன்னைவிட அதிக விலையில் வெளியாகும் பத்திரிகை ஒன்று (கலர் செலவும் இல்லை) உன்னை வியாபாரப் பத்திரிகை என்று விமர்சனம் செய்ததுதான் வேடிக்கை.

இவர்கள் மட்டும் இலாபம் இல்லாமல், மாத ஊதியம் இல்லாமல்-மக்கள் சேவை செய்கிறார்களாக்கும். அப்படியானால் குறைந்த விலையில் தரமுயற்சிக்கலாமே? நிற்க: 'தாய்', 'தூக்குமேடைக் குறிப்பு' போன்றவற்றை வெளியிட எந்த ஜனரஞ்சகப் பத்திரிகை இன்றுவரை முன்வந்திருக்கிறது?

'முரசு' அவற்றை வெளியிட்டது. அவற்றை வெளியிட்டால்தான் 'முரசு' விற்பனையாகும் என்றில்லை. இன்று அதே பக்கத்தில் 'மேக்கப் புன்னகை' வெளியாகிறது. 'முரசு' விற்பனையாகிறதுதானே? முரசின் நோக்கம் விற்பனை மட்டும்தான் என்று நீங்களும் கூறவேண்டாம்.

சிலருடன் விதண்டாவாதம் செய்ய விரும்பவில்லை என்பதால் அப்படிக் கூறியுள்ளீர்கள் என்று நினைக்கிறேன். முரசின் தீவிர வாசகர்கள் என்ற வகையில் அது என்போன்றோருக்கு கவலை தருகிறது.

எஸ். கயிலைநாதன், கனடா.

### அழிய ஆசை

தணிக்கையை கொண்டுவந்தும்கூட தமிழ்க் கட்சிகள் பேசாமடந்தைகளாகத்தான் இருந்தன. தமிழர்கள் எக்கேடு கெட்டாலும் புலிகள் அழிந்தால் போதும், தைரியமாக அரசியல் நடத்தலாம் என்பதே பல கட்சிகளது அடிமன ஆசை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அது வெளிப்பட்டு விடுகிறது.

கு. சுஜீவன், திருமலை.

### இன்று ஜனநாயகவாதிகள்! நேற்று?

முரசுக்கு!

அரசின் ஜனநாயக மாயைகள் பற்றிய இராஜதந்திரியாரின் அலசல் வந்தது முன்னே. தணிக்கை வந்தது பின்னே. 'ஜனநாயக நீரோட்டத்தில் குதித்துவிட்டதாக' சில தமிழ்க் கட்சிகள் கூறிவருகின்றன.

அப்படியானால் முன்னர் இவர்கள் பயங்கரவாதிகளாகவா இருந்தார்கள்?! இவர்கள் குதித்திருப்பது அதல பாதாளத்தில் என்பதே சரி. அப்படிக் குதித்ததால் சொந்தக் கால்கள் முறிந்து இரவல் கால்களில் நிற்கிறார்கள்!

ஜெ. அரசரத்தினம், கல்முனை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு. வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# பெருமளவில் புதிய உறுப்பினர்கள் திரட்டல்!

# யாழ் குடாநாட்டில் மாணவர்களுக்கு அழைப்பு!

## மலையக இளைஞர்களும் சேருகின்றனர்

வடக்கு-கிழக்கின் பல பகுதிகளில் இருந்தும், மலையகத்தில் இருந்தும் பெருமளவில் புதிய உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

யாழ் குடாநாட்டில் இருந்தும் புதிய உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்திற்கு சென்றுள்ளனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயம், வாழைச்சேனை கோராவெளி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் நடைபெற்ற திருவிழாக்களில் பெருமளவான புதிய உறுப்பினர்கள் புலிகளில் சேர்ந்தனர். இவர்களில் பெண்களும் அடங்குகின்றனர்.

கிழக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு தயாராகும் புலிகள், புதிய உறுப்பினர் திரட்டல்களிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

திருவிழாவுக்குச் சென்று அங்கிருந்து புலிகளுடன் இணைந்தவர்களது பெற்றோர்கள் சிலர் புலிகளிடம் சென்று தமது பிள்ளைகளை விடுமாறு கேட்டனராம்.

"அவர்களாக விரும்பி வந்து சேர்ந்துள்ளனர். அப்படி வருகிறவர்களை தடை செய்து குழப்பவேண்டாம்!" என்று அப்பெற்றோர்களிடம் புலிகள் கூறினராம்.

### மாணவர்களுக்கு அழைப்பு

யாழ் குடாநாட்டில் 'மாணவர் அமைப்பு' என்ற பெயரில் பாடசாலை மாணவர்களுக்கு துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் பங்குகொள்ள முன்வருமாறு அப்பிரசுரத்தில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து புதிய உறுப்பினர்கள் புலிகள் அமைப்பில் சேர்ந்துள்ளனர் என்று தெரிகிறது.

புதிய உறுப்பினர்கள் சிலரை உளவு வேலைகள் செய்ய புலிகள் நியமித்துள்ளனராம். யாருக்கும் சந்தேகம் வராதபடி தகவல்களைத் திரட்டவே இந்த ஏற்பாடு.

### மலையகத்தில்

"மலையகத்தில் உள்ள தலைவர்கள் மீது அங்குள்ள இளைஞர்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். அவர்களது கவனம் இப்போது புலிகளை நோக்கிச் சென்றுள்ளது" என்று மலையகத்தின் தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

அடையாள அட்டைப் பிரச்சனை முதற்கொண்டு பல்வேறு நெருக்கடிகளுக்கு இனரீதியாக முகம் கொடுக்கின்றனர் மலையக தமிழ் மக்கள்.

ஆனால் மலையக அரசியல்வாதிகள் சந்தா பெறுவதிலும், தேர்தல் வெற்றிகளுக்காக கூட்டுச் சேர்ந்து நிற்பது போன்றவற்றிலுமே கவனம் செலுத்துகின்றனர். இதனால் இளைஞர்கள் கோபம் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

"மலையக இளைஞர்கள் பலர் புலிகள் அமைப்பில் சேரத் தொடங்கியுள்ளனர் என்பது உண்மைதான். மலையக இளைஞர்கள் புலிகளுடன் இணைய முன்னரே அவர்கள் மீது சந்தேகப் பார்வைகள் வீசப்பட்டன. அதன் பிரதிபலிப்புத்தான் இன்றைய நிலை என்று நினைக்கிறேன்," என்றும் அவர் கூறினார்.

## பூரண விபரங்கள்

புலிகள் தரப்பில் பலியாகும் உறுப்பினர்களது பெயர் விபரங்கள் முகவரிகளுடன் கூறப்பட்டு வருகின்றன. காயமடைந்து பலியாகும் உறுப்பினர்களது பெயர்களையும் புலிகளின் குரல் வானொலி தெரிவிக்கிறது.

புலிகள் இயக்க உறுப்பினர்களது பெற்றோர்கள் இடம்பெயர்ந்து வசிப்பதால் அவர்களுக்கு தகவல் கிடைப்பதற்காகவே பூரண விபரங்கள் கூறப்படுகின்றன. பலியான புலிகளது பெற்றோர் அல்லது உறவினர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் புலிகளின் குரல் மூலம் அறிவிக்கப்படுகிறது.

## எச்சரிக்கைக் கடிதங்கள்

### 'உடன் பதவி விலகுக!'

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கடிதங்கள் தமக்குக் கிடைத்துள்ள தகவலை சிலர் வெளியிடத் தயங்குகின்றனராம். எனினும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அனைவரது முகவரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வேட்பு மனுத் தாக்கல் செய்தபோது கொடுத்த முகவரிக்கே கடிதங்கள் சென்றுள்ளன. "வேட்பு மனுப் பிரதிகள் புலிகளின் கைக்குச் சென்றுள்ளன" என்று முன்னர் 'முரசு' செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

'தமிழின விடுதலை விரும்பிகள்' என்ற பெயரில் அனுப்பப்பட்டுள்ள அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழினம் காலம் காலமாக இன்னல்களை அனுபவித்து வருகிறது. பேரினவாதிகள் திட்டமிட்ட ஒடுக்கு முறைகளை செயற்படுத்தி வருகின்றனர். இதற்கு தமிழ்க் குழுக்களும் துணைபோகின்றன. தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் தமது சுயநலனையே பேணி வருகின்றன. தமிழ்க் கட்சிகளால் பேரினவாதிகளிடம் இருந்து உரிமைகளை மீட்க முடியாது.

எனவே இக் கடிதம் கண்டதிலிருந்து தாங்கள் ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இல்லையேல்-நகரமேயருக்கு ஏற்பட்ட கதியே தங்களுக்கும் ஏற்படும்.

'தமிழின விடுதலைக்கு தடையாக இருப்பது அத் தடையின் குற்றமே அல்லாமல், தடையை அகற்றுபவர்களின் குற்றமல்ல' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைக் கடிதம் கையால் எழுதப்பட்டுள்ளது. சங்கிலியன் படையால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் சிலவும் கையாலேயே எழுதப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கடித உறையில் தபாலக முத்திரையில் புங்குடுதீவு என்று இருக்கக் காணப்பட்டது.

## அம்பாறையை விட்டுக் கொடுப்பதா?

### கூட்டணிமீது கண்டனத் தீர்மானம்

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபை கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இரண்டு வருடங்களின் பின்னர் சமீபத்தில் கூடிய தமிழர் மகாசபை, அம்பாறையை விட்டுக் கொடுக்க கூட்டணி மேற்கொண்ட முடிவை கடுமையாகச் சாடியுள்ளது.

கூட்டணியின் தீவிர உறுப்பினராக இருந்த பலரும் கூட்டணியின் நிலைப்பாட்டைக் கண்டித்து குரல் கொடுத்தனர்.

"அம்பாறையை விட்டுக் கொடுப்பது என்ற முடிவு, அம்பாறை மக்களை கலந்தாலோசிக்காமல் செய்த முடிவாகும். அம்பாறை தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக தென் கிழக்கு என்ற புதிய அலகுக்கு கூட்டணியினர் இணக்கம் தெரிவித்ததையும் நாம் கண்டிக்கிறோம்!" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டணியின் தீவிர உறுப்பினர் ஒருவரே மேற்கண்ட தீர்மானத்தை கொண்டுவந்திருந்தார். கூட்டணி அம்பாறை மாவட்டத்தில் பெற்ற வாக்குகள் மூலம் தேசிய பட்டியல் எம்.பியான நீலன் திருச்செல்வம் தொடர்பாகவும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'முரசு' நிருபரிடம் அதிருப்தி தெரிவித்தனர்.

"திரு. நீலன் திருச்செல்வம் தேசியப் பட்டியல் எம்.பியாக அம்பாறை மாவட்ட தமிழ் வாக்குகளும் ஒரு காரணம். அவ்வாறு இருக்கையில், அம்பாறையை தாரைவார்க்க அவர் முன்னிற்பது முறைதானா?" என்று மகாசபை பிரமுகர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

## ரணில் நடவடிக்கை

'ஜயசிக்குறுய்' சமரில் காயமடையும் படையினர் தொடர்பான விபரங்களை திரட்டி வெளியிட ஐ.தே.கட்சி அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. 24 மணிநேரமும் இந்த அலுவலகம் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கள நிலவர உண்மைகளை விசாரிப்பாக அறிந்து கொள்ளத்தான் இப்படியான ஒரு ஏற்பாட்டை ரணில் செய்துள்ளாரோ? என்ற சந்தேகம் ஆளும் தரப்பு மத்தியில் எழுந்துள்ளது.

## புலிகளின் தளபதி பலி

புலிகள் அமைப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேர்னல் அன்பு பலியாகியுள்ளார். 10.06.98இல் முன்னெடுத்தலில் அவர் உட்பட ஐந்து புலிகள் பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

புலிகள் இயக்க நீண்டகால உறுப்பினரான அன்பு, பல்வேறு முக்கிய தாக்குதல்களில் பங்கு கொண்டவர்.

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல், ஜயசிக்குறுய் படையினர் மீதான தாக்குதல்கள், கிளிநொச்சி சமர் என்பவற்றில் புலிகளின் களமுனைத் தளபதிகளில் ஒருவராக இருந்தவர்.

இவரை இயக்க உறுப்பினர்கள் 'அம்மா' என்று அழைப்பார்களாம். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்புவின் சொந்தப் பெயர் வைத்திலிங்கம் திருக்கேதீஸ்வரன்.

இவரது பூதவுடல் இரண்டு நாட்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. வன்னியில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. விசுவமடுவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

## சிவகுமாரன் சிலை - கட்சிகள் சர்ச்சை

யாழ்ப்பாணம் உரும்பிராயில்-ஆயுதப் போராட்டத்தில் முதற் பலியான போராளி சிவகுமாரனின் சிலை இடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் யாழ் சென்று ஒன்றரை வருடமாகியும்கூட அச் சிலையை புனரமைக்க முயற்சி செய்யவில்லை. ஆனால் தற்போது சிலையை அமைக்கும் முயற்சியில் புளொட், ஈ.பி.டி.பி. அமைப்புக்கள் இடையே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சிவகுமார் சிலையை நிறுவும் தமது முயற்சிக்கு ஈ.பி.டி.பி. குறுக்கே நிற்கிறது என்று புளொட் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதற்கு பதிலளித்து ஈ.பி.டி.பி. விடுத்த செய்தியில், "குறுக்கே நிற்கவில்லை; பிரதேச சபை எமது பொறுப்பில் இருப்பதால் சிவகுமாரன் சிலையை சிறப்பாக நிறுவப் போகிறோம்!" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் மீண்டும் டெங்கு அபாயம்!

தற்போது நிலவி வரும் காலநிலையின் விளைவால் நாட்டில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சகல பாகங்களிலும் நுளம்புகள் பல்கிப் பெருகியுள்ளன. நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினரும், பொதுநல அமைப்புக்களும், மற்றும் பொதுமக்களும் தீவிர கவனஞ் செலுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வழக்கமாக தென்மேல் பருவப் பெயர்ச்சி மழையுள்ள காலங்களில்-குறிப்பாக ஜூன், ஜூலை மாதங்களில் டெங்கு வைரஸைப் பரப்பும் நுளம்புகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இவ்வாண்டின் கடந்த 5மாத காலப்பகுதியில் 463 பேர் டெங்கு வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் மூவர் இறந்துள்ளனர். 62 பேருக்கு சாத்தியமான டெங்கு வைரஸ்கிருமிகள் பீடித்துள்ளன. பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பின்றி நுளம்புகள் பல்கிப் பெருகுவதைக் கட்டுப்படுத்த முடியாதென்று சுகாதார அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## சூட்டுக் காயங்களுடன் உடல்கள்

### மன்னார் பேராயர் தெரிவிப்பு

மன்னாரில் நான்கு பொதுமக்கள் காணாமல் போயிருந்தனர். பின்னர் சூட்டுக் காயங்களுடன் அவர்களது உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தகவலை மன்னார் பேராயர் வண பிதா ராஜப்பு ஜோசப் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

பழனியாண்டி-வயது 30, செல்லத்துரை செல்வரட்ணம்-32, மாரிமுத்து - செல்வக்குமார்- 22, முனியாண்டி ராமையா-23 ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் செட்டியார் கட்டையடம்பனில் இருந்து இடம்பெயர்ந்து முருங்கன் பகுதியில் வசித்து வந்தனர். கடந்த மாதம் 26ம் திகதி மடுநோக்கி சைக்கிளில் சென்றனர்.

நான்கு சடலங்களும் மிகப் பழுதான நிலையில்தான் கண்டெடுக்கப்பட்டன.

## மீண்டும் வாகனங்கள்

மட்டக்களப்பிலுள்ள ஏழு பிரதேச செயலாளர்களுக்கு மீண்டும் பிக்-அப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள பிரதேச செயலாளர்களின் பாவினைக்கும் பிக்-அப் வானங்களை வழங்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களில் ஏறாவூர்ப் பற்று மற்றும் பட்டிப்பளை பிரதேச செயலாளர்களின் வாகனங்களைப் புலி இயக்கத்தினர் கடத்திச் சென்றிருந்தனர். ஏனைய பிரதேச செயலாளர்கள் வைத்திருந்த பிக்-அப் வாகனங்களை உடனடியாக மீள ஒப்படைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணசபை கேட்டுக்கொண்டது.

1995டிசம்பர் மாதம் பிரதேச செயலாளர்களிடமிருந்து பிக்-அப் வாகனங்கள் மீளப் பெறப்பட்டன.

மீளப் பெறப்பட்டவற்றில் ஏழு பிரதேச செயலாளர்களின் வாகங்கள் சமீபத்தில் மீண்டும் வழங்கப்பட்டுள்ளன. ஏறாவூர்ப் பற்று, வாழைச்சேனை, வாகரை, பட்டிப்பளை, மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேச செயலாளர்களுக்கு மீண்டும் பிக்-அப் வாகனங்கள் வழங்கப்படவில்லை. அவற்றை விரைவில் வழங்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். வாகனங்கள் இல்லாத காரணத்தினால் பிரதேச செயலாளர்கள் சிலர் பொதுப்போக்குவரத்து பஸ்களில் பயணம் செய்து வருகின்றனர்.

## புதிய ஆணைக்குழு நியமனம்

### அதனால் பலத்த சந்தேகம்

தற்போதுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினைக் கலைத்துவிட்டு புதியதொரு குழுவை உருவாக்குவதற்கான பிரேரணை ஒன்று ஜூன் 23ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

கடந்த பொதுத் தேர்தலின்போது பொதுஜன முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில், நாட்டில் மலிந்து கிடக்கும் இலஞ்ச ஊழலை இல்லாதொழிக்க ஒரு அமைப்பினை உருவாக்கப்போவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் பாராளுமன்றத்தின் ஏகோபித்த ஆதரவுடன், நிரந்தர ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஆணைக்குழுவின் கடந்த 3 ஆண்டுகால நடைமுறைகளைப் பாராட்டி ஜனாதிபதி கடந்த நவம்பர் 26ம் திகதி ஆணைக்குழுவின் தலைவர் திரு.விஜேசுந்தரவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

ஆனால் இக் கடிதம் அனுப்பி 6 மாதங்களில் "ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாயில்லை" என்றும் "குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு இக்குழுவுக்குப் போதுமான ஆற்றலும் கிடையாது," என்று ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார்.

புதிய ஆணைக்குழு ஒன்றினை அமைக்க உதவுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒத்தாசையையும் கோரியுள்ளார். இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒத்துழைப்பு வழங்க முடியாதெனத் திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

ஆளும் கட்சியைச் சார்ந்த பிரமுகர்களின் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமல் தட்டிக் கழிப்பதற்காகவே ஆணைக் குழுவைக் கலைத்துவிட ஆட்சியாளர்கள் அவசரப்படுகிறார்களோ, என்று பொதுமக்கள் ஐயம் கொண்டுள்ளனர்.

## ஆசிரியர் சங்கத்தின் மறுப்பும் – பிசுபிசுத்த போராட்டமும்!

(மட்டக்களப்பு நிருபர்)

மே மாதம் 09ம் திகதி சனிக்கிழமையும் அரசாங்கப் பாடசாலைகளை நடாத்த வேண்டுமென்று கல்வியமைச்சு இவ்வாண்டு ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தது. எனினும் மே 11ம் 12ம் திகதிகளில் வெசாக் தினமாகையால் பாடசாலைகளை மே 09ம் திகதி நடாத்த வேண்டுமென்ற தீர்மானத்தை அரசு திடீரென இம்மாதம் இரத்துச் செய்தது.

பின்னர் மே 09ம் திகதிக்குப் பதிலாக ஜூன் 13ம் திகதி சனிக்கிழமை சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளை நடாத்த வேண்டுமென்று அரசு திடீரென அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளியானதும், தம்மைக் கலந்தாலோசிக்காமல் அரசு எடுத்த திடீர் முடிவை ஆட்சேபித்து ஜூன் 13ம் திகதி சனிக்கிழமை சுகவீன லீவில் பாடசாலைகளுக்குச் செல்லாது போராட்டம் நடாத்தப்போவதாக தேசிய ஆசிரியர் சங்கம் அறிவித்தது.

இந்த இரு அறிவிப்புக்களும் அரச வானொலியின் செய்தியறிக்கையில் சொல்லப்பட்டன. இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் ஜூன் 13ம் திகதி பாடசாலைக்குச் செல்வதா இல்லையா என்று குழம்பிப் போயினர்.

எனினும் ஜூன் 13ம் திகதி வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பாடசாலைகளும் நடாத்தப்பட்டன. சிங்களப் பகுதிகளிலுள்ள சில பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவும், மாணவர்களின் வரவும் வெகுவாகக் குறைந்து காணப்பட்டதால் பாடசாலைகளை நேரகாலத்துடனேயே மூடவேண்டிய நிலை யேற்பட்டது.

ஆசிரியர் சங்கத்தின் பிசுபிசுத்த முடிவாலும், அரசின் திடீர் அறிவித்தலாலும் ஆசிரியர்களும் மாணவர்களும் குழம்பிப் போயினர் என்று மூத்த கல்வியதிகாரியொருவர் தெரிவித்தார். பௌத்த வெசாக் பண்டிகையை மட்டும் அரசு கவனத்திலெடுத்து நாட்டிலுள்ள தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளுக்கும் அதன் முடிவைத் திணித்துவிட்டது. வடகிழக்கு மாகாண கல்வி அதிகாரிகளும் தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளைக் கவனத்திலெடுக்காத அரசின் முடிவுக்குத் தலை அசைத்து விட்டனர்.

வருடத்தில் ஒருநாள் வரும் தமிழ்-முஸ்லிம் சிறப்புத் தினங்களான மஹா சிவராத்திரி, ஹஜ்ஜுப் பெருநாள் என்பனவற்றை பொதுவிடுமுறை அந்தஸ்திலிருந்து அரசு நீக்கியிருப்பதும் ஆனால் சிங்களப் பண்டிகைகளுக்காக அரசு போதிய விடுமுறைகளை வழங்கி வருவதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

## மின்கம்பத் தண்டனை

### இரு இளைஞர்கள் பலி

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் இரு தமிழ் இளைஞர்களுக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளே தண்டனை வழங்கியுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது. எனினும் புலிகள் இது தொடர்பாக இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை.

கல்முனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைக்கு முன்பாக உள்ள மின்கம்பங்களில் இரு இளைஞர்களது உடல்களும் கட்டப்பட்டிருந்தன.

15.06.98 அன்று இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இரு இளைஞர்களும் கடற்கரைப் பகுதியில் வைத்தே பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கால்களில் கடற்கரை மணல் காணப்பட்டது. இழுபறிப்பட்டதற்கான காயங்களும் உடம்பில் காணப்பட்டன.

எஸ். காந்தன், எம். இளங்கோ ஆகிய இளைஞர்களே தண்டனைக்கு உள்ளானோராவர். அவர்களில் ஒருவர் சோடாக் கம்பனியிலும், மற்றவர் கராஜ் ஒன்றிலும் வேலை செய்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் கல்முனையில் பலியான புலிகள் இயக்க உறுப்பினர் பற்றிய தகவல்களை இவர்களே வழங்கினார்களாம். அதனால்தான் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது என்று தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

## ஆயுதங்கள் மீட்பு

தெகிவளையிலுள்ள தனியார் பாதுகாப்பு அலுவலர்களின் அலுவலகத்திலிருந்து பல ஆயுதங்களை பொலிசார் மீட்டுள்ளனர். இந்நிறுவனத்தில் பணிபுரியும் மூவரை பொலிசார் கைது செய்தபோதும் இந்நிறுவனத்தின் உரிமையாளரை பொலிசார் தேடி வருகின்றனர்.

துப்பாக்கிகள் 2, ரிவோல்வர்கள் 2, ரைஃபிள்கள் 22, பலதரப்பட்ட துப்பாக்கி ரவைகள்-350 மற்றும் கைக்குண்டுகள் மூன்றும் இந்த நிறுவனத்திலிருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

இவைதவிர இரு சாதாரண துப்பாக்கிகளும் கண்டுபிடிக்கப்பட்டனவாம். இவை உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்டன என்றும் தெரியவருகிறது. இவ்வாயுதங்கள் எவற்றுக்கும் பாதுகாப்பு அமைச்சிலிருந்து அனுமதி பெறப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

## பொதுமக்கள் பலி

### கண்டனப் பேரணி

கிளிநொச்சியில் 10.06.98 அன்று நடைபெற்ற அனர்த்தத்தில் பலியான 25 பொதுமக்களுக்கு வன்னி எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

15.06.98 அன்று பொதுமக்கள் பலியான சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஆவேசமான கோஷங்களும் எழுப்பப்பட்டன. பலியான பொதுமக்களது உறவினர்களும் கலந்துகொண்ட இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டிருந்தனர்.

முல்லை மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியம் சர்வதேச சமூகத்துக்கான மகஜர் ஒன்றையும் வெளியிட்டது. அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மனித உரிமைக்குழு என்பவற்றிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

'மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்துக, நீதி கிடைக்க வழிவகை செய்க' என்று மகஜரில் கோரப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# 'மோட்டார் சைக்கிள் கொடுக்கவில்லை!'

## பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா மறுப்பு

புலிகளுக்கு பிரதி அமைச்சர் மோட்டார் சைக்கிள் அன்பளிப்பு? என்ற தலைப்பில் 'முரசில்' வெளியான செய்தி (மே17-23) தொடர்பாக, பிரதியமைச்சர் எம். ஹிஸ்புல்லா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேற்படி செய்தியால் தனக்கு ஏற்பட்ட மான இழப்புக்கு ஈடாக 2 கோடியே 50 இலட்சம் ரூபா கேட்டு தனது சட்டத்தரணி மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறிப்பிட்ட செய்தி தொடர்பாக பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா சார்பாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ள மறுப்பின் சாராம்சம் பின்வருமாறு:

"குறிப்பிட்ட செய்தியால் அரசாங்க வட்டாரத்தில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாதுகாப்பு படையினரின் மனதில் எழுந்துள்ள சந்தேகமானது, மிக மோசமான- சீர்படுத்த இயலாத நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனது கட்சிக்காரர் எக்காலத்திலும் புலிகளுக்கோ அல்லது வேறு ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கோ மோட்டார் சைக்கிளை மட்டுமல்ல, வேறு எதையுமே கொடுத்ததில்லை.

எனது கட்சிக்காரர் மே 9ம் திகதி 1998 அன்று வெலிக்கந்தையில் இருந்து மட்டக்களப்பு வரை இராணுவப் பொலிஸ் பாதுகாப்புடன்தான் பயணம் செய்தார். பாதுகாப்பு ஏற்பாடுகள் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்பே பயணத்தைத் தொடர்ந்தார்.

இராணுவத்தால் மீட்கப்படாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி என்ற வகையிலேயே, மின்சக்தி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மட்டக்களப்பு சிறீலங்கா இராணுவ பொறுப்பதிகாரியின் அனுமதியுடனும் உடன்பாட்டுடனுமே எவ்வித பாரபட்சமுமின்றி பயன்படுத்தி உள்ளார்.

காத்தான்குடி மின்மாற்றி தகர்ப்புடன் பிரதியமைச்சரை தொடர்புபடுத்தியமை மிக மோசமான, கெட்ட நோக்கத்துடனான குற்றச்சாட்டாகும்

கொழும்பில் நடைபெற்ற 50வது சுதந்திர தின விழாவில் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கலந்து கொண்டமை பொது நிர்வாக உள்துறை அமைச்சின் அழைப்பினை ஏற்று. ஒருமாதம் முன்னரே தீர்மானிக்கப்பட்டதாகும்.

எனவே, மட்டக்களப்பில் சுதந்திர தினத்தன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதல் பற்றி எனது கட்சிக்காரருக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது என்பது தவறானதும், பொய்யானதுமாகும்.

குறிப்பிட்ட செய்தி பிரதியமைச்சரான தனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவே பிரசுரிக்கப்பட்டுள்ளது என்று எனது கட்சிக்காரர் கருதுகிறார்." இவ்வாறு மறுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முரசின் பதில்

பிரதியமைச்சரின் மறுப்புத் தொடர்பாக மேற்படி செய்தியை வழங்கிய மட்டக்களப்பு நிருபரின் விளக்கம் கோரப்பட்டுள்ளது. அடுத்தவாரம் மறுப்பு தொடர்பான முரசின் கருத்து வெளியாகும்.

- ஆ.ர்.-

# தபோவனத்தில் குழறுபடி

## மாதாஜியின் நோக்கத்துக்கு கேடு!

திருக்கோணமலை: சிவானந்த தபோவனத்தின் கணக்கு வழக்குகள் சரியாகப் பேணப்படாமையும் நிர்வாகச் சீர்கேடுகளும் பொதுமக்கள், தபோவன நலனில் ஆர்வங்கொண்டோர் ஆகியோரிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக எழுந்த புகார்களையடுத்து சட்டத்தரணி திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் ஏப்ரல் 26ம் திகதியிட்டு டாக்டர் அ. பாக்கியதுரை என்பவருக்கு காரசாரமாக கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அறங்காவலர் அமைப்பின் அனுமதியின்றி ஏப்ரல் 4ம் திகதி கூடிய கூட்டமும் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட நான்கு உறுப்பினர்களின் உரிமையும் வலுவற்றவை என அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதோடு தபோவனத்தின் கணக்கு வழக்குகளை உடனடியாக திரு கா. வினாயகசோதி என்பவரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாதாஜியின் நோக்கங்களுக்கு ஊறு விளைவிப்பவர்கள் கண்டிப்பாகத் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும் என்றும் அக் கடிதத்தில் காரசாரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### பிழையான நடைமுறை

சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜியினால் ஆரம்பிக்கப்பட்ட தபோவனத்தில் சுமார் நூறு வசதி குறைந்த பிள்ளைகள் இருக்கிறார்கள். மாதாஜியின் மறைவின் பின் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. தங்கத்துரை சட்டத்தரணி திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் ஆகியோர் உட்பட ஆறு பேர் கொண்ட அறங்காவலர் குழுவே இவ்வில்லத்தைப் பராமரித்து வந்தது.

திரு. தங்கத்துரையின் மறைவைத் தொடர்ந்து பாக்கியதுரையும் வேறு சிலரும் அறங்காவலர் குழுவில் உறுப்பினர்களாக்கப்பட்டனர். எனினும் பாக்கியதுரை தன்னைத்தானே தலைவராகப் பிரகடனப் படுத்திக்கொண்டதுடன் பிழையான நடைமுறைகளையும் கைக் கொண்டதால் ஏனைய உறுப்பினர்களிடையே அதிருப்தி நிலவியது. உறுப்பினர் ஒருவர் பதவி விலகினார்.

தபோவனப் பொறுப்பாளரான பெண்மணிக்கும் திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். பிள்ளைகளுக்கு நல்ல உணவு வழங்கும்படியும், பிள்ளைகள் விடயத்தில் சுயமாகவே முடிவெடுக்கலாம் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதோடு, "தபோவனப் பணி உண்மையுள்ளவர்களை உயர்த்தும். கள்ளமுள்ளவர்களை அழிக்கும்!" என்றும் குறிப்பிட்டு அவருக்கு மாதாஜியின் ஆசி என்றுமுண்டு எனவும் வாழ்த்தியுள்ளார்.

சிவானந்த தபோவனம் பதிவு செய்யப்பட்ட தர்மஸ்தாபனம் என்பதும், திருக்கோணமலையிலும் மூதூரிலும் அதற்கு நிலபுலன்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

திருக்கோணமலை மாவட்டச் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குரிய 1998ம் ஆண்டிற்கான நிர்வாகிகள் மன்றக் கூட்டத்தில் தெரிவானார்கள்.

கிழக்கு மாகாண சமாச இணைப்பதிகாரி திரு க. கரன், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சிவபாதசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் தலைவராக, திரு. இரவீந்திரராஜா, துணைத்தலைவராக திரு. ரமணிகரன், செயலாளராக திரு. நளினகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், திரு. நடராஜா, திருமதி குசுமலதா, திருமதி ஜமுனா, திரு. அரியசுந்தரம், திருமதி யசோசினி, திருமதி செல்வரஞ்சனி, திருமதி கமலாதேவி ஆகியோர் செயலவை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாடசாலை மாணவர்கள் துஷ்பிரயோகிக்கப்படுகின்றனர்

(மட்டக்களப்பு நிருபர்)

பாடசாலை மதில் அமைப்பதற்கு நிதிச் சேகரிப்பு என்று கூறிக்கொண்டு, வளர்ந்த மாணவ மாணவிகள் ஒவ்வொன்றும் 50/= (ஐம்பது) ரூபா கொண்ட டிக்கட் விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். ஒரு மாணவனோ மாணவியோ குறைந்தது ஏழு (07) டிக்கெட்டுக்களையாவது எப்பாடுபட்டும் விற்க வேண்டும் என்று கடிந்து கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். டிக்கட்டுக்களை விற்க மறுக்கும் மாணவர்கள் பழிவாங்கப்படுகிறார்களாம்.

மட்டக்களப்பில் உள்ள மகாவித்தியாலயம் ஒன்றிலேயே மாணவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் இத்தகைய சம்பவம் சமீப நாட்களாக இடம்பெற்று வருகின்றது. இப்பாடசாலையின் 5ஆம் ஆண்டு மாணவர் தொடக்கம் உயர் வகுப்பு மாணவ மாணவியர் வரை டிக்கட் விற்பனை செய்து நிதி வசூலிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

இதனால் டிக்கட்டுக்களை எடுத்துக்கொண்டு வளர்ந்த மாணவ மாணவியர் கடைக்குகடை ஏறியும், வருவோர் போவோரிடம் கெஞ்சியும், வாகனச் சோதனைச் சாவடிகளில் நாளெல்லாம் கால்கடுக்க நின்று இரந்து வேண்டியும் டிக்கெட் விற்பனையிலீடுபடுவதைக் காணமுடிகிறது.

இந்தப் பாடசாலை அதிபரின் தன்னிச்சையான இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆசிரியர்களும் பெற்றோரும் அதிபரின் பழிவாங்கலுக்கு ஆளாவதாகவும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது. இது தவிர தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் பெற்றார் ஆசிரியர் சங்கநிதி என முப்பது ரூபாவும், வசதிக் கட்டணம், பாடசாலை அபிவிருத்திக் கட்டணம் எனப் பல்வேறு விதமாக நிதி சேகரிக்கும் நடவடிக்கையிலேயே அதிபர் கவனஞ்செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாடசாலை மதில் கட்டும் நிதி சேகரிப்பிற்காக ரூபா 50/= கொண்ட மூவாயிரம் டிக்கட்டுக்களை அதிபர் விற்பனைக்கு விட்டுள்ளாராம்.

## அந்தியேட்டிக் கிரியை

பிறப்பு 05 06 1929



இறப்பு 25 03 1997

(திதி - 1998.04.12 இல் நடைபெற்றது)

### வேலாயுதம் நாணு (ஆசாரி)

நாணு எனுமெங்கள் நற்தந்தையே!
ஆலமரம் போல் நிழல் தந்து- எம்மை
ஆளாக்கிவிட்ட தந்தையே!
பரிதவிக்க ஏமைவிட்டு பறந்தோடி மறைந்தனையோ!
குவலயம் உள்ளவரை குளமாகும் எம் கண்கள்.

என்றும் உங்கள் நினைவுடன் ஏங்கிநிற்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: நா. ரங்கநாதன், இத்தாலி.


மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் நிறைவேறாத பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சியும், வெற்றியும் பெறுவதற்கு மட்டக்களப்பு மாந்திரீக சக்தி உதவி புரியும். பரம்பரை வைத்திய நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,
NINTAVUR-21
SRI LANKA.

ஹோமியோபதி

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
Dr. ரா. தியாகராஜன்
D.H.M.S. AMRSH (Lon)
நீரிழிவு, ஆஸ்துமா, தோல் வியாதிகள் போன்ற நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்
தொலைபேசி : 585592 - 581986
19.6.98 - 22.6.98
இந்திய தொலைபேசி: 0091-431 - 432946
0091-431 - 432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம்சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெறுங்கள்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் தொடர்பு கொள்ளலாம். மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுக் சுகமாக்கலாம். உடன் பதில் தேவையானோர் தபால் செலவுக்கு முதற் பணம் அனுப்ப வேண்டும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்துக்கு: கொழும்பில் 5 நாட்கள் மட்டும்.

கொழும்பில் ஜூன் 21 முதல் 25 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P.
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் NO-072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் ஜூலை 2ம் திகதி மட்டும்

Dr முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி T.P.065-57345

கல்முனையில் ஜூலை 4,5

T.M.M. பாமஸி T.P.065-29329

வவுனியாவில் ஜூலை 11,12

வவுனியாவில் (2ஆம் குறுக்குத் தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை Vanni Inn இல் சந்திக்கலாம். T.P.024-22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில்

DR.P.ARUMUGAM,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

வெளி நாட்டு வேலைவாய்ப்புக்கள்

வீட்டுப் பணிப்பெண்கள்

சவூதி அரேபியாவுக்கு முற்றிலும் இலவசம்.
(முஸ்லீம் பணிப்பெண்களுக்கு விஷேட அன்பளிப்புக்கள் உண்டு)

எந்தவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. ஏனைய நாடுகளுக்கு அரசாங்க கட்டணம் மாத்திரம் அறவிடப்படும்.

சவூதி அரேபியா, குவைத், டுபாய், தோஹா கட்டார், லெபனான், ஜோர்தான், ஓமான், பஹரேன், சிங்கப்பூர்

முஸ்லிம் பணிப்பெண்களுக்கு சவூதி அரேபியாவிலுள்ள மக்கா, மதீனா, ஜித்தா போன்ற நகரங்களில் வேலைவாய்ப்புக்கள் உள்ளன. சம்பளம் SR 500

- வீட்டுப் பணிப்பெண்கள்
- வீட்டுச் சாரதிகள் (முஸ்லிம் / முஸ்லிம் அல்லாத)
- டெயிலர் ◆ குக்
- வீட்டுப் பணிப்பெண் / வீட்டுச் சாரதி - ஜோடி
- ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்கள்
- ஜூக்கி மெஷின் இயக்குனர்களுக்கு டுபாயில் வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அரசாங்க கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

உடனடி பயணம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாமல் பெறலாம். தங்குமிட வசதி, வைத்திய வசதி, உணவு என்பன இலவசம். ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பிவர விமானச் சீட்டு வழங்கப்படும். வீட்டுப் பணிப்பெண்களுக்கு போகவர விமானச் சீட்டு வழங்கப்படும். ஒப்பந்த காலம் 2 வருடங்கள். ஏனைய சலுகைகள் அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய வழங்கப்படும்.

பாஸ்போட், அனுபவச்சான்றிதழ் பிரதிகள், பாஸ்போட் அளவிலான 4 புகைப்படங்கள் சகிதம் நேரடியாக வரவும்.

அரப் விங்ஸ் டிரவல்ஸ்
(Arab Wings Travels)
இல.20/14, புளொக் 8-10, சிமொன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10. (சைக்கள் பஸார் / சின்ன பள்ளி அருகில்)
போன்: 678151, 678152, 074-715557, 074-610763
பெக்ஸ்: 074-715557, 446535 App No. AL / 1498 / Advt / 03 / 98
GRAYON

Internet Service Provider, Software Developer
&
Electronic Design and Manufacturer

Ossai™

ஓஸ்ச

Ossai Internet
- Full Internet Access

Ossai Radio
- FM சிறப்பு அலைவரிசை வானொலிப் பெட்டி


இலவச தொலைபேசி தகவல் சேவை
Phone: 416.745.8000

தமிழர்களுக்கான இலவச Internet
Website: www.tamil.org
email: ossai@tamil.org

Ossai Radio
ஓசை வானொலிப் பெட்டி

FM சிறப்பு அலைவரிசை மூலம் ஒலிபரப்பாகும் தமிழ், பஞ்சாபி, சீன ... மற்றும் பல மொழி நிகழ்ச்சிகளை 24 மணி நேரமும் சாதாரண வானொலியில் கேட்டு மகிழ்வதற்கான pocket size வானொலிப் பெட்டி

$79.00 Warranty: 1 Year Parts & 90 Days Labour.



இது Industry Canada வினால் அங்கீகரிக்கப்பட்ட வானொலிப் பெட்டி
Industry Canada Certification #: CAN 2854 102 721.
Patent Pending.

Since 1994
Ossai™
Website: www.ossai.com
email: techdept@ossai.com
Phone: 416.745.7308
416.295.8818
Fax: 416.745.7690

RAMEEZ

Ossai. P.O Box 47673, Toronto, Ontario M9V 5H4, Canada




படிப்பகம்

www.padippakam.com

# தொடர் குண்டுகள்

**நா**டெங்கும் சர்வ சாதாரணமாக குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. மின்மாற்றிகளும், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களும், தொலைத் தொடர்பு கோபுரங்களும்தான் குண்டுகளின் குறி.

**குறைந்தளவே வெடிமருந்துகளுடன் பாரிய நஷ்டங்களை இந்தக் குண்டுகள் ஏற்படுத்தி வருகின்றன.**

பாரிய குண்டுவெடிப்புக்கள், குண்டுத் தாக்குதல்களை கண்டு பழகிவிட்டதால் மின்மாற்றி மற்றும் தொலைத் தொடர்பு நிலைய குண்டுவெடிப்புக்கள் சிறு சம்பவங்கள் போல தெரிகின்றன.

குண்டுவெடிப்பு என்றால் நிலம் அதிரவேண்டும், ஆம்புலன்ஸ் வண்டிகள் ஓடித்திரிய வேண்டும், சேதங்கள் பெரிதாக தெரியவேண்டும் என்றெல்லாம் ஒரு நினைப்பு உருவாகிவிட்டது.

**அந்த நினைப்புத்தான் இன்று அரசாங்கத்தின் இயலாமையை ஓரளவு மறைத்து நிற்கிறது.**

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பமான மின்மாற்றித் தகர்ப்பு, மலையகத்திற்கு பரவி, அங்கிருந்து தென்னிலங்கைக்கும் நீண்டுவிட்டது.

சிறுக சிறுக ஏற்பட்ட இழப்புக்களின் மொத்த நஷ்டம் பல கோடிகளைத் தாண்டும்.

மின்சக்தி அமைச்சரே பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், இன்றைய போர் முனைப்புக்களின் தளநாயகராகவும் இருக்கிறார்.

**ஜெனரல் ரத்வத்தை மின்சக்தி அமைச்சராகவும் இருப்பதால், மின்மாற்றிகளைக் கண்டாலே, அவரைக் கண்டது போல இருக்கிறது புலிகளுக்கு.**

பிரதேச பாகுபாடு இல்லாமல் மின்மாற்றிகளை தகர்த்தெறிகிறார்கள். முதலில் தமிழ்ப் பிரதேசங்களில்தான் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன. பின்னர் முஸ்லிம் பிரதேசங்களில் தகர்க்கப்பட்டன. இப்போது சிங்களப் பகுதிகளிலும் தகர்க்கப்படுகின்றன. அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துவது பிரதான குறி.

**இன்னொரு நோக்கமும் இருக்கிறது: பாதுகாப்புக்காக பெருமளவு ஆட்பலத்தை போர்முனைக்கு அப்பாலும் முடக்கியாக வேண்டிய கட்டாயத்தை அரசுக்கு ஏற்படுத்துவது.**

ஆக, மின்மாற்றி தகர்ப்புகள் அரசுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படுத்துவதுடன், பாதுகாப்பு ரீதியான சவாலாகவும் இருக்கிறது.

ஆனால் அரசாங்கம் இதனை சாதாரண சம்பவம்போல சித்தரிக்கவே விரும்புகிறது. அரச செய்திகளில் போகிற போக்கில் சொல்லிப் போகிறார்கள். ஆனால் சேதங்கள் பாரியவை.

சமீபத்தில் ஜக்கலவில் தகர்க்கப்பட்ட மின்மாற்றி ஒன்றின் பெறுமதி மட்டும் 35 இலட்சம் ரூபாய்கள். மீண்டும் புதிதாக பொருத்தும்போது முன்பைவிட செலவு அதிகமாகும்.

**இந்த ஆண்டில் இதுவரை நாடெங்கும் கிட்டத்தட்ட 20 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வடக்கு-கிழக்குக்கு வெளியே தான் நிகழ்ந்துள்ளன.**

சிறு துளி பெருவெள்ளம் என்பது போல, சிறுக சிறுக பாரிய நஷ்டங்களை ஏற்படுத்துவதுடன், நாடெங்கும் போரின் எதிரொலிகளை கேட்கச் செய்வதற்கும் மின்மாற்றி தகர்ப்புக்கள் புலிகளால் பயன்படுத்தப்படுகின்றன.

**வடக்கு-கிழக்கிலும், கொழும்பிலும், மலையகத்தின் பிரதான இலக்குகள்மீது மட்டும் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்புக்கள் இன்று புலிகளே பிரவேசிக்க முடியாது என்று கருதப்படும் பகுதிகளிலும் நடக்கத் தொடங்கிவிட்டன.**

கொழும்புக்குள் புலிகளை பாதுகாப்புத் தரப்பினர் தேடிக்கொண்டிருக்க, கொழும்புக்கு அப்பாலும் ஊடுருவி அங்கு மின்மாற்றிகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள் புலிகள். தென்னிலங்கையில் பொதுமக்களுக்கு சேதம் இல்லாமல் தாக்குதல் நடத்தும் திட்டம் கதிர்காமத்தில் பஸ்நிலையம் மீதான தாக்குதலுடன் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் கலதாரி ஹொட்டல் மீதான பாரிய குண்டுத் தாக்குதலும், அதனைத் தொடர்ந்து நடந்த குண்டுத் தாக்குதல்களும் பொதுமக்களின் சேதத்தை தவிர்க்கும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பொதுமக்களுக்கும் சேதம் இல்லாமல், அரசுக்கு நஷ்டம் கொடுத்து, அரசின் இயலாமையை வெளிப்படுத்தி, போரின் அதிர்வுகளை தலைநகரையும் தாண்டி சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்லும் புலிகளின் திட்டமாகவும் மின்மாற்றி தகர்ப்புகள் விளங்குகின்றன.**



லெப். கலைச்செல்வன்

மின்மாற்றிகள் குறிவைக்கப்படுவது தெரிந்தும்கூட அவற்றை பாதுகாக்க முடியாத நிலையிலேயே அரசு உள்ளது.

**மின்மாற்றிகளை பாதுகாப்பது என்றால் ஆயுதம் தாங்கிய பொலிசாரையோ, படையினரையோதான் காவலுக்கு நிறுத்தியாக வேண்டும். தற்போதைய நிலையில் அது சாத்தியமான காரியம்தானா?**

வெற்றியில் கண் வைத்திருக்கும் அரசுக்கு மின்மாற்றிகளில் கவனம் செலுத்த நேரம் ஏது?

இதற்கிடையே தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய குண்டுவெடிப்புக்களும் பரவலாக இடம்பெற்றுள்ளன.

இந்த ஆண்டில் களுத்துறையில் இருந்து வடக்கு-கிழக்குக்கு வெளியேயான தொலைத் தொடர்பு நிலைய குண்டுவெடிப்புக்கள் ஆரம்பமாகின.

களுத்துறை என்பதால் அதற்கு காரணம் புலிகளா? இல்லையா? என்று சந்தேகம் எழுந்தது. அரசும், எதிர்க்கட்சியும் ஒருவர்மீது ஒருவர் பரஸ்பரம் சந்தேகம் தெரிவித்தன.

அடுத்த குண்டு குளியாப்பிட்டியில் வெடித்தது. பின்னர் நொச்சியாகமவில் வெடித்தது.

நொச்சியாகம குண்டுவெடிப்புக்கு புலிகளே காரணம் என்று அரசு அறிவித்தது. ஏனைய குண்டுவெடிப்புக்களை இன்னமும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசுக்கு ஐந்து கோணங்களில் சந்தேகம், அவை பின்வருமாறு:

**1. புலிகள் 2. ஜே.வி.பி 3. எதிர்க்கட்சி 4. புலிகளின் பின்னணியோடு பாதாள உலகக் கோஷ்டிகள். 5. தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்கள்.**

குண்டுவெடிப்பு நடந்த தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் சில புலிகள் நடமாட முடியாது என்று கருதப்பட்ட பகுதிகளில் இருந்தமையால் புலிகள் தவிர்ந்த வேறு சக்திகள்மீதும் சந்தேகம் திரும்பியது.

தமிழ் மக்கள் பெருமளவில் இல்லாத பகுதிகளே புலிகள் ஊடுருவ முடியாத பகுதிகள் என்று கருதப்படுகின்றன. தலைநகர் மற்றும் வடக்கு-கிழக்கு எல்லைப் புறங்கள் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட பகுதிகளும் புலிகள் ஊடுருவ முடியாத பகுதிகள் என்று கருதப்படுகின்றன.

**ஆனால் இந்த கருதுகோள்களை வைத்து மட்டும் ஒரு முடிவுக்கு வரமுடியாது. இன்று புலிகளால் ஊடுருவ முடியாத பகுதிகளே நாட்டில் கிடையாது.**

காலிக்குகூட புலிகளின் குண்டுலொறி சென்றிருந்தது. கண்டியில் மையப்பகுதிகளுக்குள் புலிகள் குண்டுலொறி ஊடறுத்தது.

**மிக முக்கியமான விடயம் என்னவென்றால், பெரும் தொகையான தமிழ் இளைஞர்கள் மலையகத்தில் இருந்து புலிகளுடன் சேர்ந்துள்ளனர்.**

**களத்தில் தாக்குதல் பிரிவுத் தலைவர்களாக இருப்பதுடன், கரும்புலிகளாகவும் பலியாகியுள்ளனர்.**

மலையக இளைஞர்கள் கரும்புலிகளாக மாறியது சூரியக்கதிருக்கு எதிரான நடவடிக்கையோடுதான் ஆரம்பமானது.

சூரியக்கதிர் படையினருக்கு எதிராக 1996 அக்டோபர் 29ம் திகதி யாழ்ப்பாணம் அளவெட்டியில் கரும்புலித் தாக்குதல் ஒன்று நடைபெற்றிருந்தது.

அத்தாக்குதலில் பதினொரு கரும் புலிகள் பலியாகினர். அதில் ஒருவர் மலையகத்தைச் சேர்ந்தவர். லெப்டினனட் தரத்தில் இருந்தவர். இயக்கப் பெயர் கலைச்செல்வன் அவிசாவளையைச் சேர்ந்தவர்.

மலையகம் மட்டுமன்றி கொழும்பு புறநகர் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் வன்னியில் களமுனையில் நின்று பலியாகியும் உள்ளனர்.

**எனவே, புலிகளின் நடவடிக்கைகள் மட்டுமன்றி, புலிகள் இயக்க உறுப்பினர்களின் பரம்பலும் வடக்கு-கிழக்குக்கு வெளியேயும் கணிசமானளவு உள்ளன.**

இனரீதியான அணுகுமுறைகள் நாடெங்கும் இருந்து தமிழ் இளைஞர்களை புலிகளை நோக்கி உந்தித் தள்ளுகின்றன.

**மலையகத்தில் கிழக்கு மாகாண எல்லையை அண்டிய பகுதிகளில் மட்டுமல்லாமல் உட்பகுதிகளிலும் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டுள்ளன. இரத்தினபுரியில் தொலைத் தொடர்பு நிலைய பரிவர்த்தனை நிலையத்தில் குண்டுவைக்கப்பட்டது. ஹட்டன் தேயிலை தொழிற்சாலையில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.**

இவற்றையெல்லாம் ஜே.வி.பியுடன் முடிச்சுப்போட முடியுமா? ஏனெனில் ஜே.வி.பி. இப்போதுதான் மறுபடி அமைப்பைக் கட்ட ஆரம்பித்துள்ளனர்.

தம்மை தீவிரவாத சக்திகள், நாசகார சக்திகள் என்று அரசு முத்திரைகுத்தி ஒடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இப்போது வழங்க முன்வரமாட்டார்கள்.

**மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடும் நோக்கம் ஜே.வி.பி.க்கு இருந்தாலும்கூட, அமைப்பை கட்டி முடிக்கும்வரை, சக்தியாக மாறும்வரை தம்மை சட்டத்திற்கு புறம்பானவர்களாக இனம் காட்டக்கூடிய வாய்ப்பை அரசுக்கு வழங்கமாட்டார்கள்.**

"ஜே.வி.பி. மீண்டும் எழுகிறது ஜாக்கிரதை!" என்று ஜனாதிபதி மக்களை எச்சரித்து வருகிறார். ஜே.வி.பி.யின் கடந்தகால ஆயுதம் ஏந்திய தவறான செயற்பாடுகளே அவ்வாறு மக்களை எச்சரிக்க பயன்படுகிறது.

இந்நிலையில் அரசுக்கு தங்களை அமுக்க ஒரு வாய்ப்பைக் கொடுக்க ஜே.வி.பி. துணியுமா? என்பதே கேள்வி.

**எனவே, புலிகள் ஊடுருவ முடியாத பகுதிகள் என்று கருதப்படுவதும் தவறு, அதேபோல ஜே.வி.பி. தற்போதைக்கு தொடர் குண்டு வெடிப்புக்களில் ஈடுபடும் என்று கருதுவதற்கும் வலுவான காரணம் இல்லை.**

ஆனால் தொலைத் தொடர்பு நிலைய குண்டுவெடிப்புக்களும் எப்போதோ எங்கேயோ நடந்த சம்பவமாக இல்லாமல், தொடர்ச்சியாக, ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாக தொடர்கின்றன என்பதையும் கவனிக்க வேண்டும்.

**களுத்துறையில் குண்டு பொருத்தியவரே இரத்தினபுரியில் கொண்டு சென்று பொருத்தியிருக்க முடியாது. ஆனால் குண்டின் எடை, தாக்குதல் முறை எல்லாமே ஒரே விதமாகவே உள்ளன. எனவே அமைப்புரீதியான பலம், தொடர்புகள், அனுபவம் என்பவை இல்லாமல் நடக்கும் காரியமல்ல என்பது தெளிவு.**

எனவே, புலிகள் அல்லது ஜே.வி.பி.தான் இவ்வாறான சீரான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

எதிர்க்கட்சி துணியாது. அரசியல் ரீதியான வாய்ப்புக்களைக்கூட சுறுசுறுப்பாக பயன்படுத்துவதில் ரணில் அக்கறை காட்டவில்லை. அவற்றை பயன்படுத்தி இருந்தாலே இன்று ஆளும் கட்சிக்கு பலத்த சவாலாக மாறியிருக்கலாம். இந்த இலட்சணத்தில் சதி வேலைகளில் ஈடுபடுவர் என்பது நினைத்தே பார்க்க முடியாது.

புலிகளுக்காக பாதாள உலகக் கோஷ்டிகள் செய்யும் காரியமாக இருக்குமோ? என்ற சந்தேகமும் வலுவாக இல்லை.

புலிகள் செய்வதாக இருந்தால் தங்கள் உறுப்பினர்கள் மூலமே நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அளவுக்கு வல்லமையும், உறுப்பினர்களும் உள்ளனர். பாதாளக் கோஷ்டிகளின் உதவிகள் தேவைப்படாது. வேறு சில தேவைகளுக்காக கொழும்பு போன்ற பகுதிகளில் உள்ள சில பாதாளக் கோஷ்டிகளுடன் தொடர்புகளை புலிகள் வைத்திருக்கக்கூடும்.

**எப்படித்தான் சுற்றி சுற்றி வந்தாலும் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய தாக்குதல்களுக்கு புலிகளோ அல்லது ஜே.வி.பியோதான் காரணம் என்ற முடிவிற்கே வந்து சேரவேண்டியுள்ளது. ஆனால் புலிகள் செய்வதற்கான சாதகம்தான் ஜே.வி.பி.யைவிட அதிகமாக உள்ளது.**

மின்மாற்றித் தகர்ப்புக்கள் அவசியம் என்று புலிகள் முன்பு கூறியிருந்தனர். பதுளை மின்மாற்றித் தகர்ப்புக்களின் பின்னர் புலிகள் விடுத்த பிரசுரம் ஒன்றில் தாக்குதல் களம் விரிவாகி வருகிறது, குண்டுகளின் அதிர்வுகள் நாடெங்கும் கேட்கிறது எனக் கூறியிருந்தனர்.

**ஆனால் தொலைத்தொடர்பு நிலைய தாக்குதல் தொடர்பாக இதுவரை சூசகமான அறிவிப்பு எதனையும் புலிகள் வெளியிடவில்லை. மறுப்பும் கூறவில்லை.**

கல்முனையில் தொலைத் தொடர்பு நிலைய பரிவர்த்தனை நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட குண்டு தொடர்பாக புலிகளின் குரல் வானொலி, "அதிரடிப் படைமீது மக்களால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது" என்று அறிவித்தது.

தமது பாதுகாப்பு பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்துக்குள் குண்டு கண்டுபிடிக்கப்பட்டால் அது அங்குள்ள அதிரடிப் படையினருக்குத்தான் 'இமேஜ்' குறையும். தவிர, அதற்கான அவசியமும் எதுவுமில்லை. அங்கு குண்டு வெடித்திருந்தால் புலிகளுக்கு கெட்ட பெயரும் ஏற்பட்டிருக்காது. எனவே, குறிப்பிட்ட குண்டு புலிகளால்தான் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஆனால், தொலைத் தொடர்பு நிலைய குண்டுவெடிப்புக்கள் தொடர்பான குழப்பங்களை வேடிக்கை பார்க்கவே புலிகள் விரும்புகிறார்கள் என்பதையே புலிகளின் செய்தி காட்டுகிறது.

**எப்படியோ மின்மாற்றித் தகர்ப்புகள் போன்று தொடரான திட்டமிட்ட ரீதியிலேயே தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதல்களும் நடக்கின்றன. அனுபவம், துணிச்சல், கட்டுக்கோப்பு, திட்டமிடல் போன்ற பின்னணிகள் இல்லாமல் நீண்ட தொடராக இச் சம்பவங்கள் நடைபெற இயலாது. குண்டோடு விளையாட யார் தான் துணிவர்?**

மின்மாற்றிகள், தொலைத்தொடர்பு நிலைய தாக்குதல்களை அரசு சிறியதாக சித்தரிக்க முற்பட்டாலும்கூட, இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாட்டு நிறுவனங்கள் பல அஞ்சுகின்றன.

இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் சகல செய்திகளையும் கூர்ந்து நோக்குகின்றன. ஒரு ஓரமாக சொல்லப்படும் மின்மாற்றித் தகர்ப்பு, தொலைத் தொடர்பு நிலைய குண்டுவெடிப்பு செய்திகள் அவர்கள் கண்களில் விழாமல் இல்லை.

சமீபத்தில் ஜப்பான் நிறுவனம் ஒன்றும் இங்கு முதலிட தனக்குள்ள அச்சத்தை வெளியிட்டுள்ளது.

**சிறு துளி பெருவெள்ளம் என்பது போல மின்மாற்றித் தாக்குதல்கள், தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதல்களின் ஒட்டுமொத்த விளைவுகள் தாக்கம் உடையவையே.**

நாடெங்கும் புலிகளுக்கு புதிய உறுப்பினர்கள் பலம் பெருகிவருகையில், குறிப்பாக மலையக இளைஞர்கள் புலிகளில் இணைந்திருப்பது வடக்கு-கிழக்குக்கு வெளியே புலிகளின் நடவடிக்கைகள் தங்குதடையின்றி தொடர வழிவகுக்கும்.

வடக்கு-கிழக்கு இளைஞர்களைவிட, மலையக இளைஞர்களுக்கு வடக்கு கிழக்குக்கு வெளியே உள்ள பகுதிகளோடு பரிச்சயம் அதிகம்.

ஆனால் மலையகத்தில் புலிவேட்டை நடக்குமானால், அதன் விளைவுகள்கூட மேலும் புலிகளை நோக்கி இளைஞர்களை தள்ளுவதாகவே இருக்கும். ஆக, எல்லாமே இடியப்பச்சிக்கல்தான். இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காணும்வரை சிக்கல் விடுபடுமா?

நாரதர்

## எட்டாத இலக்கு



**இந்தவாரம் உதைபந்தாட்ட அலசல்: நீங்கள் உதைபந்தாட்ட இரசிகர்கள் என்றால் எந்தெந்த அணி என்று ஊகியுங்கள். விடை கடைசியில்.**

அதுவோ பலம் பொருந்திய அணி. களம் இறங்கிய வேகத்திலேயே வெற்றியை குவிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த நாட்டின் தலைவர்கள் முதல் குடிமக்கள்வரை வெற்றி சுலபம் என்று நம்பிக்கொண்டிருந்தனர்.

மறு அணியும் சிறந்த அணிதான். ஆனால் தன்னோடு மோதும் அணியின் பலம் கொண்டதல்ல. எனவே தற்காப்பு ஆட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் என்று நம்பப்பட்டது.

இரு அணிகளும் களம் இறங்கின. பந்தை 'பாஸ்' பண்ணியபடி பல முனைகளால் 'கோல்' போட எத்தனித்தது பலவானான அணி. பந்து செல்லும் பக்கமெல்லாம் மறு அணியின் வீரர்கள் நின்று தடுத்தாடினர். முதலில் தற்காப்பு ஆட்டம்.

இதோ கோல் போட்டாயிற்று என்று நெருங்கும்போது 'லபக்' என்று பாய்ந்து கோல் கீப்பர் அமுக்கிவிடுவார். மறுபடி பின்வாங்கி தனது எல்லைக் கோட்டுக்கு திரும்பியது பலவான் அணி.

திடீரென்று கிடைத்த வாய்ப்பில் ஒரு கோல் போட்டது பலவான் அணி. அதனால் இனி கோல் போடுவது சுலபம் என்று பலவான் அணி உற்சாகமாக மறு அணியின் எல்லைக் கோட்டுக்குள் புகுந்தது. அது தான் சமயம் என்று திடீரென்று தாக்குதல் ஆட்டம் ஆடியது மறு அணி. பலவான் அணியை தன் எல்லைக் கோட்டுக்குள் இழுத்துவிட்டு, பந்தை பறித்து அவர்களது எல்லைக் கோட்டுக்குள் படுவேகமாக கொண்டு சென்று கோல் போட்டுவிட்டது.

எதிர்பாராத இந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமையால், பலவான் அணியால் கோல் போட முடியவில்லை. பல முனைகள் (இடது, வலது, மத்தி) ஊடாக பந்தை கொண்டு சென்றும் கோல் போட முடியவில்லை.

'கோல்' போட்டுவிட்ட சந்தோசத்தில் தமது அரணை பலப்படுத்திக்கொண்டு தற்காப்பு ஆட்டம் ஆடத் தொடங்கிவிட்டது மறு அணி.

அதனால் பலவான் அணி நினைத்தபடி வெற்றியைப் பெற இயலவில்லை. ஆட்டம் முடிந்தது. யானைக்கும் அடி சறுக்கும்.

இத்தாலிக்கும், சிலிக்கும் இடையே நடைபெற்ற போட்டிதான் அது. பலவான் அணி என்று குறிப்பிட்டது இத்தாலி அணியை.

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாண மாநகரப்*** பொறுப்புக்கள் வேண்டாம். ராஜினாமா செய்யலாம் என்று தேனகத்தின் கூட்டான கட்சி பிரதிநிதிகள் கூறினார்களாம். "முதலில் அவை தமது பதவிகளை ராஜினாமா செய்துபோட்டு கூறட்டும்.கேட்கலாம்" என்று சொல்கிறாராம் புதியவரான பாலகர். சிவ சிவா.

**கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள** பிரியாணி கடை ஒன்றில் ஞானப்பால் உண்டவரின் பெயர் கொண்ட வெகுஜன பிரதிநிதி பிரியாணி வாங்கிக்கொண்டிருந்தவராம். அவரைக் கண்ட ஒருவர் தனது மறைவிடத்திற்கு சென்று தேவையானதை எடுத்துக் கொண்டு வரவும், பிரதிநிதியின் கார் கிளம்பவும் சரியாக இருந்ததாம். குறிப்பிட்ட இளைஞர் வேகமாக ஓடியதையும் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்த வேகத்தையும் குறிப்பிட்ட கடையில் உள்ள சிலர் கவனித்தவையாம். பின்னர்தான் காரில் வந்து போனவர் இன்னார்தான் என்று தெரிந்ததாம். மனுசனுக்கு நல்ல அதிஷ்டம் என்று முணுமுணுத்துக் கொண்டினமாம்.

***அயலகப் பிரதமரைச்*** சந்தித்து தமிழக கட்சிகள் நம் நாட்டு விவகாரத்தை பேசியதை இங்குள்ள கட்சிகள் வரவேற்றிருக்கினம். அரச தரப்பும், எதிர்த்தரப்பும் ஒன்று சேர்ந்து அதனை கண்டித்தது மட்டும் இவையின் காதில் விழவில்லையோ? பார்த்தியளோ எந்தெந்த விஷயங்களில் இரண்டு தரப்பும் ஒன்றுபட்ட பொலிசியில் இருக்கினம் எண்டு. இவை ஒன்றுபட்டு நின்றால் என்னாகும் எண்டு புரியுதல்லோ. இவையைத்தான் கைகுலுக்க வைக்க சில டமில் கட்சிகள் ஒற்றைக்காலில் நிற்கினம்.

***வவுனியாவில் கழக*** வெகுஜனப் பிரதிநிதி இல்லத் தாக்குதல் விடயத்தில் 'உள் பிரச்சனை' என்று சனம் கதைக்குது. ஆனால் அதில் உண்மையில்லை என்று நம்பகமாகத் தெரிகிறது. ஆனால் ரெண்டு எழுத்தார்தான் கைவரிசை காட்டியிருக்கினம். அதற்கு முன்னர் கிளைமோர் விவகாரம் உள்வேலைதான். அதன்பின்னர் பல சம்பவங்கள் நடந்திருக்குது. கொழும்பில் உள்ள கழக அலுவலகம் முடப்பட்டுள்ளது. கிளைமோர் சம்பவம் பற்றி மகிழ்ச்சியோடு கதைத்தனர் என்று கூறியே ஒரு சாரார் மறுசாராரை தாக்கியதில் ஒருவர் ஆபத்தான நிலையில் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாராம். அதன் பின்னர்தான் அலுவலகம் முடப்பட்டதாம். ஆனால் விஷயம் என்னவென்றால் உள்வேலைக்கு காரணமான ஆட்களை தலைமையில் உள்ள எவருக்குமே தெரியாது. வெளி உதவி ஒன்றுடன்தான் வித்தை காட்டினவையாம்.

***கிழக்கின்*** இரண்டு எழுத்து தளபதி கருணையானவர் தற்போது வன்னியில் நிக்கிறார் அல்லோ. யாழ் மாநகர பிதா விஷயத்திற்கு தாம் காரணமல்ல என்று அவர் தகவல் அனுப்பியதாக கிழக்கின் சிங்கத்தார் கூட்டான கட்சிக்குள் கூறியிருக்கிறாராம். அப்படியானால் சிங்கத்தாரை அவை நம்பவில்லை எண்டல்லோ அர்த்தமாகுது.

***கள நிலவரம்*** அறிவதில் எதிரணித் தலைவர் மிக அக்கறை காட்டுகிறாராம். வெகுஜன சபையில் தமிழ்ப் பிரதிநிதிகளை கண்டால் 'ஸ்கோர்' தெரியுமோ என்று அறிவதில்தான் குறியாக இருந்தாராம். எல்லாம் ஒரு நோக்கத்தோடுதான்.

***அரச தொலைக் காட்சிகள்தான்*** தமிழைச் சாப்பிடுவதில் பசியோடு இருக்கினம் என்றால், எம்.டி.வியும் சாப்பிடலாமோ? தமிழில் அதிக நேரம் நிகழ்ச்சிகள் தருகினம். அதை மறுக்கேல்லை. ஆனால் எம்.டி.வியை 'சிரச' என்று மாற்றும்போது தமிழிலும் 'சிரச' என்று குறிப்பிட்டிருக்கலாம். அல்லது முன்னர்போல பொது மொழியான ஆங்கிலத்திலேயே பெயர் பொறித்திருக்கலாம். ஒரே நாடு, ஒரே மக்கள் இப்படித்தான் இருக்கும் என்று மிரட்டிக் கொண்டிருப்பதே தொலைக் காட்சிகள் தானுங்கோ.

***'கற்பகம்' பனம் பொருள்*** கூட்டுத்தாபன முன்னாள் தலைவரை அம்பலமாக்கியது 'முரசு' மட்டும்தான். ஆனால் இப்போது என்ன கதை தெரியுமோ? முந்தி இருந்தவர் பசியாறினாலும் 'கற்பகம்' கலகலப்பாக இருந்தது. முன்னேற்றமும் இருந்தது. இப்ப பொருட்களும் இல்லை. முன்னேற்றமும் இல்லையாம். இப்ப இருக்கிற தலைவர் பற்றியும் பல தகவல்கள் வெளியாகத் தொடங்கியுள்ளது. கற்பகத்தின் நிலைஅபாக்கியமாகலாமோ? நாதா?

**இவ்வாரப் பொன்மொழி.** உபயம் ம.பொ.சி.

> **"அறிவு இருப்பவர்களிடையே வேறுபாடு இருப்பது இயற்கை. அவர்களுக்கு அறிவு இருக்கிறது என்பதற்கு அதுவே அடையாளம்!"**


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

186

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

திருமதி ரஜினி திரணகம கொலை தொடர்பாக இத் தொடரில் வெளியான தகவலை ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழு உறுப்பினர் சுபத்திரன் மறுத்திருந்தார். நாமும் அதனை வெளியிட்டிருந்தோம்.

ஆனால், பின்னர் தமது பிரசுரத்தில் தமது ஊகங்களையெல்லாம் வெளியிட்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வசைபாடியிருப்பதை சமீபத்தில் கண்ணுற்றோம்.

நாமும் அதே பாணியில் விமர்சிப்பது முரசின் தரத்துக்கு ஏற்றதல்ல.

**ரஜினி திரணகம கொலை தொடர்பாக முதலில் புலிகள்மீதே சந்தேகம் இருந்தது உண்மை. உண்மையைச் சொல்லப்போனால் எனக்கேகூட புலிகள்தான் காரணம் என்ற கருத்தே இருந்தது.**

பின்னர் கிடைத்த தகவல்களை வைத்தே எனது கருத்தும் மாறியது. எனினும் அக் கொலைக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமைக்கும் சம்பந்தம் இருப்பதை நம்பக்கூடிய தகவல்கள் இல்லை என்பதால் அதனையும் குறிப்பிடத் தவறவில்லை.

**ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமை மீது வேண்டுமென்றே குற்றம் சாட்ட நினைத்திருந்தால் அதனை குறிப்பிட்டிருக்கத் தேவையில்லை. அந்த இயக்கத்தின் யாழ் தளபதியாக இருந்த ரவிச்சங்கரையே (ராபீக்) முக்கிய சூத்திரதாரியாக கூறியிருந்ததோடு, அவர் தற்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன்.**

அதுதவிர, இத்தொடரில் எந்த இடத்திலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் இன்றைய தலைமையை குறைகூறவில்லை என்பதோடு, இன்று தலைமையிலுள்ள முக்கியமான சிலரது பங்களிப்புக்களை மறக்காமல் மறைக்காமல் குறிப்பிடப்பட்டுள்ளன.

இன்று தலைமையில் உள்ளோருக்கு இந்தியப் படை கால கொடூரங்களோடு பெரிய தொடர்பில்லை, இவற்றை கட்டுப்படுத்தக் கூடிய பொறுப்புக்களில் அவர்கள் அன்றிருக்கவில்லை என்றும் முன்னரே தொடரில் குறிப்பிட்டிருந்தேன்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புமீது கோபம் என்றால் இன்றைய தலைமையை அல்லவா சாடி சம்பந்தப்படுத்தி இருக்க வேண்டும். சாடாவிட்டால்கூட இவர்களுக்கு தொடர்பில்லை என்று குறிப்பிடாமல் என்றாலும் இருந்திருப்போமே. அவ்வாறு செய்வதுதானே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பை பலவீனமாக்க உதவும்.

**ரஜினி திரணகம கொலை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக சுபத்திரன் விடுத்த மறுப்பறிக்கையை வெளியிட்டபோதே பதிலையும் இணைத்து வெளியிட்டிருக்கலாம். நாம் எமக்கு கிடைத்த தகவலை வெளியிட்டுள்ளோம். அவர்கள் தங்கள் மறுப்பை கண்ணியமாக தந்துள்ளனர் என்று கருதி அதனை வெளியிட்டதோடு நிறுத்திக் கொண்டோம்.**

இந்தியப் படை காலத்தில் தான் பொறுப்பு வகித்த பகுதியில் நியாயமாக நடந்து கொண்டவர் சுபத்திரன் என்பதை இத் தொடரின் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆகவே சுபத்திரனின் மறுப்புக்கு உரிய இடம் தரப்பட்டிருந்தது.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் மிக மோசமான வார்த்தைப் பிரயோகங்களுடன் கருத்து வெளியிடப்பட்டதாலேயே மீண்டும் நாம் ரஜினி திரணகம விடயத்துக்கு செல்ல வேண்டியுள்ளது.

## நிரூபிக்கட்டும்

தமது பிரசுரத்தில் ரஜினி திரணகம கொலை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். வெளியிட்டுள்ள தகவல்கள் உண்மைக்கு மாறாக இருப்பதால், மேலும் அவர்கள் மீது சந்தேகம் உறுதியாகிறதே தவிர குறையவில்லை.

**இன்றைய தலைமையும் எவ்வகையிலும் முன்னைய தலைமைக்கு தாழ்ந்ததல்ல. தற்போது பல்லுப் பிடுங்கப்பட்ட நிலையில்தான் 'ஜனநாயகம்' பேசுகின்றனர், தவறுக்கு மன்னிப்பு கோருகின்றனர் என்று கருதவேண்டியுள்ளது.**

ரஜினி திரணகம கொலையில் நேரடியாக பங்கெடுத்தவர் கார்த்திக். இவர் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பிலிருந்து வெளியேறினார். திருமலையில் தனிப்பட்ட தகராறு ஒன்றில் கொலைப்பட்டார் எனக் கூறியிருந்தோம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தனது மறுப்பில் 'கார்த்திக் ஈ.பி.டி.பியால் கொல்லப்பட்டார்' என்று தெரிவித்துள்ளது. அது தவிர ரஜினி கொலைக்கு செல்வக்குமார் என்பவர் காரணமாக இருந்ததாக ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் ஆகியோர் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**கார்த்திக் காதலித்த பெண்ணின் சகோதரர்களே அவரை வெட்டிக் கொன்றனர். அது தொடர்பாக திருமலை பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது. கார்த்திக்கின் சகோதரரும், முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினராகவும் இருந்த ஹீற்றர் என்பவரே அதற்கு சாட்சியாகவும் உள்ளார்.**

செல்வக்குமார் என்பவரும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் மண்டையன் குழுவில் இருந்தவர்தான். ராபிக், கார்த்திக் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டவர் பின்னர் ஈ.பி.டி.பியில் இணைந்து விலகியவர்.

**ஆனால் குறிப்பிட்ட செல்வகுமார் ரஜினி திரணகமவைச் சுட்டதாக சர்வதேச மன்னிப்பு சபைக்கு தெரிவிக்கவே இல்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறியுள்ளனர். அது தவறு என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆதாரத்தோடு நிரூபிக்குமானால் வெளியிடத் தயாராக உள்ளோம். சர்வதேச மன்னிப்புச் சபையிடம் ஆவணங்கள் பெறுவது கடினமல்ல. எனவே ஆதாரம் இருந்தால் பெற்றுத் தரலாம்.**

## 'ரஜினி கொலை'



ரஜினி திரணகம

# புலிகள் வெளியிட்ட தகவல்கள்!

## மறுப்பு விடவில்லையா?

அடுத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறியுள்ள காரணம்தான் பலத்த சந்தேகத்தை தருகிறது. **"ரஜினி கொலையில் தமக்கு தொடர்பில்லை என்று புலிகளே மறுக்கவில்லை"** என்று கூறப்பட்டுள்ளது.

புலிகளின் மறுப்போ, ஏற்போ இத் தொடருக்கு முக்கியத்துவம் அல்ல. உதாரணமாக கூறுவதானால், புலிகளால் உடன் மறுக்கப்பட்ட அமிர் கொலை, அரச அதிபர் பஞ்சலிங்கம் கொலை போன்றவை புலிகளாலேயே செய்யப்பட்டன என்பதை போதிய தகவல்களோடு இத் தொடரில் வெளியிட்டுள்ளோம்.

**ஆனால், ரஜினி திரணகம கொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் மறுத்திருந்தனர்.**

வழக்கமாக புலிகள் தாம் செய்யும் சில நடவடிக்கைகளை மறுக்கும் அவசியம் ஏற்பட்டால் மறுப்பதோடு நிறுத்திக் கொள்வார்கள், வேறு யார்மீதும் குறிப்பிட்டு குற்றம் சாட்டுவதில்லை.

**ரஜினி திரணகம கொலை விவகாரத்தில் மட்டும்தான் புலிகள் மறுப்பு வெளியிட்டதோடு, ஈ.பி.ஆர்.எல்.எஃப்.மீதும் நேரடியாக காரண காரியங்களும் கூறி குற்றம் சாட்டியிருந்தனர்.**

அது எப்படி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு தெரியாமல் போனது. மிக முக்கியமான ஒரு விவகாரத்தில் புலிகள் தம்மீது குற்றம் சாட்டியதைக்கூட தெரியாதளவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இருந்திருக்க முடியாது.

மிக அப்பட்டமான இந்த உண்மையை மறுத்திருப்பது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் தமது பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ள மறுப்பில் உள்ள ஏனைய விடயங்கள் எத்தகையவை என்பது பற்றி மட்டுமல்லாமல், ரஜினி திரணகம கொலை தொடர்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். அன்றைய தலைமைக்கு மட்டுமன்றி, இன்று தலைமையில் உள்ள சிலருக்கும் தெரிந்திருந்ததோ என்ற சந்தேகத்தையும் வலுப்படுத்துகிறது.

## புலிகளின் அறிக்கை

'விடுதலைப் புலிகள்' புரட்டாதி 1989 இதழில் ரஜினி திரணகம கொலை தொடர்பாக வெளியான அறிக்கையின் முக்கிய பகுதிகளை கீழே தருகிறோம்: பல புதிய தகவல்கள் அதில் கூறப்படுகின்றன.

"யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட உடற் கூற்றியல் துணைத் தலைவி கலாநிதி ரஜினி திரணகம 22.09.1989 அன்று திருநெல்வேலியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழீழப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் நெருங்கிய உறவினராக ரஜினி இருந்தும், தமிழ்ப் பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுத்ததும் அவரது கொலையை சர்ச்சைக்குரியதாக மாற்றிவிட்டது.

**படுகொலையைச் செய்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் முதல்வர் வரதராஜப் பெருமாள் முதல், அவ்வியக்கத்தின் கடல் கடந்த ஊதுகுழல் வரை இதனைத் திரித்து விடுதலைப் புலிகள்மீது பழியைப் போட்டுள்ளனர்.**

இச் சம்பவத்தின் பின்னணி என்ன?

ரஜினி முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான நிர்மலா நித்தியானந்தனின் தங்கையும், 'விகல்ப கந்தாயம்' என்ற சிங்கள முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்த தயாபால திரணகமவின் துணைவியுமாவர்.

நிர்மலா 1985ல் விடுதலைப் புலிகளுடன் கருத்து வேற்றுமைப்பட்டாலும், அவரது குடும்பத்தவர் யாழ் நகரிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றனர்.

இவரது தந்தையார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உப அதிபராக கடமையாற்றி வருகிறார். ரஜினியும் இலண்டனில் P.H.D. முடித்துக்கொண்டு யாழ் நகர் வந்து கடமையாற்றினார்.

நிர்மலா இயக்கத்தை விட்டு வெளியேறினாலும் அவரது குடும்பத்தினருக்கு எவ்வித இடையூறும் விடுதலைப் புலிகளால் செய்யப்படவில்லை.

## சதி வழக்கு

ரஜினியின் கணவரான தயாபால திரணகம புவியியல் விரிவுரையாளர் தயான் ஜயத்திலக தலைமையிலான 'விகல்ப கந்தாயம்' என்ற முற்போக்கு அமைப்பின் உறுப்பினர்.

**இந்த அமைப்பு தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். உடன் ஒரு காலகட்டத்தில் நெருங்கிய உறவு வைத்திருந்தது. 1986ம் ஆண்டு இக் குழுமீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.**

தயாபால திரணகம தலைமறைவானார். நீதிமன்றத்தில் சதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது தயான் ஜயத்திலக, பத்மநாபா ஆகியோர் எதிரிகளாகக் கருதப்பட்டனர்.

1988ல் நடைபெற்ற போலி மகாணா சபைத் தேர்தலை அடுத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். மந்திரி சபையில் தயான் ஜயத்திலக அமைச்சரானார்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இந்தியாவின் அடிவருடியாகச் செயற்படுவதை தயான் ஜயத்திலக விரும்பவில்லை.

**இந்தியப் படைகளதும், ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கத்தினதும் மக்கள் விரோத, மனித உரிமை மீறல் செயற்பாடுகளையொட்டி 'விகல்ப கந்தாயம்' விற்குள் பிளவு உண்டானது.**

தயால் ஜயதிலக, திரணகம ஆகியோர் இந்திய நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஜோ. செனிவிரத்ன போன்றோர் ஆதரவாயும் செயற்பட்டனர்.

**தயான் ஜயதிலக ஈ.பி.ஆர்.எல்.எஃப். சபையைவிட்டு வெளியேற, ஜோ. செனிவிரத்ன அமைச்சரானார். ரஜினியின் கணவரான திரணகம தனது முன்னாள் ஈ.பி.ஆர். எல்.எஃப். நண்பர்களுடன் அந்நியமானார்.**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் அடாவடிச் செயல்கள் அதிகரிக்க அதிகரிக்க திரணகம, ரஜினி தம்பதி ஈ.பி.ஆர்.எல்.எஃப். புடன் அந்நியமாதல் அதிகரித்துக் கொண்டே போனது.

## முரண்பட்டார்

இந்தியப் படையின் வருகையும் அதையொட்டிய படுகொலைகளும் ரஜினி போன்ற ஒரு சில தமிழீழ புத்திஜீவிகளை மனித உரிமைக் குரல் கொடுக்க வைத்தது.

இந்தியப் படையின் ஆரம்பகால நடவடிக்கையின்போது பிரிகேடியர் மஞ்ஜித் சிங்குடன் ரஜினி காரசாரமாக பகிரங்க கருத்து மோதலில் ஈடுபட்டதும், அவர் தனது வாகனத்தில் வருமாறு கேட்டபோது, 'நான் நடந்தே வருவேன்' என்று கூறி அலுவலகம் சென்று தனது கருத்துக்களை வலியுறுத்தியதும் யாழ் பல்கலைக்கழக வட்டாரங்களில் ரஜினியின் மதிப்பை உயர்த்தியது.

சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், பெண் விடுதலை அமைப்புக்கள் போன்றவற்றுடன் ரஜினிக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது.

ரஜினியும் மற்றும் நாலுபேரும் இணைந்து வெளியிட்ட 'முறிந்த பனை' என்ற நூலில் இந்தியப் படைகளின் அத்துமீறல்கள் பெருமளவு சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அதனால் ஆத்திரமடைந்த இந்தியப் படையினர் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்த கணிதவியல் விரிவுரையாளரைத் தாக்கினர். இந்தச் செய்தியும் பகிரங்கப்படுத்தப்பட்டது.

இதனால் அவதானமாக செயற்பட்ட இந்தியப் படையினர் தாம் நேரடியாக முரண்படாமல் தமது வளர்ப்பு பிராணிகள் மூலம் பணியைத் தொடர்ந்தனர்.

**கடந்த மாதம் ரஜினி இலண்டனில் இருந்தபோது அவரது நாவலர்வீதி வீட்டுக்கு இரண்டு தடவைகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர்கள் சென்று அவருடைய ஆவணங்களை, அதாவது மனித உரிமை மீறல் பற்றிய தகவல்களை அபகரித்துச் சென்றனர்.**

இதனால் ரஜினியை "திரும்பி வர வேண்டாம்" என்று பல நண்பர்கள் உறவினர்கள் எச்சரித்தபோதும் பிறந்த மண்ணுக்கும், தமிழீழ மண்ணுக்கும் சேவையாற்றவே அவர் மீண்டும் வந்தார்.

**யாழ் நகரில் இருந்து அவர் இலண்டனுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் 'The Local army chief to trying to trap me" (உள்ளூர் இராணுவ அதிகாரி என்னை மாட்டிவைக்கப் பார்க் கிறார்) என்று எழுதியிருந்தார்.**

நாடு திரும்பிய சிலவாரங்களில் அவர் கொல்லப்பட்டுள்ளார். கடமை முடிந்து வீடு திரும்பும்போது இனம் தெரியாத ஆயுதபாணிகள் அவரைச் சுட்டுக் கொன்று விட்டனர் என்பது வெளியான செய்தி.

அந்த இனம் தெரியாத நபர்கள் யார் என்பதையும், எந்தப் பின்னணியில் இப்படுகொலை நடந்தது என்பதும் யாழ்ப்பாண மக்களுக்கு தெரியும்.

## வரதன் கூறியது

திருக்கோணமலையில் வரதராஜப் பெருமாள் இக் கொலையை விடுதலைப் புலிகள்தான் செய்தனர் என்று கூறியிருக்கிறார். இந்தியப் பிரசார இயந்திரங்களும் இதேவிதமான கதையைப் பரப்பி வருகின்றன.

**'தியாகி திலீபனது உடலைக்கேட்டு விடுதலைப் புலிகள் சென்றதாகவும், தமது பொறுப்பில் இருந்த உடலைக் கொடுக்க ரஜினி மறுத்ததாகவும், அந்த பிரச்சனையின் எதிரொலியாகவே ரஜினியை புலிகள் சுட்டுக் கொன்றனர்' என்றும் வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார்.**

திரு. பிரபாகரன் இறந்துவிட்டார், வல்வெட்டித்துறையில் அஞ்சலி செய்யப்படுகிறது என்ற பொய்யுரைகளை கூறி மூக்குடைபட்டு மெய்யா மொழி என்ற பட்டம் வாங்கியவர் வரதராஜப் பெருமாள்.

அவரது பொய்யினை தமிழீழ மக்கள் நம்பாவிட்டாலும்கூட, தமக்கே தெரியாமல் ஒரு உண்மையை வெளியிட்டுவிட்டார்.

தியாகி திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டித்தால் கொலை விழும் என்று இந்தியப் படையும், ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும் தமிழீழ மக்களை பயமுறுத்தியும் மிரட்டியும் வருகின்றன.

**பல்கலைழக் கழகத்தில் உள்ள திலீபன் உடலை திலீபன் விருப்பப்படி புலிகளே ஒப்படைத்தனர். தாமே ஒப் படைத்த உடலை புலிகள் ஏன் மீளப்பெற பிரச்சனைப்பட வேண்டும்?**

எனவே, புலிகள் கையளித்த உடலை ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுவினரே பறிமுதல் செய்ய முயற்சித்துள்ளனர்.

புனிதமாகக் கருதப்படும் திலீபன் உடலை அபகரித்தால், நினைவு நாள் குழம்பும், புலிகள் ஆத்திர மடைந்து யுத்த நிறுத்தத்தை மீறுவார்கள் என்று திட்டமிட்டிருக்கலாம்.

**திலீபனுக்கு அஞ்சலி செய்யும் துக்க நாளன்று ரஜினிக்கும் அஞ்சலி செய்யுமாறு ஈ.பி.ஆர்.எல்.எஃப். கேட்டுக் கொண்டதும் சந்தேகத்தை வலுப்படுத்துகிறது" என்று 'விடுதலைப் புலிகள்' தெரிவித்திருந்தது.**


# ராஜினியின் மரணம்

யாழ்ப்பாணப் பலகலைக்கலக மருத்துவ பீட உடற் கூற்றியல் துறைத் தலைவி கலாநிதி ராஜினி திரணகமை 21-09-1989 அன்று திருநெல்வேலியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தமிழ்ழப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் நெருங்கிய உறவினராக ராஜினி இருந்ததும் 'தமிழ் பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறுவதை எதிர்த்து குரல் கொடுத்ததும் இவரது கொலையை சர்ச்சைக்குரிய சம்பவமாக மாற்றிவிட்டது. படு கோலையைச் செய்த EPRLF இயக்கத்தின் முதல்வர் வரதராஜபெருமாள் முதல் அவ்வியக்கத்தின் கடல் கடந்த ஊதுகுழல் வரை இதனைத் திரித்து விடுதலைப்புலிகள் மீது பழியைப்போடுவது' இச்சம்பவத்தை மேலும் பிரச்சனைக்குரியதாக ஆக்கிவிட்டது. இச்சம்பவத்தின் பின்னனி என்ன?]

ராஜினி முன்னாள் விடுதலைப்புலி இயக்க உறுப்பினரான நிர்மலா நித்தியானந்தனின் தங்கையும் 'விகல்ப, கந்தாயம" என்ற சிங்கள ...

... குறிப்பிடப்பட்டனர். 198[illegible] நடைபெற்ற போ[illegible] மாகாணசபைத் தேர்த[illegible] அடுத்து EPRLF மந்திரிச்சபையி[illegible] தயான் ஜயதில[illegible] அமைச்சரானார். ஆனால் EPR[illegible] இந்தியாவின் அடிவருடிகளா[illegible] செயற்படுவதை தயான ஜயதில[illegible] விரும்பவில்லை. இந்தியப்படைகளின் EPRL[illegible] இனரின் மக்கள் விரோத, மனி[illegible] உரிமை மீறல் செயல்களையொட்டி விகல[illegible] கந்தாயமவில் பிள[illegible] உண்டானது. ஜயதில[illegible] திரணகமை போன்றோர் இந்[illegible] நடவடிக்கைகளுக்கு எதிராகவும் ஜே[illegible] சேனிவரெத்தின போன்றோ[illegible] ஆதரவாயும் செயல்பட்டனர். ஜயதிலக EPRLF அரசை விட்[illegible] வெளியேற சேனிவரெத்தின் மாகாணசபை அமைச்சரானார். ராஜினியின் கணவரான திரணகமையும் தனது முன்னாள் EPRLF நண்பர்களுடன் அன்னியமானார். EPRLF வினரின் அடாவடிச் செயல்கள் அதிகரிக்க அதிகரிக்க திரணகமை - ராஜினி ...

'விடுதலைப் புலிகளி'ல் வெளியானது

## முக்கிய பாத்திரம்

இத் தொடரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றி குறிப்பிட்டபோது, ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றியே எழுதுகிறீர்களே, வேறு இயக்கங்கள் கிடையாதா? என்று அந்த இயக்க நண்பர்கள் சிலர் கேட்டிருந்தனர்.

**இந்தியப் படை காலத்தில் மிக முக்கிய பாத்திரம் வகித்த ஒரு அமைப்பு ஈ.பி.ஆர்.எல்.எஃப்.**

இந்தியப் படை காலத்தில் இந்தியப் படை, புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய மூன்று சக்திகள்தான் வடக்கு-கிழக்கில் அரசியல், இராணுவ நிகழ்வுகளில் பிரதான பாத்திரங்களாக இருந்தனர்.

இந்தியப் படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மேற்கொண்ட படுகொலைகள் அதற்கு முன் எந்தவொரு அமைப்பாலும் செய்யப்படாதளவுக்கு பாரியதாக இருந்தன.

கட்டுப்பாடு இன்றி தன்னிச்சையாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் நடத்திய அத்துமீறல்கள் எத்தகையது என்பதை வடக்கு-கிழக்கு மக்கள் நன்கு அறிவர்.

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் "தவறுகளுக்கு வருந்துகிறோம்" என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறியது. அப்போது அரியாலை தனியார் கல்வி நிலையத்தில் மாணவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த ஈ.பி.ஆர். எல்.எஃப். செயலதிபர் சுரேஸ் "என்னால் அப்போது எதுவும் செய்ய முடியவில்லை. பிழைகள் நடந்தன தான்" என்று ஒப்புக் கொண்டிருந்தார். அவ்வாறு தவறுகளை ஒப்புக்கொண்டதை முரசும் பாராட்டி இருந்தது.

**எனவே, இந்தியப் படை காலம் பற்றி எழுதும்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் பங்கு தொடர்பாக எழுதாமல் விட்டிருக்க முடியாது.**

**அதனால்தான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பற்றி குறிப்பிடப்பட்டதேயல்லாமல், தம்மை மாபெரும் சக்தியாக கருதி தம்மை பலவீனப்படுத்த எழுதப்பட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் நினைப்பது, கொஞ்சம் அதிகமான தற்பெருமையே அல்லாமல் வேறல்ல.**

## கடைசிக் கட்டம்

பிரேமதாசா அரசுக்கும் புலிகளுக்கும் இடையே போர் மூளக் காரணமான கடைசிக் கட்டம் பற்றியும், அதன் பின்னரான நிகழ்வுகள் பற்றியும் அடுத்தவாரம் கூறுகிறேன்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# குண்டு வீச்சும் கொடூர மெளனமும்

## அலசுவது- இராஜதந்திரி

**போர்**முனைச் செய்திகளுக்கான பத்திரிகைத் தணிக்கை என்பது, பொதுமக்கள் மீதான தாக்குதலை மறைக்கும் இரும்புத்திரையாகவும் திகழும் என்பது எதிர்பார்க்கப்பட்டதேயாகும்.

**கிளிநொச்சியில் போர்முனைக்கு அப்பாலுள்ள சுதந்திரபுரம் கிராமத்தில் குண்டுவீச்சு இடம்பெற்றுள்ளது. 25 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். 50ற்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.**

பாராளுமன்றத்தில் இத் தகவல்களை ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. வெளியிட்டபோது யாரும் வருதப்பட்டதாகவோ, அதிர்ச்சியடைந்ததாகவோ தெரியவரவில்லை.

**ஆட்சியாளர்கள் மட்டுமல்லாமல், ஏனைய தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக கொடூரமான மெளனம் அனுஷ்டித்துள்ளதையே அவதானிக்க முடிகிறது.**

திரு. ஜோசப் பரராஜசிங்கத்தின் கருத்துக்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்துக்களாகவோ, அக் கட்சியின் நடவடிக்கைகளாகவோ நோக்க முடியாதுள்ளது.

**அவசரகால சட்டப் பிரேரணை நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய கூட்டணி செயலதிபர் இரா. சம்பந்தன் யுத்தத்தை கண்டிப்பது போல பேசியிருந்தாலும்கூட, யுத்தத்தின் நோக்கத்தை அரசின் விருப்பப்படியே விபரித்திருந்தார்.**

"பாதைத் திறப்புக்கான யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது" என்றே இரா.சம்பந்தன் வியாக்கியானம் செய்திருந்தார்.

இதன்மூலம் அரசின் அரசியல் இராணுவ நோக்கங்களுக்கு வெள்ளையடித்திருந்தார்.

**அதுமட்டுமன்றி அரசின் அரைகுறைத் தீர்வுப்பொதியை தமிழ் பேசும் மக்களின் தலையில் திணிக்கும் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியின் ஆதரவை பெற்றுக்கொடுப்பதற்கும், அவ்வாறு செய்ய முடியாவிட்டால்,எதிர்க்கட்சியை சாட அரசுக்கு வழிவகை செய்து கொடுப்பதிலுமே இரா.சம்பந்தன், நீலன் திருச்செல்வம் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.**

இவர்கள் இருவருமே ஜோசப் பரராஜசிங்கம் போன்றோரின் தோளில் ஏறி பாராளுமன்றப் பிரவேசம் செய்தவர்களேயாவர். இன்றைய அரைகுறை ஜனநாயக வரையறைக்குள்கூட இவர்களால் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை.

**அவ்வாறு இருந்தும் இன்றைய முக்கியமான காலகட்டத்தில் இவர்கள் இருவரும் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை தாரைவார்க்கும் விதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

தமிழ் பேசும் தரப்பின் கழுத்துக்கு வீசப்படும் சுருக்குக் கயிற்றை சரியாக விழவைக்க அயராது பாடுபடும் இரட்டையர்களாகவே இவர்கள் மாறியுள்ளனர். தமது நிலைப்பாட்டையே கூட்டணியின் நிலைப்பாடாகவும் இவர்கள் வியாக்கியானம் செய்கின்றனர்.

எனினும், இரா. சம்பந்தன், நீலன் திருச்செல்வம் போன்றோரின் நடவடிக்கைகளில் பங்கெடுக்காமல் மட்டக்களப்பு மாவட்ட பா.உக்கள் ஒதுங்கி வருவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஜோசப் பரராஜசிங்கம் தொடர்பாக எத்தகைய விமர்சனங்கள் இருப்பினும் இரா.சம்பந்தன், நீலன் திருச்செல்வம் போன்றோருடன் ஒப்பிடும்போது சிறந்தவராகவே விளங்குகிறார்.

**பாராளுமன்றத்தில் உரிமைகள் கிடைக்கப்போவதும் இல்லை. தீர்வுகளுக்கான வழி திறக்கப்போவதும் இல்லை என்பது தெளிவானது. பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகள் செவிடன் காதில் ஊதிய சங்கு என்பது கடந்த 50 வருடகாலத்தில் அனுபவபூர்வமாக அறியப்பட்டதேயாகும்.**

பாராளுமன்றத்தையும், அதன்மூலம் பெறும் பதவிகளின் ஊடாக கிடைக்கும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி சில காரியங்களை செய்யலாம்.

உதாரணமாக, தற்போது பத்திரிகை தணிக்கை இருப்பதால், குண்டுவீச்சால் பொதுமக்கள் பலியாகும் சம்பவங்களை பத்திரிகைகள் நேரடியாக வெளியிட முடியாதுள்ளது.

**இந்நிலையில் குறிப்பிட்ட படுகொலைகள் பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றினால், அதனை பத்திரிகைகள் வெளியிடுவதை தடைசெய்வதற்கு சட்டத்தில் இடமில்லை.**

இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் பாராளுமன்ற பயன்படுத்தல் என்பது பயன் அளிக்கிறது. அரசாங்கம் தவிர்க்க முடியாமல் விட்டுவைத்துள்ள சில ஜனநாயக வழிமுறைகள் ஊடாக, அந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோத சட்டங்களைத் தாண்டிப் பாய வேண்டும்.



"பாதையைத் திறக்கவே போர் நடக்கிறது" -இரா. சம்பந்தன்

**எனவே, இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் ஜோசப் பரராஜசிங்கம் ஆற்றிய உரைகளால் கிடைக்காத பயன், தற்போது செய்தித் தணிக்கை நேரத்தில் ஆற்றிய உரைமூலம் கிடைத்திருக்கிறது.**

கொழும்புக் கைதுகள் தொடர்பாக விவாதம் கோரி, அரசதரப்பிடம் பொல்லைக் கொடுத்து தமிழ்பேசும் தரப்புக்கு அடிவாங்கித் தந்தமைக்கு பரிகாரம் போலவும் சமீபத்திய உரை அமைந்திருக்கிறது.

**கிளிநொச்சியில் விமானக் குண்டு வீச்சு பற்றிய தகவல் புலிகளின் குரல் வானொலியிலும் கூறப்பட்டிருந்தது. வெளியுலகுக்கும் புலிகளின் கிளைகள் ஊடாக கொண்டு செல்லப்பட்டது. ஆயினும் இச் சம்பவத்தை வெளியிட முடியாமல் உள்ளூர் சுதந்திர ஊடகங்களின் கைகளை தணிக்கை கட்டிப் போட்டிருந்தது.**

தமிழ்க் கட்சிகளும் இதனை நன்கு அறிந்தே இருந்தன. யாழ் குடாநாட்டிலும், வன்னியிலும் புலிகளின் குரல் வானொலி தெளிவாக கேட்டு வருகிறது. எனவே, தமிழ் கட்சிகளுக்கு இத் துயரச் சம்பவம் தெரியாமலில்லை.

**இதனை வெளிப்படுத்தினால் தணிக்கைக்கு எதிராக ஏன் போராடவில்லை? என்ற கேள்விகள் தங்களை நோக்கி எழும் என்பதால் காதில் விழாததுபோல இருந்துள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது.**

பாராளுமன்றத்தில் ஜோசப் பரராஜசிங்கம் உரையாற்றிய பின்னர்வேறு பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தனர்.

அவர்களில் எவரும் கிளிநொச்சியில் தணிக்கை மத்தியில் நடைபெற்ற விமானக்குண்டு வீச்சு பற்றிய கண்டனத்தை தெரிவிக்க முன்வந்திருக்கவில்லை.

**தமிழ்க் கட்சிகளும், தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் எந்தளவு தூரத்திற்கு தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளில் இருந்து விலகிப்போயுள்ளனர் என்பதனையும், இவர்கள் தங்களைத் தாங்களே ஜனநாயகவாதிகள் என்றும், மக்களது பிரதிநிதிகள் என்றும் கூறிவருவது எத்தனை நகைப்புக்கிடமானது என்பதையுமே உணரக்கூடியதாகவுள்ளது.**

பாராளுமன்றத்தை பயன்படுத்த கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை கைநழுவ விட்டுள்ள இக் கட்சிகள் அடுத்த தேர்தலிலும் பாராளுமன்ற நாற்காலிகளை கைப்பற்றுவது எவ்வாறு?" என்ற சிந்தனையிலேயே ஆழ்ந்துள்ளன.

**அரசின் தயவுடன் வேலைவாய்ப்புக்கள் போன்ற சலுகைகளை பெற்றுக் கொடுத்தால், அடுத்த தேர்தலில் குறிப்பிட்டளவு வாக்குகள் தேறும் என்ற கணிப்பிலேயே இக்கட்சிகளது செயற்பாடுகள் அமைவதைக் காணமுடிகிறது.**

பாராளுமன்ற பதவிகள் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு இப் பதவிகளை இழக்காமல் இருப்பதே பிரதான இலட்சியமாக மாறியுள்ளது. பாராளுமன்ற பதவிகள் இல்லாத தமிழ்க் கட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் எப்படியாவது நாற்காலியைக் கைப்பற்றுவதே பிரதான இலட்சியமாக அமைந்துள்ளது.

இக்கட்சிகளின் ஐக்கிய முயற்சிகள்கூட நாற்காலிகளை குறிவைத்தே அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பில் நடைபெறும் குண்டுவெடிப்புக்களை இக்கட்சிகள் கண்டிப்பதுகூட மனிதாபிமான அடிப்படையிலானதாக அமையவில்லை.

**இக்கட்சிகளது தலைமைகள் கொழும்பைச் சார்ந்து இருப்பதாலேயே. அதேபோல புலி எதிர்ப்பு என்று இக் கட்சிகள் இன்று கூறுவதும், கொழும்பில் தங்கள் நலனைப் பேணவும், தங்கள் எஜமானர்களது சந்தேகப் பார்வைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்குமான தந்திரமாகவே மாறியுள்ளது.**

**யாழ் குடாநாட்டில் காணாமல்போன அறுநூறுபேர் விவகாரத்தில் அரசின் அலட்சியத்தை எந்தவொரு தமிழ்க் கட்சியும் கண்டுகொள்ளாதபோதே இக்கட்சிகளது மனிதாபிமானம் எத்தகையது, தார்மீக கோபம் எவ்வாறானது என்பது நன்கு தெரிந்திருந்தது.**

அதுபோன்றே இக்கட்சிகள் யாழில் உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் புலிகளை எதிர்த்து கருத்துக் கூறுவதை மட்டுமன்றி, தங்களைப் புலிகள் தாக்கியதைக்கூட மூடிமறைத்துவிட்டு, தேர்தல் முடிந்த மறுநாளே புலிகளை எதிர்த்துக் கருத்துக் கூறியிருந்தன. இக்கட்சிகளது புலி எதிர்ப்பு எத்தனை சுயநலமானது என்பதற்கு மேற்கண்ட நிகழ்வே தக்க உதாரணமாகும்.

**இன்றைய காலகட்டமும், அதன் தீவிரமும் ஒரு காலத்தில் புலிகளை வெகுதீவிரமாக எதிர்த்தவர்களைக் கூட, புலிகளை விட்டால் தமிழ் பேசும் தரப்பின் பலத்தை நிலைநிறுத்த வேறு சக்தி இல்லை என்ற உண்மையை உணரவைத்துள்ளது.**

ஏனைய தமிழ்க் கட்சித் தலைமைகள்கூட இதனை உணர்ந்தேயுள்ளன. தமது சொந்த நலன்கள் பாதிப்புறும் என்பதால் அதனை வெளிப்படையாகக் கூறாமல் உள்ளன.



"பழிவாங்கவே குண்டு வீச்சு நடக்கிறது" -ஜோசப் பரராஜசிங்கம்

**"இழப்பதற்கு எதுவுமில்லை அடிமைச் சங்கிலிகளைத் தவிர, ஆனால் போராடிப் பெறுவதற்கு புதியதோர் உலகம் இருக்கிறது" என்பது புரட்சிகர கோஷமாகும்.**

இழப்பதற்கு எதுவுமில்லாதவர்களும், இழப்பதற்கு அஞ்சாதவர்களுமே போராடும் துணிச்சலை பெறுகிறார்கள் என்று புரட்சிகளை முன்னெடுத்தவர்கள் கூறியுள்ளனர்.

தமிழ்க் கட்சிகளது தலைமைகள் ஒரு காலத்தில் தம் உறுப்பினர்களை ஆயுதம் ஏந்தி போராடத் தூண்டியபோது இழப்பதற்கு எதுவும் இல்லாதவையாகவே இருந்தன.

**இப்போது தமிழ்க் கட்சித் தலைமைகளிடம் இழப்பதற்கு ஏராளமாக உள்ளன. பதவிகள், ஆட்சியாளருடனான உறவுகள் மூலம் பெறும் நலன்கள், சொத்துக்கள், சுகங்கள் என ஏராளமானவை இழப்பதற்கு உள்ளன. இவற்றை இழக்க முடியாத நிலையில், அதற்கு தோதான அரசியல் பாதையொன்றையே இக்கட்சிகளது தலைமைகள் நாடிநிற்கின்றன.**

எனவே, 'ஆயுதங்கள் ஒழிக' என்றும், 'போராட்டத்தால் கண்ட பயன் எதுவுமில்லை, விவேகத்தால் சாதிக்கலாம்' என்றும் இக் கட்சிகள் கூறத் தொடங்கியுள்ளன.

பாராளுமன்றங்கள், உள்ளூராட்சிச் சபைகள் போன்றவற்றுக்கு தாம் போட்டியிடுவது, அவற்றில் தீய சக்திகள் இடம்பெற்று போலியான தலைமைகள் உருவாகக்கூடாது என்பதற்காகவும், கட்சியை பலப்படுத்தி போராட்டத்தை தீவிரமாக்கவுமே என்று கூறியபடியே இக்கட்சிகள் முதலில் தேர்தல்களில் போட்டியிட்டன.

**ஆனால், தற்போது பாராளுமன்றம் என்பது புனிதமானது, பாராளுமன்ற பதவி என்பது மக்கள் சேவைக்காக உருவாக்கப்பட்டது என்றெல்லாம் மக்களை மட்டுமல்லாமல், தங்கள் உறுப்பினர்களையும் நம்பவைப்பதில் ஈடுபட்டுவருகின்றன.**

பாராளுமன்றம், உள்ளூராட்சி சபைகள் போன்றவை புனிதமானவை என்று மக்களையும், தமது உறுப்பினர்களையும் வழிபட வைப்பதன் மூலம்தான் சொகுசான அரசியலைத் தொடரலாம் என்பதே இக் கட்சிகளின் தலைமைகளது எண்ணமாக உள்ளது.

**இக்கட்சித் தலைமைகளது வாழ்க்கை முறைகள், நடைமுறைகள், தொடர்புகள், உறவுகள், அபிலாசைகள் என்பவை இன்று தலைகீழாக மாறிவிட்டன. தங்கள் பதவிகளுக்கு கிடைக்கும் போலி மரியாதைகள், முகஸ்துதிகள் என்பவற்றை இரசிக்கவும், பதவிகளால் பெறும் பயன்களை சுகிக்கவும் இவர்கள் பழகிக்கொண்டனர்.**

எனவே, இந்த குறுகிய வட்டத்திற்குள் தங்களையும், தங்கள் நலனையும் பத்திரப்படுத்திக் கொண்டு, மடிப்புக் கலையாத சட்டைகளோடு அரசியல் நடத்திய முன்னாள் தலைவர்களது பாதையில் இந்நாள் தமிழ்க் கட்சிகள் செல்லத் தொடங்கியுள்ளன.

**அமெரிக்காவில் வெடித்த மாணவர் கிளர்ச்சி ஒன்றை அடக்க, அக் கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவர் தலைவர்கள் சிலருக்கு குளிர்பான ஏஜென்சி உரிமை கொடுக்கப்பட்டது. போராட்டத்தை கைவிட்ட அந்த மாணவர் தலைவர்கள் கோடீஸ்வரர்களாகிவிட்டனர்.**

உலக வரலாறு விலைக்கு வாங்கப்படாத தலைமைகளையும் அடையாளம் காட்டுகிறது. விலைபோன தலைமைகளையும் குறித்து வைத்திருக்கிறது.

**தங்கள் சொந்த பலத்தில், சொந்தக் காலில் நின்று, முதுகு வளையாமல் பேச்சுக்கள் நடத்திய யாசீர் அரபாத், நெல்சன் மண்டேலா மற்றும் வட அயர்லாந்து தலைவர்களின் நிலைப்பாட்டை தமது சரணடைவுப் பாதைக்கு உதாரணம் காட்ட இக் கட்சிகள் முற்படுவதானது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றதேயாகும்.**

அறுநூறுபேர் காணாமல் போயினர், குண்டுவீச்சுக்களில் மக்கள் பலியாகின்றனர், அவலங்கள் தொடருகின்றன. தமிழ்க் கட்சிகள் மெளனமாக இருக்கின்றன. இவற்றுக்கு புறம்பாக தமிழ் பேசும் மக்களின் நலன் என்று வேறு என்ன இருக்கிறது? வேறு எதற்காகப் போராடப் போகின்றன?

**மெல்லத் தமிழ் பேசும் மக்கள் சாகும்போது, இந்த நீரோ மன்னர்கள் யாருக்காக பிடில் வாசிக்கிறார்கள்? ஆட்சியாளருக்காக என்பது ஒன்றும் இரகசியமல்ல.**

---

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

# பிரதமருடன் சந்திப்பு

**இ**ந்தியப் பிரதமர் வாஜ்பேயியை தமிழக அரசியல் கட்சிகள் சென்று சந்தித்துள்ளன. பிரதமருடன் அமைச்சர்கள் சிலரும், முக்கிய அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்.

இலங்கைக்கு வந்திருந்தபோது 'இது ஒரு உள்நாட்டுப் பிரச்சனை' என்று கூறி விட்டுச் சென்ற பெண் அமைச்சரும் சமூக மளித்திருந்தார்.

செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க. உட் பட அவரது கூட்டணிக் கட்சிகளே சந்திப்பு நடத்தின.

அதனால் வாஜ்பேயி அரசை நிர்ப்பந் திக்க ஜெயலலிதா ஆடிய நாடகமோ? என் றொரு சந்தேகம் எழுந்தது. இது மிக மேலோட்டமான சந்தேகம்.

குறிப்பிட்ட சந்திப்பில் கலந்து கொண்ட வை.கோ, டாக்டர் ராமதாஸ் இருவரும் எத் தனையோ அச்சுறுத்தல்கள் மத்தியில் புலிகளை ஆதரித்தவர்கள். தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு 'தனி ஈழமே தீர்வு' என்று தெளிவாகக் குறிப்பிட்டவர்கள்.

தமிழ் நாட்டில் தங்கள் சொந்த அரசியல் நலனுக்கு அப்பாற்பட்ட ரீதியில் இலங்கைத் தமிழருக்காக உணர்வுபூர்வமாக குரல் கொடுத்த அரசியல் தலைவர்கள் மிக மிக அரிது. அந்த அரிதானவர்களில் இருவர், வை.கோவும், ராமதாசும்.


வாழப்பாடி ராமமூர்த்திகூட எவ்வித பிரதியுபகாரமும் கருதாமல் சில இயக்கங் களுக்கு உதவி செய்தவர். அவருக்கு புலிகளை கண்ணில் காட்டக்கூடாது. ஆனால் இலங் கைத் தமிழர்கள்மீது அனுதாபம் கொண்ட வர்தான்.

தமது சொந்த அரசியல் நலன் கருதி இலங்கைத் தமிழர் போராட்டத்தை ஆதரித்த வர்கள் பலர். அவர்களில் ஒருவர் கலைஞர் கருணாநிதி. தனது அரசியல் நலனுக்கு பாதகம் என்று கருதி புலிகளை மட்டுமல்ல, இலங்கைத் தமிழர் நலனையும் கைவிட் டுள்ளார்.

தமிழக அரசியல் கட்சிகள் பிரதமர் வாஜ்பேயியை சந்தித்ததை தனது ஆட்சிக் கவிழ்ப்புடன் தொடர்புபடுத்தி கலைஞர் பேசியுள்ளார். இப்போது காலையில் எழுந்து தூங்க செல்லும்வரை 'ஆட்சிக் கவிழ்ப்பு' பயம்தான் கலைஞரை ஆட்டிப் படைக்கிறது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு அஞ்சமாட்டோம்' என்று கூறியபடியே அஞ்சிக்கொண்டிருக்கிறார்.

'அருண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்' என்பது மெத்தச்சரி.

இப்போது ஜெயலலிதாவும், அவரது கூட்டணிக் கட்சிகளும் என்ன செய்தாலும் தனது ஆட்சிக் கவிழ்ப்புக்கு என்றுதான் கலைஞருக்கு தோன்றும்.



ராமதாஸ்

வை.கோவும், டாக்டர் ராமதாசும் ஜெயலலிதா விடம் எடுத்துச் சொல்லி, ஒருவித மாக சம்மதிக்க வைத்து மேற் கொண்ட முயற்சி தான் குறிப்பிட்ட சந்திப்பு.

இலங்கைத் தமிழர் நிலை அறிய பாராளுமன்ற தூதுக்குழுவை அனுப்பு மாறும் சந்திப்பின்போது கேட்கப்பட்டுள்ளது.

அக் கோரிக்கை இன்றைய சூழலில் நிறைவேறக்கூடிய கோரிக்கையல்ல. ஆனால், எல்லைமீறிப் போனால் தமிழ் நாட்டில் எதிர்ப்பு எழும், மத்திய அரசை தலையிடு மாறு நெருக்கடி ஏற்படும் என்ற செய்தியை இலங்கை அரசுக்கு புரியவைக்கக்கூடிய கோரிக்கை.

அதேபோல பாரதிய ஜனதா அரசும் முன்னைய அரசுகள்போல இலங்கை அர சுடன் குலாவ முடியாது. அரைகுறைத் தீர்வு யோசனையை ஆதரிக்கமுடியாது.

இலங்கை வந்தபோது, இனப்பிரச்சனை உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறிய பெண் அமைச்சருக்கும் விலாவாரியாக விளக்கம் கொடுத்தனராம் வை.கோவும், ராமதாசும்.

**"இலங்கைத் தமிழருடன் எமக்குள்ள உறவு தொப்புள்கொடி உறவுபோன்றது. நீங்கள் எப்படி உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறிவிட்டு வந்தீர்கள்?"** என்று கேட்டா ராம் டாக்டர் ராமதாஸ்.

"புலிகள்மீதான தடை நீடிப்பெல்லாம் இராஜதந்திர நடவடிக்கைகள்தான். இலங் கைத் தமிழர் விவகாரத்தில் முன்னைய அரசுகள் போல பாரதிய ஜனதாவை நடக்க விடோம்" என்று சந்திப்பின் பின்னர் டாக்டர் ராமதாஸ் உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இன்னொரு விடயம்: கருணாநிதியும், ஜெயலலிதாவும் தமது நலனின் அடிப்படை யில்தான் இலங்கைத் தமிழர் பிரச்சனையை நோக்குவார்கள். அதில் சந்தேகமில்லை.

ஆனால், தமது நலனில் அடிப்படையில் அவர்கள் மேற்கொள்ளும் நிலைப்பாடு, எமக்கு சாதகமாக இருந்தால் அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதுதான் தமிழ் பேசும் தரப்பின் விவேகம்.

அந்த ரீதியில் ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுக்க முன்வந்திருப் பது நல்ல விஷயம். அவருடன் கூட்டணியாக, உள்ள கட்சிகள் கலைஞரை விடவும், மூப்ப னாரைவிடவும் நம் பிரச்சனையில் உண்மை யான அக்கறை உடைய கட்சிகளே என்பதை யும் நாம் மறந்துவிடலாகாது.

இந்தியா மீண்டும் இனி எக்காலத்திலும் படை அனுப்பப் போவதில்லை. நேரடியாக உடனே கருத்து சொல்லப் போவதில்லை. தமிழ் பேசும் தரப்புக்கும் அத்தகைய எதிர்பார்புக்கள் தேவை இல்லை.

தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் வியூகங்களுக்கு இந்திய அரசு துணைபோகா மல் இருந்தாலே போதும். இந்திய மக்கள் எமக்கு பக்கபலமாக நின்றாலே போதும்.

ஆனால், அங்குள்ள தமிழ்க் கட்சிகளின் உணர்வுகூட இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கு இல்லையே. இவை ஆளும் கட்சிக்கு தோதாக எதிர்க்கட்சியை தாளம் போடவைக்கவன்றோ ஒற்றைக்காலில் நிற்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

# இடி அமீன்

## அதிர் இடி 14

**கடந்தவாரம்**

**உகண்டாவில்
நடைபெற்ற படுகொலைகளை
ஆராய வந்த அமெரிக்கர்கள்
இருவரை கொலை செய்து
புதைக்கிறான் அமீன்.
அமெரிக்கத் தூதரகம்
சந்தேகப்பட்டதால்
அந்த உடல்களை தோண்டி எடுத்து
எரித்து—சாம்பலை
தூதரகத்திற்கு அனுப்பி வைக்கிறான்.**

**இனி....**

உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி ஒபேடேயின் செயலாளர் சியம்பாவை அமீன் தன் பக்கம் இழுக்க முற்பட்டதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஒபேடேயின் சேமிப்புக்கள் பற்றிய தகவல்கள் பல சியம்பாவுக்குத் தெரியும்.

ஒபேடேயின் இரகசிய நடவடிக்கைகள், இன்னமும் அடையாளம் காணப் படாத ஒபேடேயின் விசுவாசிகள் போன்ற பல தகவல்களை சியம்பாவிடம் இருந்து கறக்க விரும்பினான். சிங்கப்பூரில் சியம்பா தன் அந்தரங்கச் செயலாளரின் முத்தத்தால் திணறிப்போனான்.

"இடி அமீனுடன் சேரத் தயார்!" என்று சியம்பா கூறியதும் அவள் உதடுகளை கடித்துத் தின்றுவிடும் ஆவேசத்துடன் கவ்விக்கொண்டாள்.

அப்படியே சியம்பாவை கட்டிலில் சாய்த்து அவன்மேல் மண்டியிட்டு உட்கார்ந்தாள். சியம்பா கண்களை மூடிக்கொண்டு அவளது செய்கைகளை அனுபவித்துக் கொண்டே, ஒபேடேயிடம் என்ன கூறிவிட்டுச் செல்லலாம் என்றும் கொஞ்சம் யோசித்தான்.

மறுநாள் காலையில் ஒபேடேயிடம் அவன் தன் முடிவை நேராகக் கூறவில்லை.

"எங்களுக்கென்று இருந்த நாடு போய்விட்டது," என்றான். ஒபேடேயின் முகம் கல்லாக இருந்தது.

"மாட்சிமை பொருந்திய தாங்கள் இனிமேல் சிங்கப்பூரில் இருப்பதும் இயலாது," என் றான் சியம்பா.

"ஆம், தெரியும்!" என்றார் ஒபேடே. அவர் குரல் கிணற்றுக்குள் இருந்து பேசுவதுபோல ஒலித் தது.

சியம்பாவுக்கு அவர் மேல் முதற்தடவையாக அனுதாபம் ஏற்பட்டது. இனிமேல் அனுதாபப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை; ஆகவே இடி அமீனுடன் சேருவதுதான் தான் பிழைக்கவழி என்றும் அவன் தீர்மானித்தான்.

எனினும் "என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

"கென்யா, அரசாங்கம் புகலிடம் தர முன்வந்துள்ளது" என்றார் ஒபேடே.

தன்னையே கலந்தாலோசிக்காது ஒபேடே சில தீர்மானங்களை எடுத்திருக்கிறார் என்பது சியம்பாவுக்கு இலேசான ஆச்சரியம் தந்தது.

தானும் சில முக்கிய தீர்மானங்களை ஒபேடேக்கு தெரியாமல் எடுத்திருப்பதால் சியம்பாவுக்கு கோபம் வரவில்லை.

சியம்பாவை தன்னோடு வருமாறு ஒபேடே கேட்கவில்லை. 'ஏன் கேட்கவில்லை? சந்தேகப்படுகிறாரா?' என்று சியம்பா சந்தேகப்பட்டாலும், கேட்காமல் விட்டதற்காக சந்தோசப்பட்டான்.

ஒபேடே தனக்கு விசுவாசமான சிலருடன் புறப்பட்டு நைரோபி விமான நிலையத்தில் இறங்கினார்.

கென்யா அரசாங்கம் ஒபேடேயை 'பதவியிழந்த தலைவர்' என்ற அந்தஸ்துடன் வரவேற்றது.

ஒபேடேயும் அவருடன் சென்றவர்களும் தனியான கார்களில் ஏற்றப்பட்டு பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மறுநாள் ஈஸ்ட் ஆபிரிக்கன் விமானம் ஒன்றில் ஒபேடே குழுவினர் ஏற்றப்பட்டனர்.

தான்ஸானியா நாட்டில் விமானம் தரையிறங்கியது. விமான நிலையத்தில் அந்த நாட்டு உதவி ஜனாதிபதி ரஷீட் கவாவா காத்திருந்தார்.

ஒபேடேக்காக காத்திருந்த காரில் உகண்டாவின் தேசியக் கொடியும், உகண்டா ஜனாதிபதிக்கான கொடியும் பறந்துகொண்டிருந்தன.

தனக்குத் தரப்பட்ட வரவேற்பை பார்த்த ஒபேடேயின் கண்கள் பனித்தன.

தான்ஸானியாவில் ஒபேடேக்கு புகலிடம் கிடைத்தது.

அதேசமயம் சியம்பா உகண்டாவில் எண்டபே விமான நிலையத்தில், தனது அழகான அந்தரங்கச் செயலாளருடன் தரையிறங்கினான்.

இடி அமீனுக்கு சொந்தமான B.M.W காருடன், அமீனின் சாரதியான இஸ்மாயில் இருவரையும் அழைத்துச் செல்லக் காத்திருந்தான்.

தனது காரையே இடி அமீன் அனுப்பி வைத்திருந்ததால் சியம்பா உற்சாகத்தில் மிதந்தார். தன் அருகில் இருந்த அந்தரங்கச் செயலாளரின் தொடைகளில் கிள்ளி தன் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டார்.

இடி அமீன் மாளிகை முன்னால் சியம்பா சென்று இறங்கும்போது, மாளிகையின் முன்னால் மேர்சிடெஸ் பென்ஸ் ரகக் கார்கள் பல ஒரே நிறத்தில் வரிசையாக நின்றதைக் கண்டான்.

அதேபோல இன்னொரு பகுதியில் ஒரே விதமான B.M.W கார்களும் நிறுத்தப் பட்டிருந்தன.

எப்போது வேண்டுமானாலும் புறப்படத் தயாராக அதன் சாரதிகள் வெள்ளைச் சீருடையுடன் கார்களின் அருகிலேயே நின்று கொண்டிருந்தனர்.

சொந்தப் பாதுகாப்பில் அமீன் எந்தளவுக்கு கவனமாக இருக்கிறான் என்பதை சியம்பா புரிந்துகொண்டான்.

ஒபேடே ஜனாதிபதியாக இருந்தபோது இழவு வீடுபோல களையிழந்து காணப்பட்ட ஜனாதிபதி மாளிகை இப்போது சுறுசுறுப்பாக செயற்படுவதையும் காணமுடிந்தது.

அங்கிருந்த ஊழியர்களும், காவலர்களும் எந்நேரமும் உஷார் நிலையிலேயே தென்பட்டனர்.

இடி அமீன் சிறந்த நிர்வாகி என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது என்பது சியம்பாவுக்கு தெரிந்துவிட்டது.

ஆனால் அமீன்மேல் இருந்த பயத்தோடு இப்போது மரியாதையும் பிரமிப்பும் சேர்ந்து கொண்டன.



உள்ளே அமீன் எழுந்து வந்து கை கொடுத்து வரவேற்றான். பின்னால் நின்றவளை சியம்பாவின் தோளுக்கு மேலாகப் பார்த்த அமீன் கண்ணடித்தான். அவள் பதிலுக்கு உதட்டைக் குவித்து, நாவால் தன் உதடுகளை வருடிக்காட்டினாள்.

அமீனின் வரவேற்பில் குளிர்ந்துபோன சியம்பா "மாட்சிமை பொருந்தியவரே! தங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும்? உத்தரவு போடுங்கள்!" என்றான்.

அமீன் சிரித்து: "இரண்டுநாள் ஓய்வு"



## தருவது ரசிகன்

என்றான். சியம்பா புரியாமல் பார்க்க; **"உமக்குத்தான், உமது மனைவி பிள்ளைகளுடன் இரண்டு நாள் ஓய்வாக கழித்துவிட்டு வாரும். பின்னர் பேசலாம்!"** என்றான்.

சியம்பா தன் அந்தரங்கச் செயலாளரை திரும்பிப் பார்க்க, அமீன்: **"இவள் உன்னிடம் எத்தனை வருசமாக வேலை பார்க்கிறாள்?"** என்றான். "மூன்று வருடங்கள்?" என்றார் சியம்பா.

**"இவளுக்கு என்ன குறை வைத்தாய்? ஊதியம், கவனிப்பு, மரியாதை, இடைக்கிடையே உடம்புக்குத் தீனி- எதிலாவது குறைவைத்தாயா சியம்பா?"**

"இல்லையே, ஏன் கேட்கிறீர்கள்?"

**"ஏன் கேட்கிறேன் என்றால்,இவள் ஏன் உனக்கு துரோகம் செய்து எனக்கு உளவாளி யானாள் என்று அறியவேண்டாமா? அதற்குத் தான்!"** என்று இடியென நகைத்த அமீனின் கை இடுப்புக்கு சென்று திரும்பிய போது, அதில் பிஸ்டல் குந்தியிருந்தது.

என்ன நடக்கப்போகிறது என்பதை சியம்பாவோ, அவனது அந்தரங்கச் செயலாளரோ ஊகிக்க முன்னரே,

தங்களில் யாரைச் சுடப்போகிறான் என்று இருவருக்கும் கிலி படர்ந்த நொடியில்,

"டுமீல்!"

இடி அமீனின் பிஸ்டல் வெடித்தது.

சியம்பாவின் அழகான அந்தரங்கச் செயலாளர் மார்பின் மையத்தைப் பொத்திய படி மல்லாந்து சரிந்தாள்.

சியம்பா தன் கண்முன் நிகழ்ந்த பலியெடுப்பால் உடம்பின் சகல பாகங்களும் நடுநடுங்க நின்றிருந்தார்.

**"இவள் செய்தது ஒரு அழகான** துரோகம். நாளை எங்கள் இரகசியங்களையும் ஏலம் போடமாட்டாள் என்பது என்ன நிச்சயம்?" என்றான் அமீன்.

அவளுக்குக் கூறியது தனக்கும் பொருந்தும் என்பதும், அவளுக்கு கொடுத்தது தண்டனை அல்ல, தன்னை மிரட்டி- கட்டுப்பாட்டில் வைத் திருக்க விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், என்பதும்சியம் பாவுக்கு தெரிந்து விட்டது.

**"என்ன யோசிக்கிறாய் சியம்பா?"** என்றான் அமீன்.

தன் மனதில் ஓடிய எண்ணங்களை அமீன் அறிந்து விட்டானோ என்று பயந்த சியம்பா "இ-ஒ-ஒன்றுமில்லை," என்றான்.

"நீர் இப்போது என் நண்பர். அதனால் உமக்கு செய்யப்படும் துரோகம், எனக்குச் செய்யப்படும் துரோகம் போன்றதுதானே! அதுதான் உமது சார்பில் நான் அவளைக் கொன்றுவிட்டேன்!" என்று சொல்லி நகைத்தபடி, அவள் உடல் அருகே மண்டியிட்டு அமர்ந்தான்.

அடுத்து அமீன் செய்த காரியம் சியம்பாவை தூக்கிவாரிப் போட்டது.

அப்படியே மடங்கி அவள் மார்பின் மையத்தில் வாய்வைத்து உறிஞ்சத் தொடங்கினான்.

உறிஞ்சிக்கொண்டே அவள் உடம்பை தடவிக் கொடுத்தான்.

அவள் இன்னமும் சாகவில்லை. உயிர் போகும் தறுவாயில் முனகிக் கொண்டிருந்தாள்.

அமீன் இரத்தத்தைக் குடிக்கக் குடிக்க அவள் உயிர் மெல்ல மெல்ல அடங்கத் தொடங்கியது.

அமீன் திருப்தியோடு எழுந்தபோது அவள் அடங்கிப் போயிருந்தாள்.

சியம்பாவுக்கு தானும் ஒபேடேயுடன் சென்றிருக்கலாம் என்ற நினைப்பு தோன்றித் தோன்றி மறைந்தது.

அமீனைப் பார்க்கவே அவனுக்கு திராணியில்லை. அந்தளவுக்கு அமீன் இராட்சதன்போல அவன் கண்களுக்குத் தெரிந்தான்.

**"என்ன பயந்துவிட்டாயா? அழகாக இருந்தாள், இரத்தமும் சுவையாக இருக்கிறதா என்று பார்த்தேன், அவ்வளவுதான்!"** என்றான்: விடை கொடுத்தான்.

சியம்பாவை காரில் அழைத்துவந்த அதே சாரதிதான் திரும்பவும் அழைத்துப் போனான். ஆனால் இப்போது வேறு காரில். இது மெர்சிடெஸ் பென்ஸ் கார்.

காரிலிருந்து இறங்கிய சியம்பா, "சரி நீ போ!" என்றதற்கு சாரதி சொன்னான்: "இது இனிமேல் உங்கள் கார். நான் உங்கள் சாரதி. இந்தக் காரை உங்கள் பெயரில் மாற்றிவிட்டார் ஜனாதிபதி." என்று அவன் நீட்டிய பத்திரத்தில் காரின் உரிமையாளர் பெயர் சியம்பா என்றிருந்தது.

இனிமேல் மீளமுடியாத வலையில் தான் சிக்கியுள்ளதையும், தன்னை முழுமையாக அமீன் நம்பவில்லை என்பதையும் சியம்பாவால் உணரமுடிந்தது.

அதேசமயம் அமீன் தனது மாளிகையில் முதலைக் கறியுடன் சாப்பிட்டபடி தன் உதவியாளருக்கு வினோதமான உத்தரவொன்றைப் பிறப்பித்தான்.

(இடி தொடரும்)

# ஒரு நடிகைக்கு நேர்ந்த விபரீதம்



நடிகைகள் தற்கொலை என்று செய்திகள் வருவது புதிய சமாச்சாரமல்ல. ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோ முதல் சில்க் சுமிதாவரை தற்கொலை செய்து கொண்டதாகவே செய்திகளில் கூறப்பட்டது. எனினும் பல நடிகைகளின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகங்கள் இன்றுவரை அப்படியே உள்ளன.

'தற்கொலையானார்' என்று செய்திகளில் இடம்பெறுவதை மயிரிழையில் தவறவிட்டுள்ளார் நிவேதிதா.

'மாடியில் அழகுராணிப் போட்டிக்காக பயிற்சி செய்தபோது தவறி கீழே விழுந்துவிட்டார்' என்று பெற்றோர்கள் கூறுவதை நம்பமுடியவில்லை.

முன்னர் பிரபல நடிகை திவ்யபாரதியும் மாடியில் இருந்து விழுந்து மரணமாகியிருந்தார்.

அதே பாணியில்தான் நிவேதிதாவும் கீழே விழுந்திருக்கிறார். கை முறிந்து, நினைவு இழந்து கோமா நிலையில் மருத்துவமனையில் கிடக்கிறார்.

நிவேதிதாவுக்கு பதினெட்டு வயது. கன்னடப் படங்களில் கதாநாயகியாக நடித்தவர். தமிழில் 'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுனுடன் ஜோடியாக நடித்தவர்.

சினிமா நடிகைகள் என்றால் கண்டிப்பாக தங்கள் கட்டில் அறைக்கு வந்தாக வேண்டும். புதிதாக வரும் நடிகைகளை எப்படியாவது வேட்டையாட வேண்டும் என்பது கர்நாடக அரசியல்வாதிகள் சிலரது கொள்கையாகவே இருக்கிறதாம்.

கர்நாடகாவின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் பெரும் அரசியல் தலைவர் ஒருவரின் பிடியில் சிக்கினாராம் நிவேதிதா. அந்தப் பிரமுகரின் சித்திரவதை தாங்க முடியாமல் அழுது தளர்ந்திருக்கிறார்.

இதற்கிடையே கர்நாடக படத் தயாரிப்பாளரும், கதாநாயகர்களும் நிவேதிதாவின் இளமையை பங்குபோட்டுக் கொள்வதிலேயே குறியாக இருந்தனர்.

நடிப்பதற்கு இரண்டு இலட்சம் ஊதியம் பெற்றார் நிவேதிதா. தங்கள் இரவுத் துணையாக்கவும் சேர்த்தே அந்த ஊதியத்தை கொடுத்தனர்.

பதினெட்டு வயதிலேயே தனக்கு ஏற்பட்டுவிட்ட அனுபவங்களும், பெரும் புள்ளிகளது வக்கிரங்களும் நிவேதிதாவை அரைப் பைத்தியமாக்கிவிட்டன

"தமிழ்ப் படங்களில் நடித்துக் கொண்டு சென்னைக்கு சென்றுவிடலாம்" என்று பெற்றோரிடம் மன்றாடி இருக்கிறார்.

"சினிமாக்காரர்களது சித்திரவதையை என்னால் தாங்க முடியாது. அதை என் வாயால் உங்களிடம் சொல்லவும் முடியாது" என்று அழுதாராம்.

அப்படியிருந்தும் கர்நாடகப் படங்களில் தொடர்ந்து நடிக்க முற்பணம் வாங்கினார் நிவேதிதாவின் தந்தை. இவர் ஒரு முன்னாள் இராணுவ வீரர்.

"நிவேதிதாவை சினிமா உலகம் பாழாக்கிவிட்டது" என்று அவரது பெற்றோர்கள் இன்று கலங்குவது நடிப்பாகத் தான் தெரிகிறது.

தொடர்ந்து நடிக்குமாறு சித்திரவதை செய்யப்பட்டதால் நிவேதிதா தற்கொலைக்கு முயன்றிருக்கலாமோ? என்றும் சந்தேகம் நிலவுகிறது.

கோமா நிலையில் கிடக்கும் நிவேதிதாவை கர்நாடக மாநில அரசியல் புள்ளிகள் பலர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நிவேதிதா நீலப் படங்களில் நடித்ததாகவும், சில அரசியல் புள்ளிகளுடன் நிவேதிதா ஒன்றாக இருந்த காட்சிகள் இரகசியமாக வீடியோ எடுக்கப்பட்டு பிரச்சனைகள் ஏற்பட்டது என்றும் பல்வேறு கதைகள் கர்நாடகாவில் உலாவுகின்றன.

எப்படியோ இன்னொரு இளம் நடிகை சினிமா உலக, அரசியல் உலக வக்கிரங்களுக்கு, தீனியாகிவிட்டார்.

# கிளின்ரன் வாங்கிய மாத்திரை



அமெரிக்காவில் புதிதாக ஒரு மாத்திரை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் பெயர் வயாகரா. ஃபைசர் கம்பனி அந்த மாத்திரையை தயாரித்திருக்கிறது.

இந்த மாத்திரைக்கு அமெரிக்காவில் மட்டுமல்ல உலகெங்கும் பலத்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. பில் கிளின்ரன் கூட இரகசியமாக டசின் கணக்காக வாங்கி வைத்திருக்கிறார் என்கிறார்கள்.

அப்படி என்னதான் செய்கிறது அந்த மாத்திரை என்கிறீர்களா? 'அந்த சமாச்சாரத்தில்' ஆண்களுக்கு பூரணமாக உதவுகிறதாம்.

இந்த மாத்திரைக்கு பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ள நேரத்தில், ஒரு இளம் பெண் இம்மாத்திரைக்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்குத் தொடுத்துள்ளார்.

'பணத்துக்கு ஆசைப்பட்டு எழுபதுவயது கோடீஸ்வரரைக் கல்யாணம் பண்ணினாராம். வயாகரா மாத்திரை வந்ததும்,அதை வாங்கிப் போட்டுக்கொண்டு ஆசாமி விளையாட்டுப் பிள்ளையாகிவிட்டாராம். மனைவியை ஓரம்கட்டிவிட்டு வேறு இளம் பெண்களுடன் கும்மாளம்போடத் தொடங்கிவிட்டார்.'

'குடும்பத்தில் பிரச்சனைகளை உருவாக்குகிறது' என்றுதான் வழக்குத் தொடுத்துள்ளார். இந்த வழக்கு வயாகரா மாத்திரையை விளம்பரப்படுத்த நடத்தும் நாடகமாகவும் இருக்கக்கூடும்.

# அங்கும் அப்படித்தான்



ஜப்பானிலும் பெண்கள்மீதான அத்துமீறல்கள் அதிகரித்து வருகின்றன. பெண்களில் மூன்றில் ஒருவர் என்ற ரீதியில் கணவரின் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்களாம். இத்தனைக்கும் ஜப்பான் பெண்கள் பொருளாதார ரீதியில் சொந்தக்காலில் நிற்பவர்கள்.

85 சதவீதமான பெண்கள் ஓடும் ரயில்களில் ஆண்களின் சில்மிஷங்களால் பாதிக்கப்படுகின்றனராம். 5 சதவீதமான பெண்கள் டெலிஃபோன் மூலமான ஆபாசப் பேச்சுக்களால் பாதிப்படைகின்றனராம்.

பாலியல்ரீதியான அத்துமீறல்களுக்கு எதிராக சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்று ஜப்பானியப் பெண்கள் கோரியுள்ளனர்.

# பிரிந்துவிட்ட வாசனைப் பெண்



'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' (வாசனைப் பெண்கள்) பொப் இசைகுழு பற்றி முரசில் முன்னர் தகவல்கள் தந்திருந்தோம்.

இப்போது ஒரு சோகமான செய்தி: ஐந்து வாசனைப் பெண்களில் ஒருவர் தனியாகப் பிரிந்துவிட்டார்.

1996 முதல் பிரபலமாகி உலகைக் கலக்கிவரும் இந்த இசைக்குழுவின் வருட வருமானம் 2 ஆயிரம் கோடி ரூபாய்.

இந்த வாசனைப் பெண்களில் மிக கவர்ச்சியானவர் கேரி ஃஹேலிவெல். செல்லப் பெயர் 'இஞ்சி'.

இளவரசர் சாள்ஸின் பின்புறத்தில் கிள்ளி பரபரப்பு ஏற் படுத்தியதும் இந்த இஞ்சிதான். இவர்தான் பிரிந்து போயுள்ளார்.

ஒரு உபதகவல்: கவர்ச்சியால் கேடு என்று கூறுகிறார்கள். இந்த வாசனைப் பெண்கள் கவர்ச்சியாக உடையணிந்து ஆடிப்பாடிய 'வான்னபி' என்ற பாடல் காட்சியை தொலைக் காட்சியில் பார்த்த கால்முடமான சிறுவன் ஒருவன், சட்டென்று எழுந்து ஆடத் தொடங்கிவிட்டான். டாக்டர்கள்கூட அதனை அதிசயம் என்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# அதிசய இரட்டையர்



ஒட்டிப்பிறக்கும் இரட்டையர்களை 'சயாமி இரட்டையர்கள்' என்று அழைப்பது தெரிந்ததே. இவர்களும் சயாமி இரட்டையர்கள்தான். சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். அந்தளவுக்கு தோற்றத்தில் எதிரும் புதிருமாக இருக்கிறார்கள். சயாமி இரட்டையர்கள் பொதுவாக ஒரே தோற்றம் கொண்டிருப்பர். இவர்களோ ஒருவர் குண்டானவர். மற்றவர் குள்ளமான ஒல்லிக்குச்சி. இந்த அதிசய இரட்டையர்களுக்கு பன்னிரண்டு வயது. குண்டான சிறுமி ரிங்கி. மற்றவர் தீபா. இந்தியத் தலைநகரான புதுடெல்லியைச் சேர்ந்தவர்கள்.

# வலி போக்கும் தேனீக்கள்

முட்டு வீக்கம், கீழ்வாதம் போன்றவற்றால் முழங்கால்கள், கைகள், முழங்கைகள் முதலிய உறுப்புக்களில் பயங்கர குத்துவலி, எத்தனையோ சிகிச்சை செய்து பார்த்தார். ம்ஹூம்.. பயன் இல்லை.

'தேனீ கொட்டினால் வலி பறந்து போகும்' என்று யாரோ சொல்ல, போனால் போகிறது என்று தேனீயை தன் கையில்கொட்ட வைத்தார். என்னே ஆச்சரியம், வலி பறந்து போச்சு! ஆனால் மூன்று நாட்களில் மீண்டும் வலி வந்தது.

பின்னர் பல தேனீக்களை உடலில் கொட்ட வைத்தார். வலி குறைந்தது. அதனால் தேனீக்கள் வளர்க்கத் தொடங்கினார். இப்போதெல்லாம் தேனீக்கள் இவர் உடலில் அடிக்கடி குடித்தனமே நடத்துகின்றன.

இவரது பெயர்: டானோ ஒட்மான். அமெரிக்கா கலிஃபோர்னியாவைச் சேர்ந்தவர். 30 வயது.

"இந்த சிகிச்சையை சகலரும் செய்ய முடியாது. பயிற்சி வேண்டும். தேனீக்கள் கொட்ட ஆரம்பித்ததும் மயக்கம் வரும்.

நான் அந்த நேரம் நன்றாக மூச்சுவிட்டு சுவாசிப்பதில் கவனமாக இருப்பேன்" என்கிறார்.



# அபூர்வ அன்னாசி

அன்னாசி சீஸன் நம்நாட்டில் ஆரம்பமாகி விட்டது. இனிக் கடைத்தெருக்களில் நிறைந்து கிடக்கும். ஆனாலும் படத்தில் உள்ள அன்னாசி போல காண முடியுமா? முடியாது! ஏனெனில் இது அபூர்வ அன்னாசி.

இராவணனுக்குக்கூட பத்துத் தலைகள்தான். இந்த அன்னாசிக்கு 83 தலைகள். பழம் ஒன்று தலை 83. ஒரு அன்னாசிக்கு ஒரு தலை இருப்பதுதானே வழமை. இதற்கு மேலதிகமாக 82 தலைகள். எடையும் அதிகம்தான்: ஏழரை கிலோ.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் கோர்ளிச்சல் என்ற இடத்தில் டோமி என்பவரது தோப்பில் இந்த அபூர்வ அன்னாசி விளைந்தது. ■





# வீச முடியாத செருப்பு

செருப்புத்தானே என்று தூக்கி எறிய முடியாத, இளக்காரமாக நோக்கமுடியாத செருப்பு இது. இதனைத் தூக்கி எறிந்தால் அள்ளிக்கொண்டு போக அடிதடியே நடக்கும்.

பண நோட்டுக்களாலும் நாணயங்களாலும் உருவாக்கப்பட்ட செருப்பு இது. இலண்டனைச் சேர்ந்த ஜான் பெரல் என்பவர் இதனை தயாரித்துள்ளார். இது அணிந்து கொள்ள அல்ல, அலங்காரமாக வைத்திருக்க மட்டும்! தற்போது இலண்டன் சோத்திப்பை நிறுவனத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது இந்த அதிசயச் செருப்பு. ■



# என்றும் பதினாறு

பதினாறும் நிறையாத பருவமங்கை என்று எண்ணத்தோன்றினால் உடனே மறந்துவிடுங்கள். மகா மகா த..ப்..ப...பு!

இந்த இளைஞிக்கு 73 வயது! பேரிளம்பெண்! இந்த வயதிலும் பாலே நடனம் ஆடுகிறார். இவரது பெயர்: மாயா பிளசட்ஸ் கயா. சோவியத் யூனியனில் ஒன்றாக இருந்து, இன்று உடைந்து தனிநாடாக இருக்கும் உக்ரையன் நாட்டைச் சேர்ந்தவர்.

73 வயதிலும் இளமை குன்றாத இரகசியம் என்ன? "மனதில் இளமை வேண்டும். சோர்வு தலைகாட்டாமை வேண்டும்" என்கிறார். என்றும் பதினாறு என்பது இதுதான்! நம் நாட்டு இளைஞிகள் கவனிப்பார்களாக. ■

# கையெழுத்து வேட்டை

பிரபலமானவர்களிடம் கையொப்பம் வாங்குவது (ஒட்டோகிராஃப்) சிலருக்கு பொழுதுபோக்கு. வேறு சிலருக்கு அது ஒரு வெறி. இந்தியாவில் மும்பாயைச் சேர்ந்த 40 வயது சதீஷ் அப்படி ஒரு வெறியர்.

தனது பதினொரு வயதில் கையெழுத்து வேட்டையைத் தொடங்கிய சதீஷ் இன்றுவரை ஆயிரத்தி நூறு பிரபலங்களிடம் கையொப்பம் சேகரித்துவிட்டார்.

பிரபல கிரிக்கெட் வீரர்களிடம் கிரிக்கெட் மட்டைகளிலேயே கையொப்பம் வாங்கி வைத்திருக்கிறார். அதுதவிர புகைப்படங்கள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவற்றிலும் சேகரித்துள்ளார்.

நெல்சன் மண்டேலா, வாஜ்பேயி, போன்ற தலைவர்களிடமும் முன்னாள் கிரிக்கெட் வீரர் பிராட்மன் முதல் இன்றைய பிரபல ஆட்டக்காரர்கள் வரை பலரிடமும் கையெழுத்து வாங்கியுள்ளார்.

நிலவில் முதல் தடம் பதித்த நீல் ஆம்ஸ்ரோங்கிடமும் மிகக் கஷ்டப்பட்டு கையெழுத்து பெற்றுள்ளதை பெருமையாக கருதுகிறார்.

"இந்த வேட்டையை எப்போது நிறுத்தப் போகிறீர்கள் சதீஷ்?"

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். இறுதி மூச்சு உள்ளவரை தொடருவேன்" என்று வைராக்கியத்தோடு கூறுகிறார். ■



# தகவல் பெட்டி

'துடிக்கிறது மீசை, அடக்கு அடக்கு என்கிறது நாடி வந்த நட்பு' என்பது வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்தில் சிவாஜி பேசும் வசனம். படத்தில் சிவாஜிக்கு பெரிய முறுக்கு மீசை.

இவர்கள் இருவருக்கும் மீசையை விட தாடிதான் செமர்த்தியான முறுக்கு. கோபம் வந்தால் இவர்கள் தாடியைத்தான் முறுக்க வேண்டும். துடிப்பதும் தாடிதான்.

அர்மின் கனாப், வல்கிக் கர்காப் என்பது இவர்களது பெயர். ஜெர்மனியைச் சேர்ந்த இந்த தாடிவாலாக்களின் தாடிகள்தான் சென்ற ஆண்டின் சிறந்த தாடிகளாக பாராட்டுப் பெற்றுள்ளன.

# துடிக்கிறது தாடி




படிப்பகம்

www.padippakam.com

## ஆங்கிலம் ஏன்?

'கொள்கை, மொழிப்பற்று, என்று கூறிக்கொண்டு, நீங்கள் நடிக்கும் படங்களில் ஆங்கில வார்த்தைகளை அதிகம் பாவிப்பது ஏன்?' இது மணிவண்ணனிடம் கேட்கப்பட்ட கேள்வி.

மணிவண்ணனின் பதில்: "உண்மையை சொல்லனும் என்றால் 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் இருந்துதான் இது ஆரம்பம். அதில் ஒரு ஆங்கிலத்தனமான மனிதனை கிண்டல் பண்ணுவதுபோன்ற பாத்திரம். அதனால் அடிக்கடி ஆங்கில வார்த்தைகளை உபயோகப்படுத்தினேன். அது நன்றாக வந்ததால், தொடர்ந்து அதை பின்பற்றி எனக்கு வசனம் எழுதுகிறார்கள்.

என்னுடைய தனிப்பட்ட கருத்துக்களை பிறர்மீது நான் திணிக்க விரும்பமாட்டேன். அதனால் அவர்கள் எழுதித் தருவதை பேசுகிறேன்" என்கிறார் மணிவண்ணன்.

## மீனா நீக்கம் ஏன்?

குருதனபால் இயக்கத்தில் மீனா நடிக்க இருந்த படம் 'வந்தாங்க ஜெயிச்சாங்க' இப்படத்தின் நாயகன் சத்யராஜ்.

திடீரென்று மீனாவைத் தூக்கி விட்டனர். மீனா அதிக சம்பளம் கேட்டதே காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் மீனா நீக்கப்பட்டதற்கு காரணம் வேறு சமாச்சாரமாம்.

கூப்பிட்ட குரலுக்கு போகாமல் 'பிகு' பண்ணியதால் இயக்குநருக்கு பிடிக்கவில்லையாம். ஏற்கனவே இரண்டு படங்களில் இதே இயக்குநருடன் அனுசரித்துப் போனவர் மீனா. 'பொற்கால' இயக்குநரின் மேல் மையல் கொண்ட பின்னர் மீனாவின் போக்கில் மாறுதல் ஏற்பட்டுள்ளதாம்.

மாறுதலை ஏனைய இயக்குநர்கள் விரும்புவார்களா? கதாநாயகர்களும் விரும்பமாட்டார்கள். அதனால் மீனாவுக்கு படவாய்ப்புக்கள் குறையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.



ஸ்நேகா
படம்: மோனிஷா

திரையுலக மறுபக்கம் 60

# குளிர்பானத்தில் கல... நடிகர் கையாளும் பு...

சமீபத்தில் அரசியலில் ஈடுபட்ட நடிகர் அவர். தயாரிப்பாளராக ஆரம்பித்து வில்லனாகி கதாநாயகனாக மாறியவர்.

அவர் தயாரிப்பில் ஈடுபட காரணமே நடிகைகள்மீது கொண்ட சபலம்தான். நடிகைகளை தன் வலையில் வீழ்த்த நடிகர் கையாளும் டெக்னிக் வித்தியாசமானது.

விருந்துக் கேளிக்கைக்கு ஏற்பாடு செய்வார். தனது படத்தில் நடிக்கும் நடிகர் நடிகைகளுக்கு அழைப்பு அனுப்புவார்.

விருந்தில் தனக்கு பிடித்தமான நடிகைக்கு குளிர்பானத்தோடு போதையைக் கலந்து கொடுத்துவிடுவார்.

போதையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் நடிகையை நைசாக மடக்கி கட்டில்வரை கொண்டு சென்றுவிடுவார்.

இந்த டெக்னிக்கை இன்றுவரை அந்த நடிகர் தொடர்கிறார். மூன்றெழுத்து நடிகையை தன் ஆஸ்தான நாயகியாக மாற்றியதும் அந்த டெக்னிக் மூலமாகத்தான்.

ஆனாலும் அவரால் வீழ்த்தப்பட்ட எந்த... அவர்மீது புகார் செய்ததில்லை. பின்னர்... அவரை நாடியும் இருக்கிறார்கள். அந்தளவுக்கு...யானவர் அவர்.

ஃப்ரெண்ட்ஷிப்பை குறிக்கும் தமிழ்ப்படம் ஒன்...டன் நடிப்பவர் 'ரன்' நடிகை.

அந்தப் படத்தின் பாடல் கசட் வெளியீட்... 'ரன்' நடிகைக்கு தன் டெக்னிக்கை காட்டியிரு...

### இங்கே வேண்டாம்

மூன்றெழுத்து நடிகையுடன் விரிசல் ஏற்பட்... 'ரன்' நடிகைமீது கண்வைத்தார் நடிகர். பட... போதே நடிகையின் நாடி பிடித்தறியும் சி... சில்மிஷங்கள் செய்து பார்த்திருந்தார். ... அனுசரித்து நடந்து கொண்டார்.

முழுதாக நடிகையை இசைய வை... டெக்னிக்கை உபயோகித்தார். நடிகை... பானத்தை குடித்துவிட்டு சற்றும்... நின்றார்.

நடிகைக்கு இதெல்லாம் ச... ணம் என்பது நடிகருக்கு அப்... தெரிந்தது.

உடனே நேராக... கொண்டு சென்று ... ராம். நடிகை க... 'இங்கு வேண்டாம்... போல சை... விட்டு, சுற்... பார்த்து ... அறை... விட்...



அர்ஜுன்-மீனா
படம்: ரிதம்

முகப்பில் / சுகன்யா
படம் 'சந்திரலேகா' (மலையாளம்)
விஜயசாந்தி
படம் 'தர்மா'




மோகன்பாபு-சாக்ஷி

## காதோடு சொல்லு...

விநோதமான நடிகை தற்போது தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார். விரைவில் முஸ்லிம் தொழில் அதிபரை திருமணம் செய்யப்போகிறாராம். திருமணத்தின் முன்னரே தங்கள் தேன்நிலவுக்க... இடம் பார்த்துவைக்க சென்று வந்தார்களாம். 'ட்ரையல் பார்த்திருக்கிறார்கள்' என்... சொல்லிச் சிரிக்கிறது விஷயமறிந்த வட்டாரம்.

புதுப்புது நடிகைகள் தாராளமாக, தராதரம் இல்லாமல் சகலருடனும் இசைந்து போகிறார்கள். அதனால் தாமும் அப்படி நடந்து கொள்ள வேண்டி இருக்கிறது என்று வருந்துகிறார் தேவலோக நடிகை.

கோமா நிலையில் உள்ள நடிகையுடன் ராசியாக இருந்தவர்களில் ஒருவர் 'ஆக்ஷன்' நடிகர். மகாபாரத பாத்திரம் ஒன்றின் பெயர் கொண்ட அந்த நடிகர் தனது சொந்தப் படத்தில் நடிகையை படுத்தியபாடு கொஞ்ச நஞ்சமல்லவாம். எங்கே தன்னைப் பற்றியும் உளறிவிடுவாரோ என்று மருத்துவமனைக்கு ஓடோடிச்சென்று பார்த்தாராம் நடிகர்.

பிற மொழிப் படங்களில் மட்டும் கவர்ச்சியை அள்ளி கொட்டுகிறீர்களே, தமிழில் மட்டும் காட்டமாட்டீர்களா? என்று கேட்டதற்கு, அந்த நடிகை கூறிய பதில்: "அங்கே உழைப்புக்கு ஏற்ற ஊதியம் தருகிறார்கள். இங்கே நடிப்பதற்காக தரும் ஊதியத்திலேயே வேறு காரியங்களையும் சாதித்துவிடுகிறார்கள்." இதனைக் கூறிவிட்டு தனது பெயரை போட்டுவிடாதீர்கள். என்றாராம் நடிகை. அந்த மூன்றெழுத்து நடிகையின் பெயர் 'ஷி' என்ற எழுத்தோடு முடிகிறது.

நட்சத்திர தம்பதியின் வாரிசு நடிகைமீது பெரிய நடிகர்களுக்கும் சபலம் தட்டியிருக்கிறதாம். தங்களுடன் நடிக்கவைக்க ஆவலாக உள்ளனராம்.

மார்க்கண்டேய நடிகரின் மைந்தனுக்கு தூண்டில்போடும், நடிகைகளின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதாம். ஆனால் மைந்தனோ லேசில் அசைந்து கொடுக்கும் ரகம் அல்ல. அப்பாவிடம் அத்தனை பயம். இது எத்தனை நாளைக்கு என்று பார்க்கிறோம்? என்று சில நடிகைகள் பந்தயம் கட்டியிருக்கிறார்களாம்.

## மருதநாயகம் ஆயத்தம்
## வெள்ளைக்கார கதாநாயகி

கமலின் இலட்சியப் படமான மருதநாயகம் பட வேலைகள் ஜூலை மாத இறுதியில் ஆரம்பமாகின்றன.

200 நாட்கள் தொடர்ந்து படப்பிடிப்பு நடக்கவுள்ளது. 5 ஆயிரம் துணைநடிகர், நடிகையர் நடிக்கவுள்ளனர்.

கமலுக்கு ஜோடியாக வெள்ளைக்கார நடிகைகள் நடிக்கப் போகின்றனர். சமீபத்தில் இலண்டன், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு சென்ற கமல் அங்கிருந்து வெள்ளைக்கார நடிகர், நடிகைகளை தேர்வு செய்து அழைத்து வந்துள்ளார்.

இந்திய பணமதிப்பில் 20 கோடி செலவில் தயாராகிறது மருதநாயகம்.

'மருதநாயகம்' படத்தை கமல் கைவிட்டதாக அவரது எதிரிகள் கிளப்பிவிட்ட புரளி அடங்கிவிட்டது.

கதாநாயகி மட்டுமன்றி வில்லன், மற்றும் தாத்தா வேடங்களிலும் வெள்ளைக்காரர்கள் நடிக்கின்றனர்.

## லியோனி

பட்டிமன்றம் புகழ் லியோனி 'கங்கா கௌரி' படத்தில் நடித்தார். இப்போது 'ஆனந்த பாண்டவர்' என்னும் படத்தில் நடிக்கப்போகிறார். இப்படத்தின் கதாநாயகன் ராம்கி. ஜோடி மந்த்ரா.



சந்தோஷ்
படம்:

## மனேஜர் ஹீரா

அஜித்குமாரும், ஹீராவும் மீண்டும் பழமாகிக் கொண்டது தெரிந்த கதை. இப்போது அஜித்குமாரின் மனேஜர் ஹீராதான். இருவரும் வெளியூர்களுக்கு ஒன்றாகவே சென்று, ஒன்றாகவே ஒரே அறையிலேயே தங்கி காய்விட்ட காலத்தில் விட்ட குறையையெல்லாம் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஹீராவுக்கு பட வாய்ப்புக்கள் குறைவு என்பதால் அஜித்குமாருடன் ஒட்டிக் கொண்டு அவர் படப்பிடிப்புக்கு செல்லும் வெளியூர்களுக்கு துணையாகப் போகிறார் ஹீரா.

அஜித்குமாரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கத்தான் கூடவே வருகிறார் என்று சில நடிகைகள் முணுமுணுக்கிறார்களாம்.

## இந்தி நக்மா

தமிழ்ப்பட நாயகனான சரத்குமாருடன் ஏற்பட்ட பிரிவால் இந்திப் பக்கம் போயுள்ளார் நக்மா.

'ஐப் ஐப் தில் மிலே' என்னும் படத்தில் நக்மா கதாநாயகியாக நடிக்கிறார். இன்னொரு கதாநாயகி ரவீனா ராண்டன்.

## போட்டியால் இலாபம்

சிம்ரானுக்கும், ரம்பாவுக்கும் இடையிலான போட்டியால் இலாபம் அடைந்திருப்பது தயாரிப்பாளர்கள் தான்.

சிம்ரான் தன்னை ஓரம்கட்டிவிடுவாரோ என்ற பயத்தில் சம்பளம் பற்றி கவலைப்படாமல் நடிக்க ஒப்புக் கொள்கிறார் ரம்பா.

## அழகுச் சிகிச்சை

நடிகை ரவளி பலவிதமாக, பல ரகமாக முயன்றும் முதல் நான்கு ஐந்து இடங்களுக்குள் வரமுடியவில்லை. காரணம் யோசித்தார், தன் உடலை, கட்டழகை ஆராய்ந்தார். விடை கிடைத்துவிட்டது. ஒன்றே ஒன்றுதான் சுமாராய் இருந்தது. அது மூக்கு. இப்போது மூக்கை அழகுபடுத்தும் ஒப்பரேஷனுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீதேவியாகப் போகிறாரோ?

## உத்தரவாதம்

'தாயின் மணிக்கொடி.' படப்பிடிப்பின் நடுவே கோபித்துக் கொண்டு சென்றவர் நடிகை தபு. கோபித்தது அர்ஜுனுடன்.

இனிமேல் 'அந்தமாதிரி' அணுகுமுறை இருக்காது என்று உத்தரவாதம் கொடுத்த பின்னரே மீதியை நடித்துக் கொடுத்தாராம் தபு.

www.padippakam.com

# போதை 'டெக்னிக்'

புரிந்துவிட்டது. நைசாக திருட்டுப் பூனை மாதிரி பதுங்கிப் பதுங்கி நடிகை சென்ற அறைக்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டாராம்.

ஆனால் நடிகையையே மேய்ந்து கொண்டிருந்த சில கண்கள் நடிகை நழுவியதையும், நடிகர் பின்னால் வழுக்கியதையும் காணத் தவறவில்லை.

### அதிர்ச்சி

அரைமணி நேரத்தின் பின்னர் அறைக்கதவு திறக்கப்பட, வெளியே வந்த நடிகரின் கன்னத்தை பார்த்தவர்களுக்கு செம அதிர்ச்சி.

அந்தக் கண்றாவியை நடிகரிடம் எப்படிச் சொல்வது என்று தெரியாமல் தவிர்த்தனர்.

நடிகரின் இடப்பக்க கனத்தில் நடிகையின் உதட்டுச் சாயங்களின் அடையாளம்.

சற்று நேரம் கழித்து கலைந்த கூந்தலுடன் வெளியே வந்த நடிகைதான் நடிகரின் கன்னத்தை எதேச்சையாக கவனித்தார். அவரை நைசாக தள்ளிக் கொண்டுபோய் தன் கைக்குட்டையை கொடுத்து துடைக்கச் சொன்னார்.

அன்று இரவு முழுக்க நடிகர் குஷியில் இருந்தார். 'மீன்' நடிகையின் தாயாருக்கு 'ரம்' கொடுக்க, அவர் வெட்கப்பட்டு மறுக்க, கன்னத்தில் செல்லமாக கிள்ளி குறும்பு செய்தார் நடிகர். தாய்க்குலம் வெட்கத்தில் சிவந்து போனார்.

### சிவாஜியின் ஆசை

தமிழ்த் திரைப்படங்களில் மறக்க முடியாத ஜோடி சிவாஜி, பத்மினி. 39 படங்களில் இருவரும் இணைந்து நடித்தனர்.

நாட்டியப் பேரொளி என்று புகழப்பட்டவர் பத்மினி. அவரது சகோதரி ராகினியும் நாட்டியத்தில் பெயர் பெற்ற நடிகை.

சிவாஜி நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த காலத்தில் பத்மினி சினிமாவில் பிரபலம். அப்போது சிவாஜி பத்மினியின் ரசிகர்.

தன் நண்பர், ஒருவரிடம் சிவாஜி கூறினாராம் "இந்த பத்மினியோடெல்லாம் நான் என்னைக்கு ஆக்ட் பண்ணப் போறேன்?" அதே சிவாஜியுடன் நடிக்க பின்னர் ஏங்கி நின்றார் பத்மினி.

## தவறிய விருது

இந்திய அரசின் சிறந்த படத்திற்கான விருதும், இசையமைப்பாளருக்கான விருதும் பொற்காலம் படத்திற்கு கிடைக்க இருந்ததாம். கடைசி நேரத்தில் கை நழுவிவிட்டது. கை நழுவியதற்கு காரணம், ஆங்கிலத்தில் சப் டைட்டில் போடாமல் அனுப்பி வைத்துவிட்டார்களாம். படத்தை பார்த்த தேர்வுக் குழுக்காரர்களுக்கு ஒரு இழவும் புரியவில்லையாம்.

இயக்குநர் சேரன் மட்டுமல்ல அவர் மனம் கவர்ந்த மீனாகூட சோகத்தில் இருக்கிறார். விருது என்றால் சும்மாவா, அதுவும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையென்றால்...?

## மணியின் படம்

மணிரத்னம் 'இருவர்' படத்தின் பின்னர் தமிழில் படம் எதுவும் எடுக்கவில்லை. விரைவில் மணிரத்னம் இயக்கத்தில் வரவுள்ள படத்தின் பெயர் 'உயிரே'.

இதுவும் நேரடித் தமிழ்ப்படம் அல்ல. இந்தியில் மணிரத்னம் இயக்கி ஷாருக்கான் நடித்த 'தில்சே' படம் தான் அப்படி மொழிமாற்றப்படுகிறது. தமிழில் மொழிமாற்றம் செய்யப்படும் ஷாருக்கானின் முதற் படமும் இதுதான். மணி எப்போது மீண்டும் தமிழில் நேரடியாக படம் எடுக்கப்போகிறார்.

## அமர்க்களம்

முரட்டு வாலிபனாக நடிப்பது என்றால் அஜித்குமாருக்கு ரொம்பத் தான் ஆசை. அவரது ஆசைக்கு தீனி போட ஒரு படம்: அமர்க்களம்.

'அமர்க்களம்' படத்தில் அஜித்குமாருடன் அமர்க்களம் பண்ண வருகிறவர் புதுமுகம். மும்பாய் இறக்குமதி.

மணிவண்ணன், நாசர், தாமு, பாத்திமா பாபு ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம்: சரண், இசை: பரத்வராஜ், பாடல்கள்: வைரமுத்து, சண்டைப் பயிற்சி: ராக்கி ராஜேஷ்.

## ஒஸ்காராம் ஒஸ்கார்

பிரசாந்த் வீட்டிற்கு முட்டை வீச்சு பொய் என்கிறார் தியாகராஜன். 'ஜீன்ஸ்' படத்திற்காக ஒஸ்கார் விருது கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

முட்டை வீச்சு பொய்யோ இல்லையோ, ஜீன்சுக்கு ஒஸ்கார் கிடைக்கும் என்பது பெரிய பொய்.

காரணம் ஒன்று: ஹொலிவுட் படங்கள் தவிர்ந்த படங்களுக்கு ஒஸ்கார் கிடைக்காது.

காரணம் இரண்டு: ஜீன்ஸ் பட கம்பியூட்டர் சாகசம் எல்லாம் ஹொலிவுட்டில் ரொம்பப் பழசு. இந்தியப்பட உலகுக்கு மட்டும்தான் புதுமை.



பார்த்திபன்-ரோஜா
படம்: புதுமைப்பித்தன்



## ...றோம்

## வில்லன் அவதாரம்

'மறுமலர்ச்சி' படத்தில் குதிரை வண்டியில் சுற்றும் அந்த கம்பீர வில்லன் பெயர் ரஞ்சித்.

வில்லனாக நடித்து கதாநாயகனாக மாறியவர்களும் உள்ளனர். கதாநாயகனாக நடித்து வில்லனாக மாறியவர்களும் உள்ளனர். ரஞ்சித் இரண்டாவது ரகம்.

'பொன் விலங்கு' உட்பட சில படங்களில் கதாநாயகனாக நடித்தார். ரசிகர்கள் ஏற்கவில்லை.

கதாநாயகன் கனவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு வில்லனாக நடித்தார். பலத்த வரவேற்பு.

'மறுமலர்ச்சி' படம் பார்த்த விஜயகாந்த் தனது 'தர்மா' படத்திலும் வில்லனாக்கியுள்ளார். நல்ல எதிர்காலம் இருக்கிறது.

## பரிசு

மீனாவின் படுக்கை அறையில் ஒரே ஒரு பொம்மை மட்டும் பத்திரமாக இருக்கிறது.

மீனா பிறந்த நாளில் அந்த பொம்மையை பரிசாகக் கொடுத்தவர் ரஜினிகாந்த்.



குஷ்பு-மணிவண்ணன்
படம்: குரு பார்வை

## திடீர் தாக்குதல் ≫ முட்டை வீச்சு

நடிகர் பிரசாந்த் வீட்டின் முன்பாக ஒரு வேன் வந்து நின்றது. நேரமோ நள்ளிரவு.

வேனில் இருந்து இறங்கியவர்கள் பிரசாந்த் வீட்டை நோக்கி மளமளவென்று கற்களை வீசினார்கள். அழுகிய முட்டைகளை வீசினார்கள். பிரசாந்துக்கு எதிராக கோஷம் போட்டார்கள்.

பின்னர் வேனில் ஏறிப் பறந்துவிட்டனர். அரண்டு போன பிரசாந்தும், அப்பா தியாகராஜனும் கராத்தே வீரர் ஹுசைனியை அழைத்தனர். தனது பரிவாரங்களுடன் வந்த ஹுசைனி, பிரசாந்துக்கு பாதுகாப்பாக தன் ஆட்கள் சிலரை நியமித்திருக்கிறார்.

தாக்குதலுக்கான காரணம் என்னவென்பது மர்மமாக இருக்கிறது.

## அரியாசனம்

நெப்போலியனுக்கு ஓர் அரிய வாய்ப்பு. இரட்டை வேடத்தில் பிளந்து கட்டப் போகிறார். இரட்டை வேடத்தில் அவர் தோன்றப்போகும் படத்தின் பெயர்: அரியாசனம்.

இரண்டு நெப்போலியனுக்கு இரண்டு ஜோடிகள் இருந்தால்தானே சமாளிக்கலாம். இருக்கிறார்கள். ராதிகா, குஷ்பு.

இசையமைக்கப் போவது பெண் இசையமைப்பாளர் பிரியதர்சினி. இயக்கம்: ஆர்.கே. லக்ஷ்மண், பாடல்கள்: வைரமுத்து, பழனிபாரதி.

## ஆற்றோடு போன நடிகர்
## மீனாவை கலக்கிய வெள்ளம்

மீனாவை யானை துரத்திய சம்பவம் பற்றி சென்றவாரம் குறிப்பிட்டிருந்தோம்.

மீனா சென்ற படகு கவிழ்ந்த சம்பவம் இந்தவாரம்.

எஸ். ரங்கநாத் என்னும் தெலுங்கு புது நாயகனுடன் ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருந்தார் மீனா. அப்படத்திற்காக ஹைதராபாத்தில் ஆற்றில் படகு செல்லும் காட்சி படமாக்கப்பட்டது.

படகில் மீனாவும் ரங்கநாத்தும் அமர்ந்திருந்து பாடல் காட்சி ஒன்றுக்கு வாய் அசைத்தபடி இருந்தார். அது காட்டாறு. திடீர் திடீர் என்று வெள்ளம் வரும். அன்றும் வெள்ளம் வந்தது.

அவ்வளவுதான், படகு கவிழ்ந்தது. மீனாவுக்கு ஓரளவுதான் நீச்சல் தெரியும். அந்த பூப்போன்ற உடலை வெள்ளத்தின் கரங்கள் வாரியள்ளிக் கொண்டு போகத் துடித்தன.

படகின் ஒரு பாகத்தை மீனா பிடித்துக்கொண்டதில் வெள்ளத்தின் ஆசை பலிக்கவில்லை.

ஆனால் ரங்கநாத்.... அவரை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. இப்போது நினைத்தாலும் மீனா பயத்தில் உறைந்து போகிறார்.

"ரொம்ப நல்ல மனுசன் ரங்கநாத். பெரிய ஆளா வந்திருப்பார்! பாவம்" என்று அனுதாபப்படுகிறார்.


படிப்பகம்

www.padippakam.com

## ஆயுள் தண்டனை

கொஞ்சகாலமாவது–நீ
என்னைவிட்டு வைத்திருந்திருக்கலாம்!

அடிமேல் அடிவைத்து
ஜடமான என்னை
உலுப்பியெடுத்து விட்டாய்!

கோணலான நான்
சீராகினேன்.
கோர்வையாக வந்த வரிகள்
கோணலாகின.

கொஞ்ச காலமாவது–நீ
என்னைவிட்டு வைத்திருந்திருக்கலாம்!

ஆரவாரமில்லாமல்
இன்னும் கொஞ்சம்
எழுதியிருப்பேன்!
எது நேர்ந்தபோதும்
எழுதிக் கொண்டிருந்தேன்....
என்ன நேருமோ என்று
அழுது கொண்டிருக்கிறேன்!

கொஞ்சகாலமாவது–நீ
என்னைவிட்டு வைத்திருந்திருக்கலாம்.

சௌஜன்யா.

## வழி'காட்டி'கள்

வழிகின்ற மெழுகின்
சூட்டைப் போல
மனதில் பரவி
படிந்து செல்லும்
உன் நினைவு
அகற்றக்கூடியதாய்....!

அடித்த நுளம்பின்
துடிக்கும் கால்போல
எப்போதாவது குறுகுறுக்கும்
சில நிகழ்வுகள்
அழிக்கக் கூடியதாய்....!

வெட்டப்பட்ட துணியில்
சிலும்பி உள்ள
நூல்கள் போன்று
அழிந்தும் அழியாத
மனங்களின் யுத்த வடுக்கள்
'தைக்க' முடியாமல்......!

தன்னைக் கொடுத்து
இனத்தை பரப்பும்
பூக்களின் 'தியாகத்தை'
எண்ணி
இறுமாப்பு கொள்ள
முடியாமல்.....!

கல்லில்
நெல் விதைத்து
'அறுத்துத்' தருவோம்
அதுவரை பொறுப்பீர்
என்னும்
சில மனிதர்கள்
சிரிக்க முடியாமல்.....!

சுபா வரன்–கண்டி.

# முகங்கள்



ஜெர்மன் அதிபர் ஹிட்லர் பேச்சில் வல்லவர். 1942ல் இராணுவத்துக்கு ஆள் திரட்ட நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் ஹிட்லர் உரையாற்றும்போது வெளிப்பட்ட பலரக முகபாவங்களே இவை.

யூத இனத்தை ஒழிக்கவும், இனவாதத்தைத் தூண்டி, போரை நடத்தி தனது அதிகார ஆசைகளை நிறைவேற்றவும் தன் பேச்சாற்றலை நம்பினார் ஹிட்லர். உணர்ச்சியைத் தூண்டி மக்களிடம் விஷம் ஊட்ட படும் பாட்டை முகங்கள் காட்டுகிறதல்லவா?

ஹிட்லருக்கு கிடைத்த சொத்து கோயபல்ஸ். போர்முனைச் செய்திகள் முதல் அனைத்துச் செய்திகளுமே அவன் வாயில் இருந்து பொய்கலக்காமல் வெளிவந்ததில்லை.

ஜெர்மன் இராணுவம் அடிமேல் அடிவாங்கி நூறு நூறாக ரசியாவில் பலியாகிக் கொண்டிருந்தபோது அந்தச் செய்தியை ஜெர்மன் மக்கள் செவிகளுக்கு எட்டவிடாமல் தடுத்தான் கோயபல்ஸ்.

ஹிட்லரும், கோயபல்ஸும் கடைசிவரை திரும்பத் திரும்ப சொன்ன ஒரே பொய்: "வெற்றி நமதே!" இறுதியில் அந்த வாக்கியம் ரசியப் படைகளுக்கும், நேச நாட்டுப் படைகளுக்கும் சொந்தமானது. 1945ல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

## வேண்டும் ஒரு கனவு

கண்களை இறுக
மூடிக் கொண்டேன்!
மனம் முழுக்க உன்னை
மட்டும்
திரப்பிக் கொண்டு..!
**
வான வில்லை உடையாய்
அணியும்
விந்தை!
**
சூரியனையும் தொட்டுத்
திரும்பும்
ஆற்றல்!
**
நட்சத்திர மாலை
கட்டும்
அதிசயம்!
**
இறக்கைகள் முளைத்து
விண்ணில் பறக்கும்
சக்தி!
**
இந்திரனின் ஐராவதத்தில்
உலா வரும்
அதிர்ஷ்டம்!
**
தேவர்களோடு நானும்
அமுதுண்ணும்
பாக்கியம்!
**
வண்ணக் கனவுகளுடன்
தூங்கிப் போனேன்!
**
விடிந்ததும்
விழித்தேன்!
வயிறு பசித்தது!
வயிற்றோடு சேர்ந்து
மனமும் பசித்தது!
**
மீண்டும் ஒரு கனவிற்காய்...!

கலஹா பெ. புண்ணியமூர்த்தி.

## தேன் கிண்ணம்

### எது கொடுமை?

இளமையில் வறுமை?
முதுமையில் தனிமை?
காதலில் பிரிவு?
மோதலில் சாதல்?

இல்லை! இல்லை!!

தான்பெற்ற தங்கத்தின்
தளிர் நடை காணா(து)
தனியனாய் (வான்) ஊர்தியில்
பனிநாடு வந்ததே!

முரளிதரன்.

## பேனா நண்பர்கள்



பெயர்: வி. தேவி,
வயது: --
முகவரி: எல்டப் குறூப், வீட்டிலக்கம்-42, எல்.டி., பசறை.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சலீம்,
வயது: 17
முகவரி: 485/07, சிராஜ் நகர், தம்பலகாமம்.
பொழுது போக்கு: பத்திரிகை. பேனா நட்பு.



பெயர்: பி.விக்டோரியா,
வயது: 25
முகவரி: 16/6, சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். ஷாஃபி,
வயது: 20
முகவரி: 109, கொழும்பு வீதி, கண்டி.
பொழுது போக்கு: பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(21.06.1998 தொடக்கம் 27.06.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - வியாழன். |
| மேடம் | - சனி. |
| இடபம் | - செவ்வாய், வெள்ளி. |

சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: (சுப நேரம்)

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: (சுப நேரம்)

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- புதிய முயற்சி, பெரியோர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: (சுப நேரம்)

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், இனசன நன்மை. | பகல் | 11 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம் (சுப நேரம்)

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், மனக்கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- பெரியோர் பகை, காரிய நஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிட பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், பணவரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம் (சுப நேரம்)

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் மனஸ்தாபம், பெரியோர் பகை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பணவரவு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம் (சுப நேரம்)

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம் | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக்கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன நன்மை, உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியசித்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கடகம் (சுப நேரம்)

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- வீண் முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், கடன் படல். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம் (சுப நேரம்)

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், மனக்கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக்கேடு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| சனி- வீண தொல்லை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### தனு (சுப நேரம்)

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவதிகம், | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, அந்நியர் நட்பு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கடன்சுமையதிகம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பணக்கஷ்டம் | மு.ப. | 10 | மணி |
| சனி- பயனற்ற செயல், கௌரவக் கேடு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### விருச்சிகம் (சுப நேரம்)

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 | மணி |
| சனி- பணவரவு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### [illegible] (சுப நேரம்)

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், கடன் சுமை. | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன நன்மை, மனக்கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### [illegible] ([illegible])

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## எடை குறைந்த குழந்தைகள்



குழந்தை பிறந்தவுடன் 'ஆண் குழந்தையா? பெண் குழந்தையா?' என்று ஆவலோடு நாம் கேட்பது வழக்கம். அடுத்து, கூடவே வரும் கேள்வி, குழந்தையின் நிறை என்ன? என்பதுதான்.

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு 'சராசரியான நிறை' மிக அவசியம். எனவேதான் குழந்தை பிறந்தவுடன் நிறையைக் கணக்கிடுகின்றனர்.

பிறக்கும் குழந்தை சராசரியாக மூன்று கிலோ இருக்க வேண்டும். இரண்டரைக் கிலோவிற்குக் குறைவாக இருக்கும் குழந்தைகளும், பத்து மாதத்திற்கு முன்பே குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளும் குறைந்த நிறைக் குழந்தை எனப்படுகிறது.

ஆசியாக்கண்டத்தில்தான் குறைந்த நிறைக் குழந்தைகள் அதிக அளவில் பிறக்கின்றன. நிறை குறைந்த குழந்தைகள் வளர்ந்து, பள்ளிப் பருவத்தில் மற்றக் குழந்தைகள் போல் சுறுசுறுப்பாக இருக்காது என்று சில மருத்துவ அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அந்தக் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக இருக்கும்.

நிறை குறைவு உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடும் என்பது போன்ற விஷயங்கள் பல கருவுற்ற பெண்களுக்குத் தெரிவதில்லை. படித்தவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. குழந்தைகளின் நல்ல ஆரோக்கியத்திற்கு ஆதாரம் தாய்மார்கள் தானே?

குறைந்த நிறைக் குழந்தைகள் எதனால் பிறக்கின்றன? இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பது குறித்து குழந்தைகள் நல டாக்டர் ராமகிருஷ்ணன் என்பவர் விளக்குகிறார்:

- நிறை குறைவான குழந்தை எல்லாத் தாய்மார்களுக்கும் பிறப்பதில்லை.
- 21 வயதிற்கு முன்பே திருமணம் செய்து கொள்ளும் பெண்கள்.
- மூன்று ஆண்டுகள் இடைவெளி இல்லாமல் அடிக்கடி குழந்தை பெற்றுக் கொள்ளும் தாய்.
- 50 கிலோ நிறைக்குக் குறைவாக உள்ள கர்ப்பிணிகள்.
- உயரம் மிகக் குறைவாக உள்ள பெண்கள்.
- இரத்த சோகை, நீரிழிவு, இருதய நோய், இரத்த அழுத்தம், மஞ்சட்காமாலை நோய்களால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள்.
- கர்ப்ப காலத்தில் உதிரப்போக்கு, கர்ப்பப் பையில் இரத்தக்கட்டி ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்கள். இவர்களுக்கு நிறை குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. சுமுகமான உறவு அமையாத தம்பதிகள் கர்ப்பம் அடைந்த பின்பு கணவன்-மனைவிக்கிடையே உருவாகும் பிரச்சனைகளால் ஏற்படும் மன அமைதியின்மை ஆகியவற்றாலும் ஒரு தாய் குறைமாதக் குழந்தையைப் பெற்றெடுக்கக் கூடும்.

## எடை குறைவால் ஏற்படும் பிரச்சனைகள்

எடை குறைந்த குழந்தைகளும், குறை மாதக் குழந்தைகளும் எதிர்நோக்கும் பிரச்சனை என்ன?



- குறைந்த நிறைக் குழந்தை அல்லது குறை மாதக் குழந்தை பிறக்கும் போது, குழந்தையின் சருமத்திற்கு அடியில் அமைய வேண்டிய கொழுப்புச் சத்து போதுமான அளவு இருக்காது. இதனால் குழந்தையின் உடல் நிலை மற்றும் வெப்ப நிலையை பேணமுடியாது. எனவே இவ்வாறு பிறந்த குழந்தைகள் 'கைப்போதர்மியா' என்ற நோயால் பாதிக்கப்படும்.
- போதுமான எடை இல்லாததால் குழந்தைகளுக்குத் தேவையான குளுக்கோஸ் சத்தும் குறைவாக இருக்கும். எனவே குழந்தைகள், இரத்தத்தில் குளுக்கோஸ் குறைவினால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்படும்.
- குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு உடலில் அனைத்து உறுப்புக்களின் வளர்ச்சியும், போதுமான அளவு இருக்காது. எனவே உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும்.
- குறைமாதக் குழந்தை சுவாசிக்க, உடல் வெப்பநிலையைப் பாதுகாக்க, தனக்குத் தேவையான உணவை எடுத்துக் கொள்ள தகுதியற்று இருக்கும்.
- நோய் எதிர்ப்பு சக்தி போதுமான அளவு இல்லாததால் நுண்கிருமிகளால் பாதிக்கப்படலாம்.

இவ்வாறு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க, கருவுற்ற ஆறாவது வாரத்தில் இருந்து மகப்பேறு வைத்தியரைச் சந்தித்து ஆலோசனை பெறுங்கள். இப்போது, பிறக்கும் குழந்தைகள் நிறை குறைவாகவோ அல்லது குறை மாதமாகவோ பிறக்கப் போகின்றன என்பதை அறிந்து கொள்ளப் பல வசதிகள் வந்துவிட்டன. நிறை குறைவாகவோ அல்லது குறைமாதத்தில் குழந்தை பிறந்தாலும் அதற்கும் பல தீவிர சிகிச்சை முறைகள் உள்ளன.

பெண்களே உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆரோக்கியமாகத் திகழ, நீங்கள்தான் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அது உங்கள் கையில்தான் உள்ளது.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 40

**புவனா**

## கதை சொன்ன டயானா

கண்காட்சி ஒன்றுக்கு 1992 மார்ச் மாதம் பிரதம விருந்தினராகச் சென்றிருந்தார் டயானா.

அந்த விருந்தின் பின்னர் எய்ட்ஸ் பற்றி உரை நிகழ்த்தினார். அந்த உரை எவரது உதவியுமின்றி டயானாவால் தயாரிக்கப்பட்டிருந்தது.

பல பேராசிரியர்களும், கல்விமான்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

தனது உரை முடிந்ததும், "சந்தேகம் இருந்தால் கேள்வி கேட்கலாம்!" என்றார்.

கேள்விகள் தொடுக்கப்பட்டன. இளவரசி டயானாவோடு கேள்வி கேட்கும் சாக்கிலாவது உரையாட விரும்பினர் சிலர்.

அந்த உரை இளவரசியால்தான் தயாரிக்கப்பட்டதா, அல்லது இரவல் உரையா? என்று அவரது திறமையை உரசிப்பார்க்க நினைத்தனர் சிலர்.

வேறு சிலரோ தமது புலமையை டயானாவுக்குக் காண்பிக்க விரும்பி கேள்வி தொடுத்தனர்.

அத்தனைபேரும் அதிசயிக்கும் வண்ணம் கேள்விகளுக்கு-எவ்வித தயக்கமும் இல்லாமல் பதிலளித்தார் டயானா.

அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பேராசிரியர் ஒருவர் டயானாபற்றி கூறுகையில்: "எத்தகைய சவால்களையும் சந்திக்கக் கூடிய பெண் இவர். இப்படியான ஒருவரை அரச குடும்பம் இழக்கப் போகிறது என்பது வேதனையளிக்கிறது. புழுத்துப்போன சம்பிரதாயங்களுக்குள் தலையைப் புதைத்தபடி கிடக்கும் அரச குடும்பத்துக்கு புதிய இரத்தம் பாய்ச்சக்கூடியவர் டயானா மட்டுமே!" என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்விமான் ஒருவர் தன் தகுதிக்கு மாறாக நடந்து கொண்டார். அவரையும் புன்னகைத்தபடி நாகரிகமாக கையாண்டார் டயானா.

டயானாவை அழைத்துச் செல்லும் சாக்கில், டயானாவின் பின்னழகுகளில் அந்த கல்விமானின் கை ஒன்று விஷமம் பண்ணிக் கொண்டிருந்தது.

முதலில் தற்செயலாகக் கை படுகிறதாக்கும் என்று நினைத்தார் டயானா. தொடர்ந்தும் கல்விமானின் கை விலகாமல் நின்றதோடு சற்று அழுத்தவும் செய்தபோது, அவரது நோக்கம் புரிந்து விட்டது.

ஆனாலும் சினந்து விழுவதோ,அவரை பலர் நடுவே கண்டிப்பதோ, அந்தக் கல்விமானின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று நினைத்த டயானா, நாசூக்காக அவரை தன்னிடமிருந்து விலகச் செய்தார்.

"செக்ஸ் உணர்ச்சி வரம்பு கடந்து விடுமானால் வெட்கம், பயம், தகுதி போன்ற அனைத்தையும் மறக்கச் செய்து விடும். அந்த கல்விமானின் நிலையும் அதுதான்!" என்று பின்னர் தன் சிநேகிதியிடம் கூறினாராம் டயானா.

### கவர்ச்சி உடைகளில்

தன்னைக் காணும் ஆண்களில் பலர் அசடுவழிவதையும்,தன்னை ஸ்பரிசிக்க ஆவலுறுவதையும் பார்த்துப் பார்த்து டயானாவுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது.

ஆனாலும் அவ்வப்போது உள்ளூர மகிழ்ச்சியும் ஏற்படுவதுண்டு.

ஒருமுறை மார்பு விளிம்புகள் தெரிய டயானா உடையலங்காரம் செய்திருந்தார். "என்ன ஆண்களை இன்று பைத்தியமாக்கப் போகிறாயா?" என்று அவரது சிநேகிதி கேட்டார்.

டயானா அதற்கு: "இந்த அழகையா சாள்ஸ் உதாசீனம் செய்தார்? என்று அவர்கள் பிரமிக்கட்டும். அப்போதுதான் சாள்ஸ் மீது குற்றம் சொல்லத் துணிவார்கள்!" என்று கூறிச் சிரித்தாராம்.

டயானா உண்மையாகச் சொன்னாரா, வேடிக்கையாகச் சொன்னாரா என்பது தெரியவில்லை. ஆனால் ஆடம்பரமான பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செல்லும்போது கவர்ச்சியான உடையணிந்தே செல்லத் தொடங்கினார்.

மரியாதை நிமித்தம் கன்னத்தில் முத்தமிடும்போதுகூட உணர்ச்சிவசப்பட்ட பெரிய மனிதர்களையும் அவர்களது முத்தத்தின் சூடு டயானாவிடம் காட்டிக் கொடுத்துவிடும்.

அறுபது வயதான பிரபு ஒருவர் கன்னத்தில் முத்தமிடும்போது டயானாவின் காது மடல்களிலும் ஆவேசமாக முத்தமிட்டார். அவரது கைகளும் டயானாவின் இடையை அழுத்திப் பிடித்தன.

"நல்ல வேளை பொது இடமாக இருந்து விட்டது. இல்லாவிட்டால் அவர் இளைஞராக மாறி என்னை துவைத்திருப்பார் போலும்," என்று டயானா தன் சிநேகிதிகளிடம் கேலியாகக் கூறினார்.

அன்றாடம் தன் வாழ்க்கையில் ஏற்படும் சுவாரசியங்களை தன் நெருங்கிய சிநேகிதிகளிடம் கூறிவிடுவார் டயானா.

### அதிர்ச்சி



தன் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளையும், சுகங்களையும், துயரங்களையும் எழுத்தாளர் அன்ட்று மோட்டன் என்பவருக்கும் கூறினார் டயானா.

'டயானாவின் சொந்தக் கதை' என்ற பெயரில் அதனை புத்தகமாக்க விரும்பினார் அன்ட்று மோட்டன்.

அரச குடும்பத்தினர் இலேசாக விவாகரத்து தரப்போவதில்லை. சாள்ஸும் மனம் திருந்தப் போவதில்லை. இப்படியே தன்னை நரகத்தில் வைத்திருக்கப்போகிறார்கள் என்பது டயானாவுக்குத் தெரிந்தது.

அதேசமயம் தன்னைப் பற்றி அரச குடும்பத்தினர் கூறும் புனை கதைகளுக்கும் பதிலளிக்க தனது தரப்பு நியாயத்தை கூற விரும்பினார்.

தனது நியாயத்தை எடுத்துக்கூறவும்; அரச குடும்பத்தினரை விவாகரத்து வழங்கத் தூண்டுவதற்குமே தன் சொந்தக் கதையை அன்ட்று மோட்டனுக்கு கூற முன்வந்தார்.

1992 ஏப்ரல் மாதம் அன்ட்று மோட்டன் எழுதிய புத்தகம் வெளியாகியது.

எதிர்பார்த்தது போலவே அரச குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர். டயானாமீது அளவற்ற வெறுப்புக்கொண்டனர்.



இலண்டன் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை 1992ஜூன் 7ம் திகதி முதல் அன்ட்று மோட்டனின் நூலை தொடராக வெளியிட ஆரம்பித்தது.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பொட்டுக் கேடுகள் மிகப் பாரியளவில் அம்பலமாகத் தொடங்கியது.

பாமரமக்களும் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் உள்விவகாரங்களை படித்து அறிந்தனர்.

கட்டுரைத் தொடர் வெளியாக முன்னரே அத் தகவல் சாள்ஸுக்கு எட்டிவிட்டது.

அவரது நண்பர் ஒருவர்தான் அத்தகவலை கூறினார். "எவ்விதமாவது தொடர் வெளியாகாமல் நிறுத்த முடியாதா?" என்று சாள்ஸ் வினவினார்.

"அது மட்டும் முடியாது. பத்திரிகைகள் கூறுவதெல்லாம் கட்டுக் கதை என்று கூறி வந்தீர்கள். ஆதாரங்கள் கிடைக்கப்போவதில்லை என்ற நம்பிக்கையில் பத்திரிகைச் செய்திகளை மறுத்து வந்தீர்கள். இப்போது டயானா கூறிய கதையையே வெளியிட்டு விட்டனர். இந்த பொன்னான வாய்ப்பைக் கைவிட ஒருபோதும் சம்மதியார்கள்," என்று அந்த நண்பர் கூறிவிட்டார்.

### திடீர் சந்திப்பு

குறிப்பிட்ட தொடர் வெளியானால் ஏற்படக்கூடிய பரபரப்பை அமுக்குவதற்கு என்ன செய்யலாம் என்று அரச குடும்பம் தலையைப் பிய்த்தது.

இறுதியாக அந்த யோசனை சாள்ஸிடம் கூறப்பட்டபோது, சாள்ஸின் முகம் கோணலாகிவிட்டது.

இளவரசர் சாள்ஸும் டயானாவும் சந்தித்தனர். மனம் விட்டுப் பேசினர், எதிர்காலம் பற்றி தீர்மானித்தனர் என்று செய்திகள் வெளியாக வேண்டும்.

அப்படிச் செய்திகள் வெளியாக வேண்டுமானால் இருவரும் சந்தித்தேயாக வேண்டும் என்று சாள்ஸிடம் கூறப்பட்டது.

மனப்பூர்வமாக இல்லாவிட்டாலும் நிர்ப்பந்தத்தால் சம்மதித்தார் சாள்ஸ்.

டயானா சம்மதிப்பாரா, என்று அரச குடும்பம் சந்தேகித்தது. ஆனால் அதிசயமாக டயானாவும் சம்மதித்தார்.

அரண்மனைக்குள்ளேயே இருவரும் சந்தித்தனர்.

நீண்டநாட்கள் ஒருவருக்கொருவர் பேசாமல் இருந்துவிட்டதால் என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

முன்பின் அறிமுகமில்லாத அந்நியர் போன்றே இருவரும் நடந்துகொண்டனர். முதலில் சில நிமிடங்கள் அமைதி நிலவியது.

யார் முதலில் பேசுவது என்ற மனப் போராட்டத்தில் இருவரும் தத்தளித்தனர்.

டயானாதான் மௌனத்தைக் கலைத்தார். அந்நிய ஆண் ஒருவருடன் பேசுவது போன்றே சாள்ஸுடனும் பேசினார். சாள்ஸும் சிடுமுஞ்சியுடன்தான் பேசினார்.

"பிரிந்து செல்லுவதுதான் நல்லது என்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டார் சாள்ஸ்.

"ஆம்!" என்றார் டயானா.

"நானும் அப்படியேதான் நினைக்கிறேன்!" என்றார் சாள்ஸ்.

பின்னர் இருவரும் வெவ்வேறு திசைகளில் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தனர்.



இருவருக்குமே தங்கள் மனதில் இது வரை அழுத்திக் கொண்டிருந்த பாரம் ஒன்று குறைந்தது போலிருந்தது.

தனக்கு விவாகரத்துத்தர சாள்ஸ் சம்மதம் தெரிவித்ததற்காக டயானா மகிழ்ந்தார்.

அந்த மகிழ்ச்சிக்கு விரைவிலேயே முற்றுப்புள்ளி இடப்படப்போகிறது என்பதை அவர் அறியவில்லை.

(அடுத்த வாரமும் வரும்)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DX

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-06-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் **திருமதி சிறீபாலா பவளம்மா,**
கந்தப்புவளவு, வெளிக்குளம், வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு - அம்மன் ஜுவல்ஸ்

இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி


தினமுரசு - அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 06

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்





நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்– உமைக்கினிய
மைந்தன் கண நாதன் நங்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே! இம்மூன்றும் செய்!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



## என் அழகைப் பார்!

மனிதர்களோ, வேறு விலங்குகளோ இல்லாத ஒரு காட்டில் பலவகையான பழ மரங்களும், பூ மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. அந்த இடத்தில் சில முட்செடிகளும் இருந்தன.

ஒருநாள் மாதுளை மரத்தில் இருந்த மாதுளம்பழம் ஒன்று, அருகில் நின்ற அப்பிள் மரத்தில் இருந்த அப்பிள் பழம் ஒன்றைப் பார்த்து,

"நான்தான் உலகிலேயே அழகானவள். என் அழகுக்கு இங்குள்ள பழங்கள் ஒன்றும் ஈடாகாது," என்று தன்னைப் பற்றிப் பெருமையாகச் சொன்னது.

இதைக் கேட்ட அப்பிள் பழம்,

"இதை வேறு யாரிடமாவது போய்ச் சொல். உலகிலேயே நான்தான் அழகி. என் அழகுக்கு உன் அழகு ஈடாகாது," என்று தன் இடத்தை விட்டுக் கொடுக்காமல் பேசியது.

"ஏன் எனக்கு என்ன குறைச்சல்? என்னுள் இருக்கும் முத்துக்கள் எவ்வளவு அழகாக ஒளி வீசும் தெரியுமா? என்னை எத்தனை கவிஞர்கள் இலக்கியத்தில் வர்ணித்திருக்கிறார்கள் என்றாவது உனக்குத் தெரியுமா?" என்று மறுபடியும் சொன்னது மாதுளம்பழம்.

"ஏன் உன்னை மட்டும்தான் கவிஞர்கள் வர்ணித்தார்களா? என்னை எத்தனை பெரிய பெரிய அழகிகளுடன் ஒப்பிட்டுக் கவிஞர்கள் கவிதைகள் பாடி இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்று பதிலுக்குச் சொன்னது அப்பிள் பழம்.

"நீ என்னதான் சொன்னாலும் நான்தான் அழகி!" என்றது மாதுளம்பழம்.

"ஒருபோதும் இல்லை. நான்தான் அழகி!" என்றது அப்பிள் பழம்.

இவ்வாறு மாதுளம்பழமும், அப்பிள் பழமும் விடாமல் பேசின. இறுதியில் இவ்விரு பழங்களின் வாக்குவாதம் உச்ச நிலையை அடைந்தது. அருகில் இருந்த மரங்கள் எல்லாம் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தன.

திடீரென்று அருகிலிருந்த நெருஞ்சி மரத்திலிருந்த நெருஞ்சி முள்,

"என் மதிப்புக்குரிய தோழர்களே! அர்த்தமில்லாமல் நீங்கள் சண்டை போடுவதைப் பார்க்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது!" என்றது.

உடனே, மாதுளம்பழமும் அப்பிள்பழமும் தமது சண்டையை நிறுத்திவிட்டு நெருஞ்சி முள்ளைப் பார்த்தன.

"என் அழகின் முன்னால் உங்கள் இருவரின் அழகும் எம்மாத்திரம்? இனிமேலாவது என் முன்னால் உங்கள் அழகைப் பற்றிப் பேசாதீர்கள்!" என்று கூறியது.

இதைக் கேட்ட மாதுளம்பழமும், அப்பிள் பழமும் வாயடைத்துப்போய் நிற்க, நெருஞ்சி முள் தன் அழகைப் பற்றி விவரிக்கத் தொடங்கியது.

நல்லவர்கள் நடுத்தெருவுக்கு வந்து சண்டை போட்டால், பொல்லாதவர்களும் போக்கிரிகளும் நல்லவர்களாகி நியாயம் பேச ஆரம்பித்து விடுவார்கள்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



**தங்க மகுடம்:**

ஸ்பெயின் நாட்டில் உள்ள தேவாலயம் ஒன்றில் மரியாளின் உருவச்சிலைக்கு தங்க மகுடம் அணிவிக்கப்பட்டுள்ளது. இம்மகுடத்தில் 4835 வெள்ளை வைரங்களும், 3082 சிவப்பு வைரங்களும், 656 முத்துக்களும், 16 மரகதக் கற்களும், 7 செவ்வந்திக் கற்களும், 8 புஷ்பராகக் கற்களும், 60 இரத்தினங்களும், 5 பவளக்கற்களும், 4 நிறம் மாறும் மணிகளும் பதிக்கப்பட்டுள்ளன.



**தாரகை மீன்:**

நியூகினி நாட்டில் இருக்கும் செவுள்களே இல்லாத இம் மீன், பஞ்சு அடைத்த தலையணை போன்று காணப்படும்.




**வேட்டை நாய்கள்:**

ஸ்பெயினில் 16ம் நூற்றாண்டில் வேட்டை நாய்களுக்கு இரும்புக் கவசம் அணிவிப்பது வழக்கம்.

**நீண்ட வேர்கள்:**

கஸ்பியன் கடற்கரைப் பகுதியில் வளரும் இச்செடியின் பெயர் ஹலோஸ் பாஷிஷ் காஸ்பிகா. இச் செடியின் தண்டை விட இதன் வேர்கள் 14 மடங்கு நீளமானவை.



## வாரம் ஒரு நாடு

## கினியா – பிஸ்ஸௌ

தலைநகர் - பிஸ்ஸௌ.
பரப்பு - 36,125 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை - 11 இலட்சம்.
மொழி - கிரியோல், போர்த்துக்கீஸ் மற்றும் பழங்குடி மொழிகள்.
எழுத்தறிவு - 36%.
சமயம் - இஸ்லாம், கிறிஸ்தவம், பழங்குடி மதம்.
நாணயம் - பெஸோ.
தனிநபர் வருமானம் - 170 டொலர்.

**அமைவிடம்:**

மேற்கு ஆபிரிக்க நாடு. அட்லாண்டிக் கடலில் கடற்பரப்பைக் கொண்டுள்ளது. இதன் வடக்சே செனகலும், கிழக்கிலும், தெற்கிலும் கினியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.




**வரலாறு:**

போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் இருந்த கினியா-பிஸ்ஸௌ 1973ம் ஆண்டு சுதந்திரமடைந்தது.

**பொருளாதாரம்:**

முக்கிய தொழில் விவசாயம். அரிசி, தேங்காய், இனிப்பு உருளைக்கிழங்கு, சோளம், நிலக்கடலை, பனை, எண்ணெய் போன்றவை முக்கிய விளைபொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.06.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 250
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 248

**பரிசுக்குரியவர்:**
பெருமாள் புவனேஸ்வரன்,
நு/டெஸ்போட் தமிழ் வித்தியாலயம், நானு ஒயா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர். நிஷாந்தனி, இ/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | வைஷ்ணவி திலகன், சென் கெபிரியல் பாலிகா மகா வித்., ஹற்றன். |
| ஏ.பீ. நுஸ்ஹா, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம். | இஷ்தியாஸ் எம். ஆதி∴ப், ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| மே. சிவசங்கர், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | ஜீ.ஹேமானந், பாரதி வீதி, 2ம் குறுக்கு, மட்டக்களப்பு. |
| செல்வி அம்பிகா செல்வநாயகம், விஹார மகாதேவி மகளிர் வித்., கண்டி. | ∴பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| பாத்திமா சப்னா, அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | என். அரவிந்த், புனித அந்தோனியார் தேசிய கல்லூரி, வத்தளை. |

## சாரகா

மிகப் பழமை வாய்ந்த இந்திய மருத்துவமான 'ஆயுர்வேத மருத்துவ முறையின் தந்தை' எனக் கருதப்படுபவர் சாரகா. கி.மு. 2ம் நூற்றாண்டில், ஊர் ஊராக நடந்து போய், ஆங்காங்கே வியாதிகளுக்கு மருத்துவம் பார்க்கும் நாடோடி ஒருவருக்கு மகனாகப் பிறந்தவர்தான் சாரகா.

இன்று உலகின் கவனத்தை மிகப்பெரிய அளவில் கவர்ந்து வருகிறது ஆயுர்வேத மருத்துவமுறை. இந்த அதி அற்புத மருத்துவ முறையைத் தந்தவர்தான் சாரகா. இவர் இயற்றிய 'சாரகா சம் ஹிதா' இன்றளவும் ஆயுர்வேத மருத்துவமுறையின் வேத நூலாக மதித்துப் போற்றப்பட்டு வருகிறது. இந்நூல் இலத்தீன், ஜெர்மன், அரபி போன்ற பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

உணவுச் சமிபாடு, உயிர்ப்பொருள் மாறுபாடு, நடைக்காப்புத்திறன் ஆகியவற்றைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்திய பெருமை சாரகாவுக்கு உண்டு.



பெற்றோர்களின் உயிர் அணு, முட்டைகளின் குறைபாட்டால்தான் பரம்பரை குறைபாடுகள் உண்டாவதாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உறுதியாகக் கூறியவர் சாரகா.

'உடலில் பித்தம், கபம், வாயு என்ற மூன்று தோஷங்கள் இருக்கின்றன. இம் மூன்றின் அளவுகள் இடையூறுக்கு உள்ளாகும் போது வியாதிகள் ஏற்படுகின்றன' என்பது தான் சாரகாவின் சித்தாந்தம்.

## என் தெரியுமா?



சிலர் வயதாகியும், வயதிற்கேற்ற வளர்ச்சி இல்லாமல் குள்ளமாக இருப்பதன் காரணம் என்ன தெரியுமா?

மூளையின் அடியில் உள்ள பிட்யூட்டரி என்னும் நாளமில்லாத சுரப்பி சிலருடைய உடம்பில் வேலை செய்யாமல் இருந்து விடும். அவ்வாறு இருந்தால் அவர்கள் வளர்ச்சி அடையாமல் குள்ளமாக இருப்பார்கள்.

ஒருவர் உயரமாக வளர வேண்டுமெனில் அவருடைய எலும்புகள் நன்றாக வளரவேண்டும். எலும்புகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பது பிட்யூட்டரி சுரக்கும் பிட்யூட்டரின் என்னும் ஒருவகை ஹோர்மோன் ஆகும். இந்த ஹோர்மோன் குறைவாகச் சுரப்பதால் ஒருவர் உடல் வளர்ச்சிதான் குள்ளமாகத் தோன்றுமே தவிர அவரது அறிவாற்றலில் எந்தவிதக் குறைபாடும் உண்டாவதில்லை.

ஆனால் சிலருக்கு கழுத்தில் இருக்கும் நாளமில்லாச் சுரப்பியான தைரொய்ட் சுரப்பி, குழந்தைப் பருவத்தில் சரிவர இயங்காவிட்டால்-உடம்பு வளர வேண்டிய அளவு வளராது. அத்துடன் அறிவும் மங்கிப்போகும்.

## நீர்மூழ்கிக் கப்பல்

கடலுக்கு அடியில் செல்லும் கப்பலைத் தான் நீர்மூழ்கிக் கப்பல் என்று சொல்வார்கள்.

டச்சு நாட்டில் வாழ்ந்த கார்னிஸ் வோரன்ட்ரபிள் என்ற விஞ்ஞானி, மூடிய அமைப்புடன் கூடிய தோல் படகு ஒன்றை 10 அடி ஆழமுள்ள நீருக்குள் ஓட்டிக்காட்டினார். இதுதான் முதல் நீர்மூழ்கிக் கப்பல் ஆகும். இது நடந்தது 1720ம் ஆண்டு.

அதன் பின்னர் 1797ம் ஆண்டு அமெரிக்க விஞ்ஞானி டேவிட் புஷ்னல் என்பவரும்,



ரொபேர்ட் புல்டன் என்பவரும் 'நாட்டிலஸ்' என்ற நீர்மூழ்கிக் கப்பலை அமைத்தனர்.

நீர்மூழ்கிக் கப்பலின் நீர் அறைகளில் தண்ணீர் நிரப்பப்படும் போது, கப்பலின் நிறை அதிகரித்து, அது கடலில் மூழ்க ஆரம்பிக்கும். நீர்மூழ்கிக் கப்பல் நீருக்கு மேலே வர வேண்டிய சமயங்களில் நீர் அறைகளில் இருக்கும் தண்ணீர் வெளியேற்றப்படும். தண்ணீர் வெளியேறியதும் கப்பலின் நிறை குறைந்து, அது மேலே மிதக்க ஆரம்பிக்கும்.

இந்த அடிப்படையில்தான் நீர்மூழ்கிக் கப்பல்கள் நீரில் மூழ்கியும், மிதந்தும் செயற்படுகின்றன.

## குளிர்கால ஒலிம்பிக் (WINTER OLYMPICS)



• **விண்டர் ஒலிம்பிக் எனப்படும் குளிர்கால ஒலிம்பிக் எப்போது ஆரம்பமானது?**
1924ம் ஆண்டில் ஆரம்பமானது. 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். இவை ஜனவரி அல்லது பெப்ரவரி மாதங்களில் 16 நாட்கள் நடைபெறும்.

• **குளிர்கால ஒலிம்பிக் கடைசியாக எப்போது நடைபெற்றது?**
1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஜப்பானில் உள்ள நாகனோ என்ற இடத்தில் நடைபெற்றது. இது 18வது குளிர்கால ஒலிம்பிக் ஆகும்.

• **இதில் எத்தனை நாடுகள் கலந்து கொண்டன?**
72 நாடுகளில் இருந்து 2450 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இதில் 827 பெண் போட்டியாளர்களும் அடங்குவர்.

www.padippakam.com



## அமோக ஆரம்பம் 01

# மேற்கே ஒரு குற்றம்

**எழுத்துலக வேந்தன் சுஜாதா**

20 வருடங்களுக்கு முன்னர் தமிழக சஞ்சிகை ஒன்றில் வெளியாகி பிரமாதமான வரவேற்பைப்பெற்ற அட்டகாச நாவல் இது.

"யுவர் ஆனர். இந்த ஆள் அனாவசியமாகப் பொய் சொல்லுகிறார். இவர் சாட்சியம் முழுவதுமே நம்பக்கூடியதல்ல. சம்பவம் நடந்த தினத்தன்று இவர் ஊரிலேயே இல்லை என்று ஸ்தாபிதமாகி விட்டது."

"அப்ஜெக்ஷன்!"

கணேஷ் எதிர்தரப்பு வக்கீலை முறைத்தான். அப்ஜெக்ஷன் கோபாலச்சாரி என்று பெயர் வைக்க வேண்டும். நீதிபதியைப் பார்த்தான். அவர் கடிகாரத்தைப் பார்த்தார்.

"மிஸ்டர் கோபாலச்சாரி! உங்கள் மறுப்பை மத்தியானம் சொல்லுங்கள். தி கோர்ட் இஸ் அட்ஜர்ன்ட்! இரண்டு மணிக்கு மறுபடி கூடலாம்."

கணேஷ் சலித்துக் கொண்டான்!

"இழுபறிடா இந்தக் கேஸ்?" என்றான் வசந்திடம்.

வசந்த், "பேசாம காம்ப்ரமைஸ் பண்ணிடலாம் பாஸ். ஆச்சாரியாருக்கு ஒரு வடை வாங்கிக் கொடுத்தா நம்ம கட்சிக்கு வந்துடுவார்!" என்றான்.

"சேச்சே! ஆச்சாரியாரா விடுவார்? கூசாம எல்லாரும் பொய் சொல்றாங்க வசந்த். அதான் எனக்குப் பிடிக்கலை!"

"இந்தக் கோர்ட்டிலே ஒவ்வொரு செங்கல்லுமே பொய்யை எதிரொலிச்சு ஹலோ! அது யாரு?"

பார்வையாளர்களின் பகுதியில் தனியாக உட்கார்ந்து அவர்கள் இருவரையும் நேராகப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பெண் எழுந்து அவர்களை நோக்கி நடந்து வந்தாள்.

கணேஷ் கிளம்ப, வசந்த், "கொஞ்சம் இருங்க பாஸ்; பட்சி நம்மை நோக்கித்தான் வருது!" என்றான்.

அந்தப் பெண் அருகில் வர, "எஸ்?" என்றான் வசந்த். அவள் கண்களில் சற்று அச்சம் இருந்தது. இருபது வயதிருக்கலாம். கண்களில் அடிக்கடி மையிட்டு அழிந்த சுவடு தெரிந்தது. பெரிய கண்கள், வட்ட முகம், சற்று குட்டையான பெண். கச்சிதமான உடலமைப்பு. நன்றாக ஓடுவாள் போலிருந்தது.

"மிஸ்டர் கணேஷ்! உங்களை நான் தனியாச் சந்திக்கணும்."

"இந்தக் கேஸ் விஷயமாகவா?" என்றான் கணேஷ்.

"இல்லை. வேற விஷயமா."

கணேஷ் கை கடிகாரத்தைப் பார்த்தான். 1.05 என்றது எல்.ஸி.டி. கடிகாரம். கேஸ் கட்டுக்களைக் கொஞ்சம் படிக்க வேண்டும். பசி பிராணன் போகிறது. இந்த சமயத்தில் ஒரு புதிய பெண்ணின் விவகாரத்தைக் கேட்க விருப்பமாக இல்லை.

"ஸாரி! சாயங்காலம் பார்க்கலாம். இப்ப எனக்கு அவகாசம் இல்லை."

அந்தப் பெண்ணின் கண்களில் ஏமாற்றம் தெரிந்தது. அது வசந்தின் கண்களிலும் பிரதிபலித்தது. வசந்துக்குப் பெண்கள் என்றால் ஒரு தனி அவஸ்தை.

"ரொம்ப முக்கியமான விஷயம். எனக்கு என்ன செய்யறது, யாரைக் கேட்கிறதுன்னே தெரியலை. உங்களைப் பத்திக் கேள்விப் பட்டிருக்கேன். உங்க ஆபீசுக்குப் போனேன். கோர்ட்டிலே இருக்கிறதா சொன்னாங்க. இங்கே வந்துட்டேன். அப்பலேர்ந்து உங்களுக்காகக் காத்திருக்கேன். மாட்டேன்னு சொல்லாதீங்க. ஒரு அரை மணி போதும்."

"மாட்டேன்னா சொன்னேன்? சாயங்காலம் பேசலாம்னு தானே சொன்னேன்."

"நீங்க?"

"என் பேர் வசந்த். 'நீங்க' எல்லாம் எனக்குப் பிடிக்காது. கால் மி வசந்த்!"

"வசந்த் புதுசா ஒரு கேஸ் ஆரம்பிச்சிறதுக்கு இப்ப டயம் இல்லை. இன்னும் இந்தக் கேஸ் காகிதங்களையே சரியாப் பார்க்கணும். சாப்பிடணும்..."

"சாப்பிடறபோது உங்ககிட்ட சொல்லலாமா?"

"சாப்பிடறபோதுதான் நாங்க இந்தக் கேஸை டிஸ்கஸ் பண்ணப் போறோம். கோர்ட்டு கலைஞ்சதும் உங்களை சந்திக்கிறோம். என்ன?"

மிகுந்த ஏமாற்றத்தில் அவள் கண்களில் லேசாகக் கண்ணீர் தெரிந்தது.

"உங்க பேர் என்ன?"

"தீபா."

"தீபா! பிரகாசமான்னா இருக்கணும்! இப்ப என்ன ஆயிடுத்து? அழறீங்களே?" என்றான் வசந்த்.

"மூணு மணிக்கு நான் ஒத்திகைக்குப் போகணும்."

"போங்க!" என்றான் கணேஷ்.

"ஒத்திகையா? நீங்க நாடகத்தில் நடிக்கிறீங்களா?"

"இல்லை. நாட்டியம்! கலாராதனான்னு ஒரு க்ரூப்ல இருக்கேன்!"

"இருங்க!" என்றான் கணேஷ்.

"வந்திடுவோம். கேஸ் முடிஞ்சதும் நீங்க சந்திக்கலாம். கொஞ்சம் வெய்ட் பண்ணிங்கன்னா சட்டுபுட்டுன்னு முடிச்சுட்டு...!"


"வசந்த்!"

"இப்ப முடியாதா?"

"சொல்லிட்டாரே! உங்களை ஒரு டான்ஸ்ல பார்த்த ஞாபகம்...!"

"வசந்த்! இப்ப வரப்போறியா இல்லையா?"

"வந்துட்டேன் பாஸ். ஸீ லேட்டர் தீபா!"



அவள் தீர்மானமின்றி நிற்க, வசந்த் பிரியாவிடை கொடுத்துவிட்டு கணேஷுடன் சேர்ந்து கொண்டான்.

நடந்தார்கள். அவள் வெறித்து நின்று கொண்டிருந்தாள். ஹைகோர்ட்டின் பிரதான வாசலில் கறுப்புக் கோட்டு வக்கீல்களின் பின் கட்சிக்காரர்கள் அலைந்து கொண்டிருக்க, பஸ்கள் கூட்டமின்றி மத்தியானச் சாப்பாட்டுக்குச் சென்று கொண்டிருக்க, புதிய கட்டடம் கட்டப்படும் இடத்தில் எலக்ட்ரிக் ஹாமர் படபடக்க, சைனா பஜாரின் பிளாட்பாரங்களில் கடவுள்களின் படங்கள்கூட எதை எடுத்தாலும் எட்டணாவுக்கு விற்கப்பட, ஒரு நிழலான ஆசாமி அவர்களிடம் ஒரு வெயில் கண்ணாடி விலைக்கு வேண்டுமா? என்று கேட்டான். "இஜ்ஜாதகருடைய கையில் தனரேகை தீர்க்கமாக இருப்பதால், வருகிற தைமாதம் பதினைந்து தேதிக்குள் திரவியங்கள் செழித்துக் கொட்டத் தொடங்கும்!" என்று ஒரு லென்ஸ் மூலம் ஒரு சவலைக் கையைப் பார்த்து பலன் சொல்லிக் கொண்டிருந்தான் எட்டணா ஜோசியன். சிறகு ஒடிந்த கிளிகள் அழுக்குச் சீட்டுக்களைப் புரட்டித் தேர்ந்தெடுத்துவிட்டு, நெல் மணிகள் பெற்றுக் கொண்டு சமர்த்தாக தம் சிறைக்குத் திரும்பின. ஒரு பெண் பிளாட்பாரத்தில் அழுது கொண்டிருந்தாள். ஆயிரம் பேர் கவனிக்காமல் நடந்து சென்றார்கள். கணேஷும், வசந்தும் கீதா பவனுக்குச் சென்று பாம்பே மீல்ஸ் ஆர்டர் செய்தார்கள்.

"சேச்சே! நீங்க சில சமயங்களில் ரொம்ப ஹார்ஷ்" என்றான் வசந்த்.

"ஒரு கேஸை எடுத்துக்கிட்டா அதை உருப்படியா முடிச்சுட்டு அப்புறம் அடுத்ததுக்குத் தாவலாம்!"

"டிவோர்ஸ் கேஸா இருக்குமோ?"

"இல்லை. கல்யாணம் ஆகியிருக்காது. கழுத்தில் ஒண்ணையும் காணோம்!"

"நான் கழுத்தைப் பார்க்கலை பாஸ்!"

"கழுத்துக்குக் கீழே பார்த்திருப்பே!"

"இல்லை பாஸ். அவ கண்களில் ஒரு அவசரம் ஒரு அச்சம் இருந்ததே அதைப் பார்த்துக்கிட்டிருந்தேன்."

"எந்த அவசரமும் சாயங்காலம் வரை தாமதிச்சே ஆகணும். இந்தக் கேஸ் போற போக்கு நல்லாவே இல்லை. கோட்டைவுட்டுக் கிட்டிருக்கோம். பைலை எடு."

அதற்குப் பின் அவர்கள் அந்தப் பெண்ணை மறந்துவிட்டார்கள். கோர்ட்டுக்குத் திரும்பிச் சென்றபோது அவள் இல்லை. கோபாலச்சாரியார் மேலும் பொய்களை ஜோடித்தார். நீதிபதிக்கு அருகில் இருந்த டைப் இயந்திரம் அவைகளை ஒன்றுவிடாமல் வாங்கி அடித்துக் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் காலத்து மின் விசிறி ஒன்று 'குய்க் குய்க்' என்று சுற்றிக்கொண்டிருந்தது. கணேஷ் வாதாடும் வழக்கு அதன் ஆறாவது வருஷத்தில் இருந்தது. யார் ஜெயித்தாலும் தோற்ற கட்சி அப்பீல் செய்யப் போகிறது. சுப்ரீம் கோர்ட் வரை அது நிச்சயம் செல்லும்.

வெளியே வானத்தில் ஒரு ஏரோப்ளேன் விரைந்து கொண்டிருக்க நீதி ஒரு தேர்போல் மெல்ல மெல்ல நாட்களாய் வருஷங்களாய் நகர்ந்து கொண்டிருந்தது. மூன்றரை மணிக்கு கோர்ட் கலைந்துவிட்டது. நீதிபதி கம்பராமாயணம் பற்றிப்பேச புரசைவாக்கம் போக வேண்டும்.

கணேஷும், வசந்தும் கணேஷின் சேம்பருக்கு வந்தார்கள். அந்தப் பெண் அங்கே காத்திருப்பாளோ என்று எதிர்பார்த்தான் வசந்த்.

"கோவிச்சுக்கிட்டு போயிருப்பா!" என்றான்.

"யாரு?"

"தீபா"

"ஓ. அவளா? ஆளைவிடு. அந்த ஏ.ஐ.ஆர். 1971 ஐ எடு."

ராமு இரண்டு கோப்பைகளில் டீ கொண்டு வந்தான். கணேஷ் அருந்திக் கொண்டே படித்தான்.

"இல்லை பாஸ். அந்தப் பொண்ணு ஒரு மாதிரி பயந்திருந்தாப்பலே இருந்தா."

"அவ நம்மை விட்டுட்டாலும், நீ அவளை விட மாட்டியா?"

"அவளைத் தட்டி கழிச்சு தப்புப் பண்ணிட்டம்னு எனக்குப் பட்சி சொல்லுது. ராமு, யாராவது ஒரு பொண்ணு வந்திருந்தாளா?"

"வந்திருந்தாங்க!"

"எப்ப?"

"ஒரு மணி ஒண்ணரை மணி இருக்கும். அப்பலேர்ந்து காத்திருந்தாங்க!"

"சின்னப் பொண்ணா?"

"ஆமாங்க. அப்புறம் ஒரு ஆளு வந்தாரு. அந்த அம்மாவைக் கேட்டாரு நீங்க யாருக்காக காத்திருக்கீங்கன்னு? கணேஷ் அய்யாவுக்குன்னாங்க! கணேஷ் அய்யாதான் அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாருன்னு கூட்டிக்கிட்டுப் போயிட்டாரு டாக்ஸியில!"

"என்னடா உளர்றே! பத்தடியில் இருக்க கோர்ட்டுக்கு டாக்ஸில போனாங்களா?"

"கணேஷ் அய்யா வேறு ஏதோ ஆபீசில் அவுங்களுக்காகக காத்திருக்கிறதா சொல்லி அழைச்சிக்கிட்டுப் போனாப்பலே."

"சரிதான். இதுக்கு முன்னாடி அந்த ஆளைப் பார்த்திருக்கிறாயா?"

"இல்லீங்க. புது ஆளு."

கணேஷ் நிமிர்ந்தான். "என்னடா?"

"அந்தப் பெண் இங்கே வந்து காத்திருக்கா. ஒரு ஆள் நீங்க கூப்பிட்டு அனுப்பிச்சிங்கன்னு சொல்லி அவளை டாக்ஸிலே அழைச்சுக்கிட்டுப் போயிருக்கான்."

"பாவங்க, ரொம்ப நேரம் காத்திருந்திச்சு. பயந்த மாதிரி அடிக்கடி இங்கேயும் அங்கேயும் பார்த்துக்கிட்டே இருந்துச்சு பேப்பர்லே கிறுக்கிக்கிட்டே இருந்துச்சு!"

மேஜைமேல் ஒரு காகிதத்தில் பால் பாயிண்ட் பேனாவினால் வட்டங்கள் வட்டங்களாக வரைந்திருந்தாள், தீபா!

தீபா எங்கே?

"ஸம்திங் ஃபிஷி" என்றான் வசந்த்.

"வினோதமாத்தான் இருக்கு வசந்த். அவ ஏதோ குழுவில் டான்ஸ் ஆடற பொண்ணுன்னு சொன்னாளே?"

"கலாராதனா, ஞாபகம் இருக்கு."

"கலாராதனாவுக்கு டெலிஃபோன் செஞ்சு அவ அங்கே வந்துட்டாளா கேளு. வரலைன்னா அவ வீட்டு விலாசம் கேளு!"

வசந்த் அதற்குள் டைரக்டரியைப் புரட்டிக் கலாராதனாவைத் தேடினான்.

"ஹலோ கலாராதனா... மிஸ் தீபாவோட கொஞ்சம் பேசணும்."

மறுமுனையில் அதிர்ச்சி தெரிந்தது.

(தொடர்ந்து வரும்)

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

## பயணம் - 07

**ஏ.கே. ராஜகோபால்**

தம்பிப்பிள்ளைத் தண்டையல் தலைமையில் 'அன்ன பூரணி அம்மாள்' தனது பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

தண்டையலுக்கு உதவியாக, மற்றைய கடலோடிகள் ஒவ்வொரு வேலையையும் செய்வார்கள்!

சங்கரதாஸ் அடிக்கடி தனது 'சாண்டோ' விளையாட்டுக்களைச் செய்து காட்டுவார்!

எவ்வளவு கடினமான பயணமென்றாலும், பொழுதுபோவது தெரியாமல், கப்பல் நகர்ந்து கொண்டிருந்தது!

றொபின்சன் இருக்கிறாரே-

அவர் கடலோடுவதில் ஒரு வீரர்! சாதனைக்காரர்! துணிச்சல் நிறைந்தவர்!

'அன்னபூரணி'க்கு முன்னரே, பத்துத்தொன் படகில் உலகத்தை வலம் வந்து சாதனை நிகழ்த்தியவர்!

பத்துத்தொன் படகில், உலகத்தைத் தன்னந்தனியனாக வலம் வந்த றொபின்சனுக்கு ஒன்பது பேருடன் பயணம் செய்வது பெரிய விஷயமாக இருந்திருக்க மாட்டாதல்லவா?

கருங்கடலில் ஏழு, எட்டு மைல் வேகத்தில் கப்பல் சென்றுகொண்டிருந்தது-

கப்பலின் முன் அணியத்தில் நின்று கொண்டு றொபின்சன் கடலுக்குள் குதிப்பார்!

நீச்சலடித்து விளையாடுவார்! பின்னர் கப்பலைவந்து பிடித்து, ஏறுவார்!

மீண்டும் கடலுக்குள் குதிப்பார்!

அவருக்கு இது ஒரு விளையாட்டு! அவருடைய இந்த 'விளையாட்டை' தண்டையலும் கடலோடிகளும் இரசிப்பார்கள். றொபின்சனுக்கு ஓரளவு தமிழ் பேசத் தெரியும்.

குழந்தைகள் பேசும் மழலைத் தமிழாக அது இருக்கும்!

கடலோடிகள் பேசும் தமிழ் அவருக்குப் புரியும். அவர்கள் தமிழில் பேசினால், புரிந்துகொண்டு பதில் சொல்லுவார்!

♦♦

ஏடன் துறைமுகத்தை 'அன்னபூரணி' வந்து சேர்ந்து விட்டாள்!

மழையே கண்டிராத பூமி! ஒரே வறட்சி!

இதுவரை இரண்டாயிரம் மைல் தூரத்தைக் கப்பல் கடந்து விட்டது!

பயணம் வெற்றி பெற்றே தீரும் என்ற நம்பிக்கை தண்டையலுக்கும், கடலோடிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது.

ஏடனை அடைந்த அன்றைய தினம் அலுப்புத்தீர உறங்கினார்கள்.

குகையும், மலையுமாக வரண்டு போய்க் கிடந்த ஏடன் துறைமுகப் பகுதியில், வல்வெட்டித்துறை 'அன்னபூரணி' நங்கூரமிட்டு நிமிர்ந்து நின்றாள்!

பகல் பொழுதை அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்ப்பதிலும், சாப்பாட்டுக்கும், தூக்கத்துக்கும் கப்பலுக்கு வருவதுமாக தம்பிப்பிள்ளை கோஷ்டியின் நேரம் போய்க் கொண்டிருந்தது!

மீண்டும் றொபின்சனுக்கு ஒரு தவிப்பு!

தன் அன்புக்குரிய இனியாளைக் காண வேண்டுமென்ற துடிப்பு றொபின்சனுக்கு ஏற்பட்டுவிட்டது!

ஏடன்வரை தன் இதயம் கவர்ந்தவள் இல்லாது தனித்தே பயணம் செய்தது இப்போது அவருக்கு ஒருவித 'சலிப்பை'த் தந்தது!

ஏடனிலிருந்து 'அன்ன பூரணி' பயணத்தைத்தொடர அவருடைய அன்புக்குரிய 'புளொறின்' தேவைப்பட்டாள்!

றொபின்சன் ஏடனிலிருந்து அமெரிக்காவுக்குப் பறந்து சென்று புளொறினை அழைத்து வர முடிவு செய்தார்.

அமெரிக்கா போய்த் திரும்பிவரும்வரை கப்பலைப் பார்த்துக் கொள்ளும்படி தம்பிப்பிள்ளை தண்டையலிடம் ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டார்!

தன்னை நம்பிப் புறப்பட்டவர்களுக்கு தேவையான வசதிகளையெல்லாம் செய்து கொடுத்துவிட்டே அவர் அமெரிக்காவுக்குப் பறந்தார்!

உணவு, உடை, சம்பளம் என்பனவற்றை கை நிறையக் கொடுத்ததினால், தண்டையல் கோஷ்டி கடைசிவரை றொபின்சனுக்கு நேர்மையாக உழைத்தார்கள்!

றொபின்சன் திறமைக்குத்தான் முதலிடம் அளித்தார்!


மற்றவர்களின் சொந்த விஷயங்களில் தலையிடவே மாட்டார்!

மேலை நாட்டவர்களிடமிருந்து நாம் படிக்க வேண்டிய பல பாடங்களில் இது ஓர் உயரிய பண்பாகும்!

குறிப்பாக, நாம் இந்த விஷயத்தை நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்!

ஒருவன் கொஞ்சம் நல்லாயிருக்கிறானென்றால், பொறுக்கமாட்டான்!

காட்டிக் கொடுப்பதே முதல் கைங்கரியமாக இருக்கும்!



'தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை; எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும்.'

இப்படியான 'கழுத்தறுப்பு' நீங்கும் போதுதான் நாம் உயர்வோம்!

ஏதோ ஒரு தொழிலைச் செய்து கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறான் என்றால்-

அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், காட்டிக் கொடுத்து 'ஆத்மதிருப்தி' அடைவது, நம் மத்தியிலிருந்து அகலும் போதுதான் எமக்கு விடிவுகாலம் பிறக்கும்!

மேலை நாட்டவர்களின் வேகமான முன்னேற்றத்துக்கு, அவர்களிடமுள்ள பரந்த நோக்கமே காரணம்!

றொபின்சனிடமுள்ள பண்புகளைப் பற்றி இரத்தினசாமியும், சேது நவரத்தினராசாவும் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது,

என் உள்ளத்தில் மேற்சொன்ன சில எண்ணங்கள் அலைமோதின.

தம்பிப்பிள்ளைத் தண்டையலும் ஒரு தடவை இலங்கை சென்று வர விரும்பினார்.

இவருடன், சேது நவரத்தினராசா, நடராசா, 'சாண்டோ' சங்கரதாஸ் ஆகியோரும் சேர்ந்து கொண்டார்கள்!

இரத்தினசாமி, சபாரத்தினம், சிதம்பரப்பிள்ளை ஆகியோர்களிடம் தம்பிப்பிள்ளைத் தண்டையல் கப்பலை ஒப்படைத்தார்!

இலங்கை போகும் தண்டையலுக்கும், மற்ற மூவருக்கும் பரிசுப் பொருட்களும், சன்மானமும் வழங்கி,

ஃபிரான்ஸ் நாட்டு உல்லாசப்பிரயாணிகள் கப்பலான 'அலெக்ஸ் சாந்திரியா'வில், இரண்டாம் வகுப்பில் அவர்களை இலங்கைக்கு றொபின்சன் வழி அனுப்பி வைத்தார்.

இதேசமயம்-

றொபின்சன் அமெரிக்காவுக்குப் பறந்தார்!

(அடுத்த வாரமும்...)


படிப்பகம்

www.padippakam.com




# மேக்கப் புன்னகை

**கேள்வி:** நடிகர்களே படமுதலாளிகளாக மாறி வருகிறார்களே?
**பதில்:** நடிகர்கள் கையில் பணம் சேர்ந்ததும் கொள்ளை இலாபக் கனவில் படமுதலாளியாகிறார்கள். பட முதலாளிகளோ குப்பைப் படமெடுத்து நொடித்துப்போய் நடிகராகிறார்கள். வேறு வழி?

*ஆர். ராஜதுரை, இலங்கை. 'கலை' 1949 ஜூன் இதழில்...*

"என்ன சொல்றான் அவன்?" பரபரத்தாள் மதுமிதா.

"லைனைக் கட் பண்ணிட்டான்." என்றாள் ஏமாற்றமாகத் துர்க்கா.

"என்ன சொன்னான்? அதைச் சொல்லு?"

"எடுத்துக்கிட்ட காரியத்தை பாதியில நிறுத்தற பழக்கம் எனக்குக் கிடையாது. மறுபடி ஃபோன் செய்யாதீங்கன்னு வெச்சிட்டான்."

மதுமிதாவின் முகத்தில் பீதி படர்ந்தது.

மயக்கம் வந்தது.

"நான் மறுபடி முயற்சி பண்றேன். தைரியமா இரும்மா."

செல்ஃபோனைத் தொடர்பு கொள்ள மீண்டும் முயன்றாள் துர்க்கா. வியர்வையில் துர்க்காவின் ஜாக்கெட் நனைந்தது. எதிர்முனையில் ஃபோன் ஒலிக்கத் தொடங்கியது. மைக்கேல் அல்ஃபோன்ஸா அதை எடுக்க வேண்டும், பேச வேண்டும் என்று அவசர அவசரமாக எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொள்ளத் துவங்கினாள்.

"ஹலோ!" என்றான் மைக்கேல் அல்ஃபோன்ஸா!

"நான் துர்க்காதான் பேசறேன்"

"உங்களை மறுபடி ஃபோன் செய்ய வேணாம்னு சொன்னேன், இல்லை?"

"தயவு செஞ்சி கட் பண்ணிடாதீங்க. நான் சொல்றதைக் கொஞ்சம் முழுசாக் கேளுங்க"

"என்ன கேக்கணும்?"

"அந்தப் பையனைத் தீர்த்துடச் சொன்னாப்போ நிலைமை வேற! இப்ப நிலைமை வேற. எனக்குத் தெரியாம அவங்க ரெண்டுபேரும் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. இப்ப அவன் என் மகளோட கணவன்! அவனை நீங்க தீர்த்துட்டா என் மக விதவையாயிடுவா! அதை என்னால சகிச்சுக்க முடியாது."

"இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றீங்க?"

"அந்த சந்திரசேகரை எதுவும் செய்ய வேண்டாம். பத்திரமா அனுப்பி வெச்சிட்டாப் போதும்."

"நான் மெனக்கெட்டு திட்டம் போட்டேனே. கொஞ்சம் செலவெல்லாம் செஞ்சிட்டேனே."

"இதோ பாருங்க! ஒரு உயிரை எடுக்கணும்னு நான் உங்களுக்குப் பேசின அதே தொகையை இப்ப அந்த உயிரை நீங்க எதுவும் தொந்தரவு செய்யாம இருக்கிறதுக்குத் தர்றேன்."

"அப்படியா? இதில மாற்றம் இல்லையே?"

"இல்லை. கண்டிப்பாத் தர்றேன்."

"அப்படின்னா விட்டுர்றேன்!"

"ரொம்ப தேங்க்ஸ்!" என்று பெருமூச்சு விட்டாள் துர்க்கா. ஃபோனை வைத்துவிட்டு, மதுமிதாவைப் பார்த்தாள்.

"மதுமிதா, அவனைத் தீர்க்கறதுக்காகப் பேசின அதே தொகையைக் கொடுத்துடறேன்னு சொன்னதும் சந்திரசேகரை விட்டுடறதாச் சொல்லிட்டான். இப்ப திருப்திதானே உனக்கு?" என்றாள்.

மதுமிதா அவளை வெறுமையாகப் பார்த்தாள்.

"இதோ பார் மது, நீ என் மேல ஆத்திரப்படறதில அர்த்தமே இல்லை. உனக்கு அவன் கணவனாகறதுக்கு முன்னாடி நான் அந்த விபரீத யோசனையில இறங்கினேன். உன்னைப் பெத்தவடி! என்னதான் நீ என்னை எதிரிமாதிரி நினைச்சி தூர வெச்சிப் பழகினாலும் நீ என் இரத்தம்! உன் பொட்டழிக்கிறதுக்கு நினைக்கிற மகாபாவி இல்லை நான். அதே சமயம் கொஞ்சம் யோசிச்சுப் பாரு. இப்ப நான் மட்டும் மைக்கேல் அல்ஃபோன்ஸாகிட்டே கெஞ்சிப் பேசி பணம் தர்றதா ஒப்புக் கலைன்னா என்ன ஆகியிருக்கும்? உன் புருஷனை மரணத்தோட விளிம்புலேர்ந்து காப்பாத்தியிருக்கிறதும் உன் அம்மாதான். உன் பூவுக்கும் பொட்டுக்கும் உயிர் கொடுத்திருக்கிறது நான்தான். அதனால..."

நிறுத்தி அவளைப் பார்த்தாள் தயக்கத்துடன்.



"அதனால?"

"அதனால உங்க ரெண்டுபேருக்கும் கல்யாணம் ஆன விஷயம் இரகசியமாவே இருக்கட்டும். மக்களுக்குத் தெரிய வேணாம். நீங்க இரகசியமாவே குடித்தனம் நடத்துங்க. ஒரு அஞ்சே அஞ்சி வருஷம் நீ சினிமாவுல நடிச்சுக் கொடுத்திடு. அதுக்கப்புறம் உங்க கல்யாண விஷயத்தை அறிவிச்சுக்கோ! என்ன சொல்றே?"

## பட்டுக்கோட்டை பிரபாகர்

துர்க்காவை ஒரு புழுவைப் பார்ப்பது போல முகத்தைச் சுளித்துப் பார்த்தாள் மதுமிதா.

"நீ மாறவே மாட்டியா? இப்பக்கூட உனக்கு பணம்தான் முக்கியமா? உன் இரத்தம்னு சொல்றியே, உன் இரத்தத்தோட உணர்வுகளை கடைசிவரைக்கும் புரிஞ்சுக்கவே போறதில்லையா நீ? சந்திரசேகரைக் கொலை செய்யச் சொன்னதும் உன் சுயலாபத்துக்சாகத்தான்! இப்ப கொல்ல வேணாம்னு சொன்னதும் உன் லாபத்துக்காகத்தானா? எப்பவுமே நான் ஒரு மெஷின்தானா? அப்படித்தான் உனக்கு நான் தெரியறேனா?"

"இல்லை, மது, நான் என்ன சொல்ல வர்றேன்னா...."

"வேணாம். நீ எனக்குச் எதுவும் சொல்ல வேணாம். நீ வெளில போ! நீயும் நானும் சந்திக்கிறது இதுவே கடைசித் தடவையா இருந்தா நான் சந்தோஷப்படுவேன். போயிடு! என்னை விட்டுப் போயிடு! என் வாழ்க்கைய விட்டு தயவு செஞ்சி போயிடு!"

கையெடுத்துக் கும்பிட்டு உணர்ச்சி பொங்க அழுகையோடு கத்தினாள் மதுமிதா. அவளைப் பார்த்தபடி நின்றிருந்த துர்க்காவின் தோளில் கை வைத்து மெதுவாகச் சொன்னார் ஈஸ்வர், "வந்துடு துர்க்கா, போயிடலாம்...."

மெதுவாக வெளியே நடந்தாள் துர்க்கா.

**

புதிய ஆடைகளில் மலர்ந்த முகங்களுடன் சந்திரசேகரும், மதுமிதாவும் அமர்ந்திருக்க... எதிரே நாற்காலியில் பத்திரிகையாளர்கள் அமர்ந்திருந்தார்கள். கேமிராக்கள் அவர்களை விடாமல் படமெடுத்தன. வீடியோ கேமிராக்கள் சுற்றிச் சுற்றி வந்தன. எல்லாக் கேள்விகளுக்கும் பொறுமையாக புன்னகையுடன் பதில் சொன்னாள் மதுமிதா.

"எதுக்காக இரகசியமா- அதுவும் ஆஸ்பத்திரியில கல்யாணம் செய்துக்கிட்டீங்க?"

"என் சூழ்நிலை அப்படி! இந்தக் கல்யாணத்துல எதிர்ப்பு இருந்தது. அதைச் சமாளிக்கத்தான் அப்படி ஏற்பாடு செய்ய வேண்டியதாயிடுச்சு!"

"எதிர்ப்புக் காட்டினது யாரு? உங்கம்மாவா?"

"அதெல்லாம் இப்ப வேணாமே! நடந்து முடிஞ் சிடுச்சி."

"இனி தொடர்ந்து சினிமால நடிப்பீங்களா?"

"இல்லை. மாட்டேன். இப்ப பாதில இருக்கிற சில படங்களை மட்டும்தான் நடிச்சி முடிச்சிக் கொடுக்கிறதா இருக்கேன்."

"தொடர்ந்து நடிக்கிறதுல என்ன பிரச்சனை? எத்தினையோ நடிகைகள் கல்யாணத்துக்கு அப்புறம் நடிக்கிறாங்களே... உங்க கணவர் நடிக்கக்கூடாதுன்னு சொல்லிட்டாரா?"

"இல்லை. என் விருப்பப்படி நான் செயல்பட அவர் எனக்கு முழு சுதந்திரமும் கொடுத்திருக்கிறார். இனி நடிக்கிறதில லைன்னு நான்தான் முடிவு செஞ்சிருக்கேன்."

"இந்த முடிவுக்கு காரணம்? இந்த சினிமாதான் உங்களுக்கு பேர், புகழ், பணம் எல்லாம் சம்பாரிச்சுக் கொடுத்தது."

"உண்மை! ஆனா அதெல்லாம் நான் விரும்பி ஏத்துக்கிட்ட விஷயங்கள் இல்லைங்கறதும் உண்மை. என் வாழ்க்கை, இலட்சியம், நடிகையாகறதா இல்லை. நான் இதில நுழைக்கப்பட்டேன். நானா இயங்கல. இயக்க வைக்கப்பட்டேன். மதுமிதாங்கிற நடிகை ஆக, பிரபலமாக, மதுமிதாங்கற தனி மனுஷி கொஞ்சம் கொஞ்சமா காணாமப் போயிட்டா! நிறைய போலித்தனங்களை எனக்கு விருப்பமில்லாமலேயே ஏத்துக்க வேண்டிய கட்டாயத்துல நான் இருந்தேன். எனக்கு ஒரு ஒரிஜினாலிட்டி கிடைச்சிருக்கிற மாதிரி உணர்றேன். ஒரு விடுதலை உணர்வு மனசுல ஏற்படுது. இனிமே இந்த சமுதாயத்தில என்னை எப்படி அடையாளப்படுத்திக்கிற முயற்சிகள்ல இறங்குவேன்."

"உங்கள் கணவர் சந்திரசேகர் பத்திச் சொல்லுங்களேன்."

"சுருக்கமா சொல்லணும்னா நடிகை மதுமிதாதான் அவருக்கு முதல்ல அறிமுகமானாள். ஆனா, அவர் நேசிச்சது உள்ளே தொலைஞ்சி போயிருந்த மதுமிதாவை! எனக்குள்ள இருக்கிற என்னை மதிச்ச அவரை நான் நேசிக்க ஆரம்பிச்சேன்."

பேட்டி முடிந்து அனைவரும் டின்னரில் இறங்கினார்கள்.

ஆளுக்கொரு தட்டில் பிரியாணியுடன் சற்று ஒதுங்கி நின்றிருந்த சந்திரசேகர், மதுமிதாவின் முகத்தையே பார்த்தான்.

"என்ன சந்துரு, அப்படிப் பார்க்கறீங்க?"

"நான் மரணத்தோட விளிம்பைத் தொட்ட சமயத்துல உன் அழகான முகம், பதற்றத்தில எப்படி இருந்திருக்கும்னு யோசிச்சுப் பார்த்தேன்."

"இப்ப எதுக்கு அதைப்பத்தியெல்லாம் சிந்திக்கணும்? வேற பேசுங்க."

"இந்தப் பேட்டில கூட உன்னோட ஒரு பண்பாட்டை, நாகரிகத்தை நான் ரொம்ப ரசிச்சேன் மது"

"எதைச் சொல்றீங்க?"

"இதைப் பத்திரிகையாளர் சந்திப்புல உங்கம்மா உனக்குச் செஞ்ச பல கொடுமைகளைப் பகிரங்கப்படுத்தப் போறதா சொல்லிட்டிருந்தே. கடைசியில ஒரு வரிகூட அதைப் பத்திப் பேசலை. அதைச் சொன்னேன்."

"சந்துரு, என்னை நடிகையா உருவாக்கின அம்மாவை நான் அடியோட வெறுக்கிறேன். ஆனா என்னை ஒரு உயிரா, மனுஷியா பெத்தெடுத்த அம்மாவைப் பகிரங்கமா கொச்சப்படுத்த வேணாமேன்னுதான்."

"இந்தப் பக்குவமும், சிந்தனையும்தான் மதுமிதாவை நேசிக்க வெச்சது" என்ற சந்திரசேகர், அவள் தோளை பெருமையுடன் அணைத்துக் கொண்டான்.

• • •

ஆட்டோவில் வந்து இறங்கினாள் இனியா.

வீட்டிற்குள் வந்தாள். ஹாலில் அமர்ந்திருந்தவர்களைப் புரியாமல் பார்த்தாள். கடந்து தன் அம்மா துர்க்காவிடம் வந்தாள்.

"என்னம்மா, எதுக்கு திடீர்னு என்னை வரச் சொல்லி ஃபோன் செஞ்சே?"

"உங்கக்கா நடத்தின கூத்தெல்லாம் தெரியுமில்லே உனக்கு?"

"தெரியும்! போறா விடு! இனிமே சினிமால நடிக்க மாட்டாளாம். இவ நடிக்கலைன்னா சினிமா உலகமே அழிஞ்சிடுமாக்கும். இவளைவிட பெரிய புகழோட வேற புது ஸ்டார்ஸ் வரமாட்டாங்களா என்ன? ஆமா... ஹால்ல உட்கார்ந்திருக்கிறது யாரு?"

"காஸ்ட்யூமர், மேக்கப் மேன், ஸ்டில் ஃபோட்டோகிராபர்"

"அவங்க எல்லாம் எதுக்கு வந்திருக்காங்க?"

"ஒரு புது ஸ்டாரை உருவாக்கிறதுக்காக"

"என்னம்மா சொல்றே?"

"ஆமாம் இனியா. மதுமிதாவைவிட பிரபலமா நான் உன்னை உருவாக்கப் போறேன். நீ படிப்பை நிறுத்திடு. எங்கே நீ அவளுக்கு போட்டியா வந்திடுவியோன்னுதான் அவ இத்தனை நாளும் உன்னை சினிமாவுக்கு வரக்கூடாதுன்னு தடைபோட்டு வெச்சிருந்தா. இனி அவளுக்கும் இந்தக் குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீ சினிமால தாராளமா நடிக்கலாம். நான் நடிக்க வைக்கிறேன்."

"ஹாய்! நான் ஒரு சினிமா ஸ்டாரா?" உற்சாகமாகக் குதித்தாள் இனியா.

"சீக்கிரம் முகம் கழுவிட்டு வா... உனக்கு மேக்கப்போட்டு விதவிதமா ஸ்டில்ஸ் எடுக்கணும்" என்றாள்- அடுத்த பணம் காய்க்கும் மரத்தை உருவாக்கப் போகிற ஆர்வத்துடன் துர்க்கா.

(முற்றும்)

வாராவாரம்
உங்கள் இதயத்தில்
இடம் பிடிக்க
ஓர் நிலவு
அடுத்த வாரம் முதல்
-ஆரம்பம்-
எழுதுவது?

## கவியரசுவின் சுயசரிதை

திடீர் தொடர் 02

**கவியரசு கண்ணதாசன் எழுதிய-அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டி'கள் இவை....**

ஒருநாள் அவனுக்கொரு தந்தி வந்தது. உடனே புறப்பட்டு வரும்படி அவனது சகோதரர் தந்தி கொடுத்திருந்தார்.

அப்போது சேத்துப்பட்டிலிருந்த திரு. எஸ்.டி சுந்தரத்திடமிருந்து இருபது ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டான்.

அவனது சரித்திரம் முழுவதையும் ஊரிலிருந்த உறவினர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்.

உடனே அவனை யாருக்காவது சுவீகாரமாகத் தந்துவிடுவதென முடிவு கட்டினார்கள்.

அதுவரையில் சுவீகாரம் கேட்டு வந்தவர்களையெல்லாம் கோபித்துக்கொண்டு துரத்திய அவனது தந்தையும் அதற்குச் சம்மதித்துவிட்டார்.

வெகு நாட்களாகவே அவனைத் தன் மகனாக்கிக்கொள்ள வேண்டுமென்று ஓர் அன்னை அவனது வீட்டிற்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தார்.

கணவனை இழந்த அந்த அன்னையார், பிள்ளைப் பேறு இல்லாதவர்கள்.

ஒரு பெண் இருந்து, மணமுடித்து இரண்டு ஆண்டுகளில் ஓர் மகனை ஈன்று கண் மூடிவிட்டார்கள்.

ஆகவே அவனது குல வழக்கப்படி அவனை மகனாக்கிக்கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

பல நாட்களாகவே மறுத்து வந்த அவனது பெற்றோர், அந்த அன்னையாரையே அழைத்துச் சம்மதம் தெரிவித்து விட்டார்கள்.

சுமார் ஒன்னரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை உடையவராக அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

உடனடியாகவே சுவீகாரத்துக்கு நாள் வைக்கப்பட்டது.

அதற்குள் அவன் ஒருமுறை சென்னை சென்று திரும்புவதாகச் சொன்னான். யாரும் சம்மதிக்கவில்லை.

அதே நேரத்தில், சென்னைக்குக் கம்பெனியை மாற்றிக் கொண்ட ஜூபிடர் பிக்சர்சார், அவனுக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள்.

அதைச் சாக்கிட்டு அவன் சென்னைக்குப் புறப்பட்டான்.

சென்னைக்கு வந்ததும் வராததுமாக அவளைத் தேடி நடந்தான்.

வீடு வழக்கம்போல் திறந்தே கிடந்தது.

ஆனால் அந்தோ பரிதாபம்! அவள் அங்கே இல்லை.

வீட்டிலிருந்த மற்றவர்களை விசாரித்தான். அவர்கள் ஒரு விலாசத்தைக் கொடுத்தார்கள்.

அதில் குறித்திருந்தபடி மயிலாப்பூரில் இருந்த ஒரு வீட்டிற்குச் சென்றான்.

கதவு தாழிடப்பட்டிருந்தது. தட்டினான். கதவு திறக்கப்பட்டது.

அங்கே- அந்தோ!

அதை எப்படி அவன் வர்ணிப்பான்?

அந்த வீட்டில் ஒருவனோடு அவள் குடும்பம் நடத்திக்கொண்டிருந்தாள்.

துயின்று எழுந்த நிலையிலிருந்தாள். அந்தக் காட்சி, இறைவன் அவன்மீது வைத்த கருணையால் தோன்றியதாகும்.

அன்றுதான் அவன் அகக்கண்கள் திறந்தன. பாலுணர்ச்சியிலும் தரம்வேண்டும் என்கிற ஞானோதயம் அன்றுதான் அவனுக்கு ஏற்பட்டது.

அவளிடம் அமைதியாகவே சில வார்த்தைகளைச் சொன்னான்:



"நீ நடந்துகொண்ட முறை சரிதான். என் ஆசை போதை தணிந்தது. என் விழிகளை நீதான் திறந்து வைத்தாய். இந்தக் கோலங்களையெல்லாம் இதுவரை நான் கதைகளில்தான் படித்திருக்கிறேன். கண்ணெதிரே இன்று கண்டேன். உன்னைச் சந்தித்ததையும், உன்னோடு சில மாதங்கள் அலைந்ததையும், அதனால் நிலை தாழ்ந்து போனதையும் எண்ணி நான் வருதப்படவில்லை. இந்த அனுபவம் எனக்குத் தேவையானது.

உன் பெயருக்கேற்ப நீ 'லீலா' விநோதங்களையே புரிந்து கொண்டிரு; வருகிறேன்."

அவன் வெளியேறினான்.

அவள், தான் ஓர் உத்தமி என்று வாதாடவில்லை.

அது அவள் சுபாவம்.

அமைதியாகத் தலைகுனிந்து குற்றங்களை அவள் ஒப்புக்கொண்ட நிலையில், அவன் பிரிந்தான்.

ஏதோ தத்துவம் பேசிவிட்டானே தவிர, மனத்துக்குச் சமாதானம் சொல்ல முடியவில்லை!

ஆனாலும், 'காலத்தால் அந்த வியாதி தீரும்,' என்று அமைதியுற்றான்.

அன்று இரவு, அவன் காய்ச்சலில் வீழ்ந்தான்.

கடுமையான காய்ச்சலோடு ஊருக்குப் புறப்பட்டான்.

சுவீகாரத்திற்கான நாள் நெருங்கிற்று.

ஒருநாள்- அதிகாலை நான்கு மணிக்கு அவனது கிராமமான சிறுகூடல்பட்டியிலிருந்து காரைக்குடிக்கு அவனை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு.

அவனுடைய சாதியில் சுவீகாரம் என்பது மிகவும் சாதாரணமானது.

அந்தச் சமூகத்திலாவது குறைந்தபட்சம் சமதர்மம் நிலவட்டுமென்று இறைவன் ஒரு விதியை வகுத்திருந்தான்.

அந்த சமூகத்தின் பணக்காரர்களில் பெரும்பாலோருக்கு குழந்தையே இல்லாமல் ஆக்கிவிட்டான். நடுத்தரக் குடும்பங்களில் நிறைய ஆண் குழந்தைகள் பிறக்க வைத்தான்.

அந்தப் பிள்ளைகளைப் பணக்காரர்கள் சுவீகாரம் எடுக்க வைத்தான்.

அந்தச் சமூகத்தில் இந்தச் சமதர்மம் அமைதியாக நிறைவேறிக் கொண்டிருந்தது.

சுவீகார நாளன்று பிள்ளையை வாங்கிக் கொள்கிறவர்கள் பெருமகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

கொடுக்கின்றவர்கள் கண்ணீரும் கம்பலையுமாய் இருப்பார்கள்.

அந்தச் சடங்கே அலாதியானது.

குறித்த நேரத்தில்- அது இரவு பனிரெண்டு மணியாகக் கூட இருக்கும்.

பையனுக்குப் பிறந்த வீட்டில் போட்டிருந்த சட்டை வேட்டிகளைக் கழற்றி, சுவீகார வீட்டிலிருந்து வந்த அலங்கார ஆடைகளை அணிவிப்பார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் மூதாதையருக்கான 'படைப்பு' அறையொன்று இருக்கும்.

அதன் எதிரே கோலம் போட்டு வைப்பார்கள். அந்தக் கோலத்தில் பையனை நிற்க வைப்பார்கள்.

(சரிதம் தொடரும்)

www.padippakam.com

# முடிவுகள்



**"இனி எப்போதுமே இவ எனக்கு சுமைதானடி– சுகமான சுமை!"**

சோகம் இருளாய் மனதில் கவிந்திருந்தாலும் முகத்தில் அதை வெளிக்காட்டாது கவனமாயிருந்தாள் ஸஹானா. இரண்டு வயது இளம்மொட்டு-அழகிய சுன்னங்கள் எடுப்பான நாசி, எழிலான இதழ்களோடு அவள் அணைப்பில் உறங்கிக் கொண்டிருந்தது.

"நீ எடுத்த முடிவு சரிதானா? யோசிச்சுப் பார்த்தியா நல்லா?" மூன்றாவது முறையாகக் கேட்டுவிட்டேன். தீர்க்கமாயிருந்தாள். கண்களில் ஒரு கடுமையோடு கூடிய உறுதி. எனக்குப் புரிந்தது. புதுமையாயுமிருந்தது. இன்னும் இவள் பிடிவாதக்காரிதான்! எப்பவுமே எதிலுமே 'சட்டென' தீர்மானிக்கும் இயல்பு கொண்டவள். ஆற அமர யோசித்து எப்போதுமே செயற்படுபவள் அல்ல ஸஹானா. தன்னைக் காதலித்த ரகுவுக்கு கூட மறுப்புக் கூறி, வீட்டார் பார்த்துப் பார்த்துப் பொறுக்கியெடுத்த மாப்பிள்ளையை ஏற்றுக் கொண்டவள்.

அப்போதும் கேட்டேன், இதே கேள்வியை. தடுமாறினாள் "ரகுவா? நம்பமுடியாது. காதலிக்கும்போது எல்லாரும் நல்லவங்களாத்தான் இருப்பாங்க. கல்யாணத்துக்கப்புறம்தான் சுயரூபம் தெரியவரும். எனக்கு இந்த காதல், கத்தரிக்காயிலெல்லாம் நம்பிக்கையில்ல. அப்பா, அம்மா பார்த்து செய்யறது சரியாத்தானிருக்கும்." உறுதியாகச் சொல்லி விட்டாள்.

என்ன சொல்வது? எனக்கே புரியவில்லை. "உன் வாழ்க்கை. உன் முடிவு." சுருக்கமாய்ச் சொன்னேன். அது அப்போது.

ஆனால் இன்று? நிலமைவேறு. நிறையக் காயங்களோடும் கண்ணீரோடும் வந்திருக்கிறாள். விட்டுவிட முடியுமா? எப்பவுமே என் சந்தோசங்களில் சிரித்தும், என் துக்க கணங்களில் ஆறுதலாயும் இருந்தவள். முடிவுகள் தெரியாது தடுமாறும் நிமிஷங்களில் என் தடுமாற்றங்களை தவிர்த்தவள். தீர்க்கமான முற்றுப் புள்ளிகளை என் ஏராளமான சந்தேகங்களுக்குத் தந்து பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தவள். மறக்க முடியுமா?

"அவருக்கு இன்னொரு பெண்ணோட தொடர்பு. கல்யாணத்துக்கு முன்பிருந்தே...

**ஷர்மிளா இஸ்மாயில்**

ஒரு பிள்ளையுமிருக்காம். வேறு இனப் பெண்." முதன் முதலாய் அவள் தொலைபேசியில் சொன்னபோது, எனக்குள் ஏராளமாய் வியர்த்தது. உடல் நடுங்கியது. ஆனால் ஸஹானாவின் குரலில் சலனமில்லை. தெளிவு, ஒரு அழுத்தம். "என்ன? என்னடி.. எப்படி இது? உறுதியா தெரியுமா? நல்லா விசாரிச்சியா? வெறும் வதந்தியா இருக்கப் போகுது! பொறாமை மற்றவங்களுக்கு! உங்க வாழ்க்கையை நாசமாக்க இப்படி கட்டுக் கதைகளை சொல்வாங்க. நம்பாதேடி...!" பதறினேன். உளறிக் கொட்டினேன்.

நான் பேசி ஓயுமட்டும் காத்திருந்தாள். பின் நிதானமாய்ச் சொன்னாள்: "கேட்டேன். ஒத்துக்கிட்டார்." எனக்குள் அழுகை பொங்கியது. "அழாதே!" எனக்கே ஆறுதல் சொல்லி தொடர்ந்தாள். "இத்தனை காலம் மறைச்சு வெச்சிருந்தார். ஏன் எனக் கேட்டேன். ஒரு பிள்ளை பிறந்திட்டா நான் அவரை விட்டுட்டு வர மாட்டேனில்லை. அதான். இப்ப சொல்றாரு. இரண்டு பேரையுமா வெச்சு சமமா, பாரபட்சமில்லாம குடும்பம் நடத்தலாம்னு-அதுவும் நான் விரும்பினா... ஒரே வீட்லயே இருக்கலாம்னு..."

புலம்பினேன். "போதும் ஸஹானா. மேலே பேசாதே..." என் நெஞ்சு எரிந்தது. "நேரில் வர்றேன். அழாமல் இரு...!" கூறி தொலைபேசியைத் துண்டித்தாள். 'ஐயோ...' எனக்குள் துக்கம் தறிகெட்டுப் பொங்கிப் பிரவாகித்தது. ஏன் இறைவனே இப்படி? ஏனிப்படி நடந்தது அவளுக்கு?

என் மேசைமேல் கிடந்த கவிதைப் புத்தகங்களைப் புரட்டினாள். குழந்தை இன்னும் அவள் மடியில் ஆழ்ந்த உறக்கம். "கட்டிலில் போடு. உனக்குப் பாரமாயிருக்கும்." உறங்கும் குழந்தையை முத்தமிட்டுக் கூறினேன்.

"இனி எப்போதுமே இவ எனக்குச் சுமை தானடி: சுகமான சுமை. என்னைப் போல ஏமாந்தவளா இல்லாம இவள வளர்த்தெடுப்பேன். என் தொழில், என் மகள் இனி இதுதான் என் வாழ்க்கை வட்டம்!" ஸஹானாவின் வார்த்தைகள் அம்பாய் மனதைக் கிழித்தன.

என்ன சொல்வேன்? நெஞ்சுக்குள் வலி. விவாகரத்து பற்றிக் கேட்க வார்த்தைகள் வரவில்லை. புரிந்து கொண்டாள்.

"அவர் அவளோடேயே வாழட்டும். அவளைப் பற்றி வீட்டில் சொல்லி தைரியமா கல்யாணம் பண்ணியிருக்கலாம். இல்ல வீட்டை பகைச்சுட்டு அவளோடேயே வாழ்ந்திருக்கலாம். இரண்டுமில்லாம இப்படி அம்மா, அப்பாக்காக என்னைக் கட்டிக்கிட்டு ஒரு வாழ்க்கை! மனசுக்குப் பிடிச்சுப்போன அவளோடும் ஒரு வாழ்க்கைன்னு...ப்சு... ரகுவோட மனசைப் புண்படுத்தி, அவரோட உண்மைக் காதலை புறந்தள்ளினதுக்குத்தான் இந்தத் தண்டனையோன்னு மனசு சில வேளை நெனச்சுக்கும். எதையும் பங்கு போட்டுக்கலாம். கணவனை பங்கு போட்டு வாழும் வாழ்க்கை அவலமானது. வேணாம். விட்டுட்டேன். சரிதானே?"

பதில் பேசமுடியவில்லை என்னால். மனதுக்குள் மௌனமாய் அழுதேன். ஸஹானாவின் குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை மடை திறக்க விம்மி விம்மியழுது கொண்டிருந்தாள் ஸஹானா.

# பஸ்ஸில்

அந்த பஸ் ரோட்டில் ஊர்ந்து கொண்டிருந்தது. 'சே! எப்ப போய்ச் சேருவோமோ?' என்ற அங்கலாய்ப்புடன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள் அகிலா.



முகூர்த்த நேரம் எப்போது என்று பத்திரிகையை எடுத்துப் பார்த்து, அதை மனப்பாடம் செய்து கொண்டாள். அடிக்கடி அருகே இருந்தவனைப் பார்த்துக் கொண்டாள்.

பார்க்கும் போதெல்லாம் அவன் பார்வை தன் மேல் பதிவதை உணர்ந்தாள்.

ஒரு நொடி நேரம் பஸ் அதிர்ந்து குலுங்கியது. அவன், அவள்மீது சாய்ந்து விட்டான். இந்த திடீர் ஸ்பரிசம் அவளுக்குள் எரிச்சலை ஏற்படுத்தியது. 'இடியட்! ஒழுங்கா பிடிச்சிக்கிட்டு நிக்கக்கூடாது? பெரிய ஹீரோன்னு நினைப்பு!' என்று மனதில் திட்டிக் கொண்டாள்.

வண்டி திடீரென்று சிக்னலில் நின்று விட்டது. அந்த நேரம், "கொஞ்சம் தள்ளுங்க ஸார். சிக்னல்ல இறங்கிட்டா எனக்கு வீடு கிட்ட!" என்று ஒரு ஆள் அவன் மீது மோதி விட்டான். அவன் எதைப்பற்றியுமே கவலைப் படாமல் நின்றிருப்பதைப் பார்த்து மேலும் எரிச்சலாகியது அவளுக்கு.

இந்த முறை வளைவுக்குள் திரும்பி மீண்டும் அவளை சோதனைக்குள்ளாக்கியது அந்த பஸ். நிச்சயமாக அவள் தோளின் மீது இடித்தே இருக்கவேண்டும் அவன்.

"ஏண்டா, பார்த்து நிக்கத் தெரியாதா? இப்படி இடிச்சுக்கிட்டே இருக்கிறதிலே என்னடா அப்படி சுகம்? நீயெல்லாம் அக்கா தங்கச்சிகூட பொறக்கலை?. உங்கம்மாவும் ஒரு பொண்ணுதானே?" என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

உடன் இருந்தவர்களும் அகிலாவுக்காக் சிபாரிசுக்கு வந்தார்கள். "ஏண்டா! படிச்ச பையனாத் தெரியறே? இப்படி அநாகரிகமா நடந்துக்கறியே?"

இப்படியே எல்லோரும் பேசிக் கொண்டே இருக்க, அவன் மட்டும் அப்படியே நின்றிருந்தான் ஸ்தம்பித்து.

"சார் வேணும்மின்னே நான் இந்த மாதிரி செய்யலை... தெரியாம..."

"நான்கூட தெரியாமத்தான் அடிக்கிறேன்!" என்று ஒருவன் ஓர் அறைவிட அவன் அணிந்திருந்த கண்ணாடி, கும்பலின் நடுவே

**அகல்யா**

விழுந்து கண்ணாமுச்சி ஆட்டம் ஆடியது. அப்போதுதான் அவனை எல்லோரும் கவனித்தார்கள்.

"அட குருட்டுப் பையன் சார்!"

# மனசு

அழகம்மா வீட்டுக் கறுப்புக் கோழி காணாமல் போய்விட்டது.

கோழிகளில் அது ஒரு தனி!

'வெடுக் வெடுக்' கென்று அது கழுத்தைத் திருப்பிப் பார்ப்பது பார்க்க வெகு அழகாய் இருக்கும்.

அழகம்மா "ஐயோ ஐயோ" என்று கத்த ஆரம்பித்து விட்டாள்.

"ஐயோ..ஐயோ... எவ்வளவு அழகான கோழி... காணாமப்போச்சு... எவ வீட்லயாவது கோழி குழம்பு வாசனை அடிக்கட்டும் மூக்கை அறுத்துப் போடுவேன்! அதுக்கு எவ்வளவு விலை கொடுத்து வாங்கியது... எந்தப் பாவிமக திருடினார்களோ...?"

தெருகூடி அவளை சமாதானம் செய்தது.

அழகம்மா மிகவும் கவலைப்பட்டாள். அன்று இரவு சரியாகச் சாப்பிடவும் இல்லை. தூங்கவும் இல்லை.



**ரிஷிவந்தியா**

மூன்று நாட்கள் கழித்து, பக்கத்துத் தெரு வாத்தியார் வீட்டில் அவள் கோழி இருப்பதாகத் தகவல் கிடைத்தது. அவள் மனசெங்கும் சந்தோஷம். லொத்தரில் ஒரு கோடி பரிசு விழுந்ததுபோல உணர்ந்தாள்.

வாத்தியார் வீட்டுக்கு ஓடினாள்.

"எங்க வீட்டுச் சேவலோட வந்து அடைஞ்சுட்டுது. யாருடையதுன்னு தெரியாம மூணு நாளா கட்டிப்போட்டு வச்சிருந்தோம்." வாத்தியார் மனைவி கோழியை அழகம்மா கையில் கொடுத்தவாறே கூறினாள்.

'கோழி மூணு நாளில் மூணு முட்டை விட்டிருக்குமே... மூணு முட்டை என்ன விலையாச்சு..? முட்டையைக் குடுங்கன்னு இவங்கசிட்ட எப்படி கேட்கிறது?'

அழகம்மாவின் மனசு அதுக்கும் கவலைப்பட ஆரம்பித்தது.

# புலராத நேரம்

அதிகாலையில் எழுந்து கண்களைக் கசக்கி விட்டு மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான் கமலன். அது பன்னிரெண்டு மணிக்கு முன்னதாகவே செயலிழந்திருந்தது. வெளியே ஓடி வந்து அடிவானத்தைப் பார்த்தான்-விடிவெள்ளி தெரிந்தது. காகம் கரைந்து கொண்டிருந்தது. சேவல்கள் கூவும் சத்தம் கேட்கின்றது.

'நல்லா விடிஞ்சிட்டு போல தெரியிது.' மனதுக்குள் நினைத்தவன், முகத்தைக் கழுவித் துடைத்துவிட்டு, சைக்கிளின் இரண்டு டயருக்கும் காற்று இருக்கின்றதாவென அழுத்திப் பார்த்த பின்னர், அம்மா இரவே கட்டி வைத்திருந்த சாப்பாட்டுக் கோப்பையை எடுத்து பேக்கினுள் வைத்துவிட்டு, சைக்கிளை உருட்டி வாசலுக்கு வந்து- படலையைச் சாத்திய பின்னர் சைக்கிளை மிதிக்கலானான் கமலன்.

"விதச்சி எட்டு நாளாப் போயிற்று; இன்னமும் நல்லா தண்ணி பாச்சல்ல. பயிரெல்லாம் கருகுது, வாய்க்கால்ல வாற தண்ணிய ஏத்துக்காலில இரிக்கிற வட்டக் காரனுகள்தான் எடுக்கிறானுகள். முந்தநாள் நல்லா தண்ணி வந்தும்கூட பக்கத்து வயக்காறன் அவண்ட வெள்ளாமைக்கு பாச்சிட்டான், இண்டைக்கு வக்கட போட்டெண்டாலும் தண்ணி விடத்தான் வேணும்!" கமலன் தன்பாட்டுக்கு முணுமுணுத்தான்.

குளிர் ஜில்லென காதைத் துளைக்கின்றது. கை விறைத்துப் போகும் அளவுக்கு குளிர். தடுமல் இருக்குமாப்போல் மூக்கு நுனியில் ஈரம் கசிகின்றது. விரலால் மூக்கைத் துடைத்துவிட்டு, சைக்கிள் பாரில் ஏறி நின்று வேகமாக மிதிக்கலானான் கமலன். இருள் இன்னும் பூரணமாகக் கலையவில்லை. அதனால் ரோட்டில் எவரையும் காணவில்லை. மின்கம்பங்களில் மின்னிக் கொண்டிருக்கும் மின்விளக்குகளில் ஈசல் பூச்சிகள் சுழன்று கொண்டிருந்தன. கீழே பல ஈசல்கள் இரவு அடித்த கும்மாளத்தில் இறக்கைகள் முறிக்கப் பட்டு துடித்துக் கிடந்தன.

வெளிச்சமில்லாத பாதையால் வந்த கமலன் வளைவில் திரும்பும்போது நடுரோட்டில் கிடந்த பொருளில் மோதுண்டு கீழே விழுந்தான். விரைவாகச் சைக்கிளைச் செலுத்தி வந்ததால் சைக்கிள் தூரத்தே வீசப்பட்டது. எழும்பி முழங்கால்களைத் துடைத்துவிட்டு காலைத் தட்டுத் தடுமாறி வைத்தவாறு கையை ரோட்டில் தடவி சைக்கிளை தேடினான் கமலன். இருளாகையால் எதுவுமே தெரியவில்லை. கையில் நீளமான பொருளொன்று தட்டுப்பட்டது. 'ஆரோ பருத்த மனிதனாகத்தான் இருக்க வேணும்' பதற்றமடைந்தவனாய் அதற்கு அருகே தென்பட்ட சைக்கிளை எடுத்து விரைவாக வயலை நோக்கி பயணமானான் கமலன்.

'கையில் தட்டுப்பட்ட உருவம் யாருடையதோ! எந்த அப்பாவி குறுக்கால வந்து மாட்டுப்பட்டானோ தெரியல்ல, போன கிழமையும் இப்படித்தானே பைத்தியக்கார அரசன் குறுக்கால வந்தபோது பயங்கரவாதியெண்டு நினச்சி சுட்டுப் போட்டாங்க. அடக்கம் செய்ய ஆரும் வராததால அநாதப் பொணமா உருக்குலஞ்சி போயித்தே! இதுவும் எப்படியோ தெரியல்ல. ரேடியோவில செய்தி கேட்டா பயங்கரவாதிகளுடனான நேரடித் தாக்குதல்ல செத்ததாகத்தான் சொல்லுவாங்க. இதப்போய் ஆருட்டத்தான் சொல்ல ஏலும், சொல்லுறவனையும் பயங்கரவாதியெண்டு சொல்லி உள்ளே தள்ளிப் போடுவாங்க. இல்லாட்டி புடிச்சிக் கொண்டு போய் டயரில போட்டாலும் போடுவாங்க. எப்படித்தான் வாழுறதோ தெரியல்ல.' கமலனின் சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. பயம் அவனையறியாமல் கவ்விக் கொண்டதால், ஏற்கனவே குளிரால் நனைந்திருந்த கமலன் நடுங்கத் தொடங்கினான்.



வயல் வேலியோரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு, கொண்டு போன மண்வெட்டியையும் சோற்று பேக்கையும் எடுத்துக் கொண்டு வரம்பில் நடந்து சென்றான். அவனால் எந்த வேலையையும் செய்ய மனம் வரவில்லை. ரோட்டிலே கிடந்த பிணம் அடிக்கடி தோன்றி மறைந்தது. இரவு தொடர்ந்து கேட்ட வெடிச் சத்தம் இந்த மானிடனைத்தான் பலியெடுத்ததா? அல்லது இவனுடன் இன்னும் எத்தனை பேர் அருகில் கிடக்கின்றார்களோ...?

'பயம் வராமல் இருந்திருந்தால், அவ்வேளையில் அந்த ஜடத்துக்கு உயிர் இருக்

**வீரமுனை வானவர்கோன்**

கின்றதா எனப் பார்த்திருக்கலாம், சீ நாசமாப்போன வெளிச்சம் அந்தப் பகுதியில் இல்லாமல் போயிருந்ததே!' கமலனின் மனம் அடிக்கடி குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

வயலுக்கு தண்ணீர் அரைகுறையாகப் பாய்ந்ததும் வேலையை அத்துடன் முடித்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டான் கமலன். வரும்போது தான் வீழ்ந்த இடத்தில் உறைந்து கிடக்கும் இரத்த வெள்ளத்தை நன்கு பார்த்தவனாய் வீட்டுக்கு வந்தடைந்தான். சைக்கிளை முற்றத்தில் நிறுத்திவிட்டு அம்மாவிடம் காலையில் நடந்த விடயத்தை கூறிவிட்டு 'ஆர் அப்பாவியோ' தெரியாதென்றான். அம்மா சிரித்துவிட்டு, "ராவு புலியெண்டு நினச்சி மாடொன்ற சுட்டுப் போட்டாங்களாம்!" என்றாள்.

# கவிஞனின் இரவு

இது எத்தனை நுட்பமான வெளிச்சம். 'குத்து விளக்குச் சுடர்' என்று மொட்டையாகவா இதைக் கூறுவது? பாருங்கள் உற்று. நன்றாகக் கூர்ந்து கவனமாக.

வெள்ளி விளக்கின் மூக்கு நுனியில் தங்க நிற முத்துச் சுடரில்- பாறை நுனியிலிருந்து எட்டிப் பார்க்கப் பயப்படுகிற



அழகி மாதிரி, உள்ளே சிறிது தள்ளிப் பத்திரமாக அந்தச் சுடர் இருக்கிறது.

மேல் பகுதி பூராவும் கோதுமைப் பிரகாசம். அது ஒரு மல்லிகை மொட்டு. நீள மல்லிகை. அடிப்புறம் பச்சையாக இல்லை என்பது தவிர அது ஒரு மல்லிகை மொட்டுத்தான்.

பெரிய மனுஷி ஆன சிறுமி போல ஒரு மதர்ப்புத்தனம்.

என்னவோ யோசித்தவாறு சுடர் விடுகிறது. ஆழ்ந்து தேன் குடிக்கும் சுரும்பின் மும்முரம். விளக்குச் சுடரும் ஒரு சுரும்புதான். அது தேனைக்குடிக்கிறது. இது எண்ணெயைக் குடிக்கிறது.

சுடரின் ஓசைப்படாத சிறகுகள்கூட உற்றுப் பார்த்தால் தெரியும். எல்லாத் திசைகளிலும் அந்த இறக்கைகள் சுழல்வது நுட்பமாகக் கவனித்தால் தெரியும்.

அருகே சென்று நிதானமாகப் பாருங்கள். பொன்னிறப் பாதரச குண்டு: சுடருக்குள் ஒரு சுடர் காண்பீர்கள். உள்சுடரை வெளிச்சுடர் போர்த்துக் கொண்டு காக்கிறது.

மனைவி ஊரில் இல்லாத நேரங்கள் நல்ல சமயங்கள்.

குத்துவிளக்கை நாமே ஏற்றலாம். சுடரின் அழகை நிதானமாக, இடையூறு இல்லாமல். இரசிக்கலாம்.

"ஆ! ஆ! அடே கவிஞா! கவிஞா! நீ கிழித்துப் போட்ட நெருப்புக் குச்சிச் சுடர் உன்வேட்டியைப் பற்றிக் கொண்டுவிட்டதடா!

ஐயோ! இன்னும் விளக்குச் சுடரை இரசித்துக் கொண்டிருக்கிறாயே!"

கீழே அவன் அலட்சியமாகப் போட்டிருந்த தீக்குச்சிச் சுடர் கவிஞனின் தழைந்த வேட்டியை கவ்விப் படர்ந்து தாவிப்பெருகிக் கருக்கி, அவனையே பெரிய சுடராக்கி விட்டது.

கவிதை உலகிலிருந்து அவன் விழித்துக் கொள்வதற்குள்-காலம் கடந்துவிட்டது. நெருப்பு ஒரு கவிஞனல்லவே!

**ஜலகண்டன்**



படிப்பகம்

# இலக்கிய நயம்



கண்களுக்கும்
உதடுகளுக்கும் இடையே
கடும் மோதல்!

மோதலை நிறுத்த
மூக்கு
மத்தியஸ்தம் வகித்தது!

"உதடுகளே!
உங்கள் பிரச்சனையை
எடுத்துக் கூறுங்கள்!"
என்றது மூக்கு.

"நாங்கள்
பேசவேண்டியதை எல்லாம்
கண்கள் பேசிவிடுவதால்
எங்கள்
கௌரவம் எல்லாம்
காணாமல் போகிறது!"

"கடும் குற்றச்சாட்டு
கண்களே
கொடுங்கள் விடை!"
மூக்குப் பணித்தது.

"மொழி இல்லாத
பேச்சு
விழிகளாகிய
எங்களுடையது!
உதடுகள் ஏன்
பொறாமைப் படவேண்டும்?"
கண்கள் வினா வீசின!

"விஷயமுள்ள வினா
உங்கள்
விளக்கம் என்ன?"
மூக்கு கேட்டது.

"வீசுவதுதான்
இவர்கள் தொழில்,
பேசுவது
எங்கள் தொழில்!"
உதடுகள் உரத்துக் கூறின.

"எதை வீசுவது?"
என்றது மூக்கு.

"சாதாரண காலங்களில்
பார்வை வீசுவது,
அசாதாரண காலங்களில்
வலை வீசுவது!"

"எது அசாதாரணம்
என்று கூறுங்கள்?"

"காதல் மலரும்
பருவ காலம்!"

"காதல் என்பது
அசாதாரணமா?

உயிர் வாழ்வதற்கு
சுவாசிப்பது
எத்தனை அவசியமோ,

உயிர் மகிழ்வதற்கு
காதலிப்பதும்
அத்தனை அவசியம்!"
என்றுரைத்தது மூக்கு.

கண்களுக்கு
உள்ளூர மகிழ்ச்சி
இமைச் சிறகுகளால்
பட படத்தன!

"இப்படித்தான்
இந்த உதடுகள்
அர்த்தம் தெரியாமல் பேசி
காரியத்தை கெடுத்துவிடும்!
அதனால் தான்- உதடுகளை
காதலர்கள்
நம்புவதில்லை!"
என்றன கண்கள்.

"பலே! பலே!
தக்க சமயம் அறிந்து
குத்தி விட்டீர்கள்!
உதடுகளே உங்கள்
பதிலை உரையுங்கள்!"
என்றது மூக்கு.

"அபாண்டமான
குற்றச்சாட்டு
நம்பாமல்தானா
எங்களை ஜோடி
சேர்த்து
கொடுக்கல் வாங்கல்
நடத்துகிறார்கள்?"

"அது என்ன
கொடுக்கல் வாங்கல்?"
மூக்குக்கு குறும்பு.

"இரு ஜோடி உதடுகள்
சந்தித்து உரசும்போது
நடைபெறும் தொழில்!
அதன் பெயர் முத்தம்!
நாங்கள் முத்தமிடுவதை
மோப்பம் பிடிப்பதே
நீர்தானே!"

"உங்களை
மோப்பம் பிடிப்பதுவோ
எனது தொழில்?"
மூக்குச் சிவந்தது!

"மோப்பம் பிடிப்பது
மட்டுமா,
பொறாமையால்
பெருமூச்சு விடுவதும்
நீர்தானே!"
உதடுகள் சீண்டின.

"மூச்சு விடுவது
எனது தொழில்!"
என்றது மூக்கு

"முத்த நேரத்தில்
மட்டும்-அது ஏன்
வெப்பமாக வருகிறது?"

"மூச்சையே நிறுத்துவதுபோல
முத்தமிடும் நீங்கள்
மூர்க்கம் காட்டும்போது
உங்களை எச்சரிக்க
நான் சூடாகிவிடுவதுண்டு"

## இருக்கும் இடம்

கண்கள்
குறுக்கே வந்தன!

"மத்தியஸ்தம் செய்ய
வந்த மூக்குடன்
மல்லுக் கட்டுவானேன்?"
கண்கள் போதித்தன!

"அவசரப்படுத்தானே
சொற்களைக் கூட-நீங்கள்
கற்களாக்கி விடுவதுண்டு!"
என்றது மூக்கு.

"கண்கள் மட்டும்
என்ன உசத்தியோ?
அவசரப்பட்டு
எடை போடுவதில்லையோ?"
உதடுகள் சாடின.

"நீங்கள் மட்டும்
அவசர சரசங்களுக்கு
இடமளித்து
அவதிப்படுவதில்லையோ?"
கண்கள் பதிலடி கொடுத்தன!

"உரசிப் பார்த்து
எடைபோடுவது
எங்கள் வேலையல்ல!"

"உரசி ருசிபார்ப்பதுதான்
உங்கள் வேலையாக்கும்!"
மூக்கு குறும்பு விட்டது!

"உடல்கள் சேர்ந்து
உயிர்கள் கலக்கும்
கூடல் யாகத்தின்
திறப்புவிழா
முத்தத்தில்தானே ஆரம்பம்!"
உதடுகள் பெருமையடித்தன!

"கூடல் யாகத்திற்கு
அழைப்பு விடுப்பது
நாங்கள்தானே!"
கண்கள் கர்வம் காட்டின.

"அழைப்பு கொடுத்துவிட்டு
நிறுத்திக் கொள்வீர்கள்.
களிப்பு கொடுப்பது
நாங்கள்தானே!"

"மோகத்தில் நீங்கள்
எங்கள் மீதும்
ஒத்தடம் தருவதுண்டு!"
என்றன கண்கள்.

"உங்கள் இமைகள்மீது
நாங்கள்தரும் முத்தம்
அதுதான்
நாம் கூறும் நன்றி!"

"எதற்கு நன்றி?"
மூக்கு
குறுக்கிட்டு கேட்டது!

"சரசம் கொள்ள
ஜோடி
தேடித் தந்தமைக்காக!"
என்றன உதடுகள்.

"போதும் நிறுத்துங்கள்
கண்கள் பெரிதா?
உதடுகள் பெரிதா?
கேள்வியே அனாவசியம்.

கண்ணோட்டம் உள்ளவர்
முகத்தில் உள்ள
கண்களே பயன் தரும்!

வாய்மை உள்ளவன்
உதடுகளே
பெருமை பெறும்!"
மூக்கு உரைத்தது.

"கண்ணோட்டம் என்பது
என்ன?"
"வாய்மை என்பது
என்ன?"
கண்களும் உதடுகளும்
சேர்ந்தே கேட்டன!

கண்ணோட்டம் என்பது
நோக்குதல்
நன் நோக்கு, தீயநோக்கு
என இருவகை
நோக்கு உண்டு!
நன் நோக்காலேயே
இந்த உலகம் உருள்கிறது!

வாய்மை என்பது
அடுத்தார்க்கு தீங்கில்லாத
சொற்களை கூறுதல்
பொய்யில்லாத
வாழ்க்கை நலம் பேணுதல்!

"இருக்கும் இடம்
பொறுத்தே
எதுவும் சிறப்புப் பெறும்!"
மூக்கு தன்
தீர்ப்பை முடித்தது!

'கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு'

அதிகாரம்: 58- குறள்-571

'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்'

அதிகாரம்: 30- குறள்: 291.

தருவது ராதிகன்

# சிந்தியா பதில்கள்

★ தமிழக முதல்வர் கலைஞர் 75 வயதை தொட்டுவிட்டாரே?

க. ரகுநாதன், வவுனியா.

அவரது அரசியலை வெறுப்போரும் அவர் தமிழை விருப்போடு இரசிப்பர். திறமைசாலி! உற்சாக உழைப்பாளி! அவர் இளமையின் இரகசியம் அதுதான்!

★ தேவையற்ற கவலைகள் என்கிறார்களே; தேவையான கவலை என்று இருக்கிறதா?

சி. புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு.

தந்தையின் மரணத்தில் மகனுக்கு வருவது தேவையான கவலை. ஆனால் இங்கு ஒருவரது கவலையைப் பாருங்கள்:

ஒரு கோடீஸ்வரனின் இறுதி ஊர்வலம் பெரும் கூட்டம் தொடர நடந்து கொண்டிருந்தது.

அந்த ஊர்வலத்தில் அனைவரும் அமைதியாகச் சென்று கொண்டிருந்தனர். ஒருவன் மட்டும் தேம்பி அழுதபடி புலம்பிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்தவர்கள் இரக்கப்பட்டனர். அவனது தோளை ஆதரவாக அழுத்திய ஒருத்தர்: "இப்படி அழுகிறீர்களே, நீங்கள் இறந்து போனவரின் ஒரே மகனா?" என்று கேட்டார்.

அவன் அழுதபடியே சொன்னது இது: "நான் அவருக்கு எந்த உறவும் கிடையாது. அவருடைய ஒரே மகனாகப் பிறக்காமல் போய்விட்டோமே என்றுதான் அழுது கொண்டிருக்கிறேன்!"

★ சிந்தியா! கௌதமியின் மாப்பிள்ளை எப்படி?

பாத்திமா பைரோஸா, மொரட்டுவ.

ஜாடிக்கேத்த மூடி தான்!



கௌதமியின் கண்ணாளர்

★ 2000ம் ஆண்டில் உலகம் அழியும் என்பது உண்மையா?

ஆர். கிருபா, திருமலை.

சுத்தப் பொய்! உலகமும் இருக்கும், இங்கே இனப்பிரச்சனையும் பத்திரமாக இருக்கும்!

★ முரளிதரனின் பந்துவீச்சு மேலும் சிறப்பாகி வருகிறதே?

கே. ஷாகிர், கண்டி.

பட்டை தீட்டப்பட தீட்டப்பட வைரம் ஜொலிக்கும்!

★ உதைப்பந்தாட்ட மோகத்தை தொலைக் காட்சியில் பார்த்தீர்களா சிந்தியா?

சி. செந்தூரன், கொழும்பு-09.

அங்கே மோகத்தை காண்கிறோம், இங்கே ஏனோதானோ என்று ஒளிபரப்பி இரசிகர்களின் கோபத்தைக் கிளப்புகிறது ரூபவாஹினி. பங்களாதேசில் உதைப்பந்தாட்ட ஒளிபரப்பில் தொலைக் காட்சியில் தடங்கல் ஏற்பட்டதற்காக புகுந்து தூள் பண்ணிவிட்டார்கள். நம் நாட்டு இரசிகர்கள் காந்தியவாதிகள் என்பதில் ரூபவாஹினிக்கு அசாத்திய நம்பிக்கை! பிரமாண்டமான தொடக்கவிழாவைக் கூட குதறி விட்டார்கள்!

★ இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிப் பேச இங்குள்ள தமிழ்க்கட்சிகள் இந்திய அரசிடம் சென்றால் என்ன?

ம. குணாளன், யாழ்ப்பாணம்.

இனப்பிரச்சனை பற்றிப் பேசாமல் தங்களுக்கிடையே உள்ள குணப்பிரச்சனை பற்றிப் பேசி, உள்ள அனுதாபத்தையும் இல்லாமல் செய்துவிடுவார்கள்!

★ 'உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு' என்கிறாரே யாழ் புதுமேயர் சிவபாலன்?

கோ. சொக்கலிங்கம், உரும்பிராய்.

மற்றவர்கள் உடல் எல்லாம் நேராக விண்ணுக்கோ?! வேறொன்றுமில்லை; பழக்க தோஷம்! தேவையற்ற சவால்!

★ 'இந்தியா மீதான தடையைத் தளர்த்த முன்னணி நடிகைகளை அனுப்பிவைத்தால் கிளின்ரன் என்ன செய்வார்?' என்று தமிழக சஞ்சிகை ஒன்றில் வாசகர் ஒருவர் கேட்டிருந்தார். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

எம். சிவமணி, கொழும்பு-14.

ம்... தடைகளைத்தான் தளர்த்துவார்! (உங்களுக்குச் சொந்தமாக கேள்வி கேட்க வராதா சிவமணி?)

★ உலகக் கோப்பை யாருக்கு?

தா. லோகேஸ்வரன், பறகடுவ.

சென்றமுறை வென்ற பிரேஸிலுக்கு இல்லை என்றுதான் தெரிகிறது. 'சூப்பர் ஸ்டார்கள்' இருந்தும் கோல் போடுவதில் கோட்டை விடுகிறார்கள்.



75 வயது இளைஞர்

★ பணத்துக்கு மயங்காத ஆளே கிடையாதா?

எல். நித்தியராஜ், கந்தப்பளை.

இருக்கிறார்கள்- மிகக் குறைவாக! இந்தக் கதையைக் கேளுங்கள்:

ஒரு குரு இருந்தார். அவருக்கு பல சீடர்கள் இருந்தனர். ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருத்தராக நழுவிப் போய்விட்டனர். ஒரே ஒரு சீடன்தான் மிஞ்சி இருந்தான்.

மிக அடக்கமாக கையைக் கட்டிக் கொண்டு அவர் முன்னால் அமர்ந்திருந்தான்.

"நீ மட்டுமாவது இருக்கிறாயே அது போதும். நீதான் எனக்கு உண்மையான சீடன்!" என்றார் குரு.

சிஷ்யன் கூறினான்:

"அப்படி இல்லைச் சுவாமி, நீங்கள் இப்போது அமர்ந்திருக்கும் பீடத்தின் அடியில் பெட்டியில் பணம் வைத்திருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். எப்போது எழுந்து அந்தப் பக்கம் போவீர்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்!"

★ யாழில் காணாமல் போனோர் கதி என்ன?

ஆ. செல்வராசா, யாழ்ப்பாணம்.

அதோகதிதான்! தெற்கில் காணாமல் போனோருக்கு நஷ்டஈடு கொடுக்க ஏற்பாடுகள் நடக்கிறது! வடக்கில் காணாமல் போனோரின் உறவினர்கள்தான் பாவம்!

★ எதற்கெடுத்தாலும் பிள்ளைகளைத் திட்டும் பெற்றோர் பற்றி என்ன நினைக்கிறீர்?

கா. நமச்சிவாயம், பதுளை.

அடிவாங்கி மரத்துப்போனாலும் திருத்த முடியாது என்பதை மறந்துபோகிறார்கள்!

ஒரு அப்பா சின்னப் பையன் ஒருவனை அடித்துக் கொண்டிருந்தார்.

"ஏன் அடிக்கிறீர்கள்?" என்று கேட்டார் அம்மா.

"பரீட்சையிலே பசுவுக்கும் ஆட்டுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக்கூட பதில் எழுத முடியவில்லை இவனுக்கு!" என்றார் அப்பா.

"அவனுக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. உங்களுக்கு இன்னொரு வித்தியாசம் தெரியவில்லை!"

"என்ன சொல்லுகிறாய்?"

"இது எங்கள் பையன் இல்லை! பக்கத்து வீட்டுப் பையன்!" என்றார் அம்மா.

★ எதிலுமே திருப்தி அடையாத ஜென்மங்களை எப்படித் திருத்தலாம்?

செ. கீதா, மட்டக்களப்பு.

கடவுளால்கூட முடியாத காரியமாம்!

இந்தப் பூமியை சொர்க்கமாக்க நினைத்த கடவுள் பூமிக்கு வந்து சேர்ந்தார்.

மனிதர்களின் குறைகளை நிவர்த்தி செய்யத் தொடங்கினார்.

முதலில் ஒரு ஆசாமியைப் பார்த்தார். அவன் அழுது கொண்டிருந்தான்.

"ஏன் அழுகிறாய்?" என்று கடவுள் கேட்டார்.

"ஆயிரம் ரூபாயை தொலைத்து விட்டேன்!" என்றான்.

"பரவாயில்லை! கவலைப்படாதே நான் தருகிறேன். இந்தா வைத்துக்கொள்!" என்று ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார்.



கிளின்ரன் அவுட்டாவார்

அதைப் பெற்றதும் இன்னமும் பலமாக அழ ஆரம்பித்துவிட்டான்.

"ஏன் இப்போது அழுகிறாய்?" என்று கேட்டார் கடவுள்.

"நான் தொலைத்த ஆயிரம் ரூபாயும் இருந்தால் இப்போது என்கையில் இரண்டாயிரம் ரூபாய் இருந்திருக்குமே!" என்று சொல்லிவிட்டு தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டான்.

★ சிந்தியா ஐ.பி.சி. வானொலிச் சேவை எந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது?

ஆர். பிரகாஷ், கொழும்பு-06.

சிற்றலை ஒன்றில் 8.2 (SW-I-8.2)

# ஸ்போர்ட்ஸ்

## கையோடு ரீ.வி.



உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டிகளின் முதற் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இப்போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற சில சம்பவங்கள் இதோ:

### ரீ.வி. இரசிகர்கள்:

ஜமெய்க்கா நாட்டில் உதைபந்து விளையாட்டிற்குத்தான் பயங்கர மவுசு. அங்குள்ள இரசிகர்கள் உதைபந்தாட்டப் போட்டிகள் தொடங்கியதும் ரீ.வி.யும் கையுமாக அலைகிறார்கள். அலுவலகத்திற்குச் செல்பவர்கள் கையுடன் எடுத்துச் செல்லக்கூடிய போர்ட்டபிள் ரீ.வி.க்களை எடுத்துச் செல்கிறார்கள். பொது இடங்கள் பலவற்றில் உள்ள ரீ.விக்கள் முன்பு இரசிகர்கள் கூட்டம் அலைமோதுகிறது.

### மின் நிலையம் தகர்ப்பு:

பங்களாதேஷில் உள்ள காக்ஸ் பஸார் நகரில் உலகக்கோப்பை போட்டியின் தொடக்க ஆட்டம் ரீ.வி.யில் காட்டப்படுவதற்கு முன்பு மின்தடை ஏற்பட்டது. போட்டியை ரீ.வி.யில் காண ஆர்வமாகக் காத்திருந்த இரசிகர்கள் ஆத்திரத்தில் திரண்டு சென்று அங்குள்ள மின்நிலையத்தைத் தகர்த்துவிட்டார்கள்.

பங்களாதேஷில் நடைபெற்ற இன்னொரு சம்பவம் இது: சிட்டகாங் நகரில் டென்மார்க்-சவுதி அரேபியா மோதிய ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, மின்தடை ஏற்பட்டுவிட்டது. ஆத்திரமடைந்த இரசிகர்கள் அங்குள்ள மின்சாரசபை அலுவலகத்திற்குள் புகுந்து அடித்து நொறுக்கிவிட்டார்கள். இதில் 15 பேருக்குக் காயம். உடனே பிரதமர் ஷேக் ஹஸீனா தலையிட்டு, தொழிற்சாலைகளுக்குச் செல்லும் மின்சாரத்தை நிறுத்தி, உதைபந்துப் போட்டிகளைப் பார்க்க வசதி செய்து கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## பரிசுகள் தயார்

உலகக் கோப்பையை வெல்லும் அணிக்கு வழங்கப்படும் பரிசுகள் என்ன என்பதை சில நாட்டு உதைபந்தாட்ட அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

ஸ்பெயின் வென்றால் ஒவ்வொருவருக்கும் 2 இலட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். பிரேஸில் வென்றால் ஒவ்வொருவருக்கும் 2 இலட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். இத்தாலி வென்றால் ஒவ்வொருவருக்கும் 2 இலட்சத்து அமெரிக்க டொலர்கள். நோர்வே, அமெரிக்கா வென்றால் ஒவ்வொருவருக்கும் 1 1/2 இலட்சம் அமெரிக்க டொலர்கள். ஜெர்மனி வென்றால் 65 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். (நம்மூர் மதிப்புப்படி ஒரு அமெரிக்க டொலர்கள் 63 ரூபாய்)

மொராக்கோ நாட்டு மன்னன் இவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விட்டார். மொராக்கோ அணி முதல் ஆட்டத்தில் வென்றாலே 55 ஆயிரம் அமெரிக்க டொலரும் சொகுசு மாளிகையும் வீரர்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

## தண்டனை

ஆர்ஜென்டினா முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மரடோனா 1994ம் ஆண்டு பத்திரிகையாளர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இது தொடர்பாக ஆர்ஜென்டினாவின் தலைநகரான பியூனெஸ் அயர்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு கடந்தவாரம் வெளியானது. இதன்படி மரடோனாவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மரடோனா உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டிக்கான தொலைக் காட்சி வர்ணனையாளராக ஃபிரான்ஸில் இருக்கிறார்.

## கோல் போடும் சூரர்

கடந்த உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியின் சிறந்த வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிரேஸில் அணியின் ரொமாரியோ. 1996-97களின் உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரரும் இவர்தான்.

ஓட்டப்பந்தயத்தில் வெற்றிக்கோட்டை எட்டிப்பிடிக்கும் தருணத்தில் கீழே விழுந்த வீரர் போல, பயிற்சியின்போது ஏற்பட்ட காயத்தினால் இம்முறை உதைபந்தாட்டப் போட்டிகளில் இவர் விளையாடவில்லை.



சென்ற உலகக் கோப்பையில் 5 கோல்கள் அடித்து உலகக் கோப்பையை வெல்வதற்குக் காரணமாக இருந்தார் ரொமாரியோ. 33 வயதான இவர் உலகக் கோப்பைப் போட்டியில் விளையாடாவிட்டாலும், இன்னும் முதல் நிலைவீரராக இருப்பதாக அண்மையில் விடுத்துள்ள பேட்டியொன்றில் கூறியுள்ளார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 14

ஆண்டவரின் ஆணைப்படி ஆரோனும் மோசேயும் எகிப்து நாட்டின் நீர் நிலைகளனைத்தையும் இரத்தமாக மாற்றினர். ஏழு நாட்கள் பருக நீரின்றி அந்தநாட்டு மக்கள் பரிதவித்தனர்.

பார்வோனிடம் மக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து மோசேயுடன் இஸ்ரயேலர்களை அனுப்பிவிடுவதென எண்ணினான் மன்னன் பழையபடி நைல் நதியையும் ஏனைய நீர் நிலைகளையும் நல்ல நீருடையனவாக மாற்று மாறு மோசேயிடம் கூறினான். மோசேயும் ஆண்டவரைப் பிரார்த்திக்க நீர்நிலைகள் முன்புபோல நன்னீரால் நிரம்பி வழிந்தன மக்களும் பெரும் துன்பத்திலிருந்து மீண்டனர்.

எகிப்திய அமைச்சர்களும் அதிகாரிகளும், தாங்கள் ஏழு நாட்கள் அனுபவித்த துயரங்களை அப்போதே மறந்தனர். "இஸ்ரயேலர்கள் இல்லாத எகிப்து இடுகாடாகத்தான் மாறும்!" என்று பார்வோனிடம் சென்று அவனுடைய மனத்தைக் கடுமையாக்கினர். உடனே மன்னனும் மனம் மாறி, "இஸ்ரயேலரை அனுப்ப முடியாது!" என்றான். ஏமாற்றமடைந்து, ஆண்டவரை மோசே துதித்தார். ஆண்டவர், அடுத்த நாளே பார்வோனிடம் 'எபிரேயரை அனுப்பாவிட்டால் நாட்டிலுள்ள நீர்நிலைகள், வீடுகள், வயல்கள், அரண்மனைகள் எங்கும் தவளைகள் ஏவிவிடப்படும்' என்று கூறுமாறு மோசேயிடமும் ஆரோனிடமும் சொன்னார். அவர்கள் பார்வோனிடம் சென்று, ஆண்டவரின் கோபத்துக்கு ஆளாகாமல் எபிரேய மக்களுக்கு விடுதலை



## விபரீத விளைவுகள்

அளிக்குமாறு கேட்டுக்கொண்டனர். பார்வோன் மறுக்கவே ஆரோன், மோசேயின் கோலை எடுத்து நைல் நதியின் நீரையும் வேறு சில நீர்நிலைகளையும் கலக்கினார். உடனடியாகவே நீர் நிலைகளிலிருந்து எண்ணிலடங்காத தவளைகள் எங்கும் பாய்ந்து பரவின. அரண்மனைகள், வீடி வாசல்கள், வயல் வெளிகள், ஆடு மாடு போன்றவற்றின் மேனிகள், மக்களின் உடம்பு, உணவு தயாரிக்குமிடங்கள், படுக்கை அறைகள் எங்கு பார்த்தாலும் அருவருப்பான அமைப்புடைய தவளைகள் படை யெடுத்துப் பாய்ந்து திரிந்தன.



### கொசுக்களின் படையெடுப்பு

தவளைகளின் தொல்லைகளிலிருந்து விடுபட, மோசேயை அழைத்த பார்வோன், எபிரேயரை மோசேயுடன் அனுப்பி வைப்பதாகக் கூறினான். மோசே ஆண்டவரைப் பிரார்த்தித்து வேண்டியதும் தவளைகள் அனைத்தும் இறந்து போயின. அதனாலும் எங்கும் துர்நாற்றம் பரவியது.

பார்வோன் மீண்டும் தனது வாக்குறுதியை மீறினான். மோசே தன் கோலால் நிலத்தில் அடித்தார். அப்போது புழுதி கிளம்பி எங்கும் பரவியது. அவ்வேளை வீசிய காற்று அப்புழுதியை நாடெங்கணும் பரவச்செய்தது. இதனால் தவளைகள் பாய்ந்துதிரிந்த இடங்களெங்கும் கொசுக்கள் பரவின. மனிதர்களின் மேனிகளில் பரவலாக ஒட்டிய அக் கொசுக்கள் அவர்களைக் கடித்துத் துன்புறுத்தின.

இந்த உபாதையிலிருந்தும் விடுபட பார்வோன் மோசேயின் கோரிக்கைக்கு இணங்குவதாக நடித்தான். மீண்டும் ஏமாற்றினான். அடுத்த கட்டமாக கோடிக்கணக்கான பேன்கள் படையெடுத்தன.

பேன்களின் தொல்லையிலிருந்து மீள, பார்வோன் மீண்டும் மோசேயை அழைத்து, "எபிரேயரை உமது கடவுளுக்குப் பலிபூசையிடுவதற்கு அழைத்துச் செல்லலாம். ஆனால் எகிப்து நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கமாட்டேன். இந்நாட்டின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் போய் உங்கள் பூசையை நடத்துங்கள்!" என்றான். ஆனால் மோசே அதற்குச் சம்மதிக்கவில்லை.

அடுத்த தண்டனையாக எகிப்து நாட்டிலுள்ள ஆடு, மாடு, குதிரை, கழுதை போன்ற அனைத்துக் கால்நடைகளும் மடிந்தன.

ஆண்டவரின் கோபாவேசத்தினால் எகிப்திய மக்களே மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். இத்தண்டனைகள் எவையும் எபிரேய மக்களைப் பாதிக்கவில்லை. அவர்களுடைய குடியிருப்புக்களோ கால் நடைகளோ கூட எத்தகைய பாதிப்புக்கும் உள்ளாகவில்லை.

### தொடரும் ஏமாற்றம்

தொடர்ந்து தமது மக்கள் ஆட்சி பீடத்திலிருப்போரால் ஏமாற்றப்பட்டு வருவதைக் கண்ட மோசே ஆண்டவரைத் திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டார். ஆண்டவரும் தனது அருஞ் செயல்களினால் எகிப்திய மக்களுக்குத் தண்டனைகளை வழங்கிய வண்ணமிருந்தார்.

மோசேயிடமும் ஆரோனிடமும் ஆண்டவர், அடுப்புச் சாம்பலை அள்ளிவரும் படி சொன்னார். அச்சாம்பலை வான்நோக்கி வீசும்படி கூறினார். அவ்வாறே வீசப்பட்ட சாம்பல் காற்றுடன் கலந்து எகிப்து நாடெங்கும் பரவியது. பின்னர் அச்சாம்பல் பட்ட மனிதர்களின் உடல்களெங்கும் கொப்புளங்கள் தோன்றின. அவற்றிலிருந்து சீழ் வடிந்து சகிக்க முடியாத துர்நாற்றம் பரவியது.

வேதனை தாங்காமல் குழந்தை குட்டிகளுட்பட அனைத்து எகிப்தியரும் அழுது புலம்பினர்.

இத் தண்டனையிலிருந்தும் மற்றுமொரு பொய்யைக் கூறி பார்வோன் தன் மக்களின் துன்பத்தை நீக்கினான். "கொப்புளங்களை நீக்கினால் இஸ்ரயேலரைப் போகவிடுவேன்!" என்றான். ஆனால் உபாதை நீங்கிய மறுகணமே தனது கருத்தை மாற்றிக்கொண்டான்.

அடுத்து ஆண்டவர் அளித்த தண்டனை மேலும் கொடுமையானதாக இருந்தது. மோசே ஆண்டவரின் ஆணைப்படி தனது இரு கைகளையும் வானை நோக்கி நீட்டினார். பேரிரைச்சலுடன் இடி இடித்தது. வானமும் பூமியும் அதிர்ந்தன. பெருங்காற்று வீசியது. எங்கும் நெருப்புப் பொறி பறக்க ஆரம்பித்ததும் வானிலிருந்து கல்மழை பொழிய ஆரம்பித்தது. கட்டடங்கள் எல்லாம் உடைந்தன. மேலிருந்து வீழ்ந்த கற்கள் பட்டதும் பலர் காயம் பட்டுத் துடி துடித்து ஓலமிட்டனர். கால்நடைகளும் கல்மழையால் தாக்குண்டு வீழ்ந்தன. கல்மழையால் வயல்வெளிகளில் விளைந்த பயிர்களும் மரம் செடிகொடிகளும் நாசமாயின.

பார்வோன் மோசேயைத் தன்னிடம் அழைத்தார். "மோசே! நான் ஆண்டவரை நிந்தித்துப்பெரும் பாவம் செய்தேன். உம்முடைய ஆண்டவரை வேண்டி இக்கொடிய தண்டனையிலிருந்து நாட்டு மக்களைக் காக்க வேண்டும். நாளையே நீங்கள் புறப்பட்டுச் சென்று ஆண்டவருக்குப் பலி பூசையை நடத்துங்கள்!" என்றான்.

மோசே பார்வோனின் பொய்யான வாக்குறுதிகளைப் பல தடவை நம்பி ஏமாந்தவர். இருப்பினும் மற்றுமொரு சந்தர்ப்பத்தைத் தரும் நோக்குடன் ஆண்டவரைத் துதித்தார். காற்றும் மழையும் கல்மழையும் வந்த சுவடேயில்லாமல் மறைந்தன.

இத்தண்டனையிலிருந்து விடுபட்டதும் பார்வோன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இதேவேளை அவனுடைய அரசவை ஆலோசகர்களும் அமைச்சர்களும் பார்வோனை அணுகி, "இஸ்ரயேலர்கள் போய்விட்டால், நமது நாடு- நகர் நிர்மாணப் பணிகளனைத்தும் இடை நிறுத்தப்பட்டுவிடும். இத்தகைய பணிகளைச் சிறப்பாகத் தொடர எகிப்திய தொழிலாளர்களால் நிச்சயம் முடியாமற் போய்விடும். ஆகவே இஸ்ரயேலரை மோசேயுடன் அனுப்ப வேண்டாம்!" என்று கேட்டதும் பார்வோன் பழையபடி மனம் மாறிவிட்டான்.

அடுத்த நாட்காலையில் மோசேயும் ஆரோனும் பார்வோனின் அனுமதிக்காக வந்து நின்றனர். அவர்களை ஏளனமாகப் பார்த்த பார்வோன் மிகக் கடுமையான குரலில், "இஸ்ரயேலரை இந்நாட்டை விட்டு அனுப்பவே மாட்டேன்!" என்று உறுதியாகக் கூறினான்.

### ஆண்டவரின் கூற்று

ஆண்டவரிடம் மோசே முறையிட்டார். ஆண்டவர் மோசேயைப் பார்த்து, "பார்வோனின் மனத்தை நாம் கடினப்படுத்துவது எம்மீது உமது இனத்தவர்களும் ஏனைய மக்களும் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்காகவேயாகும். எமது அருஞ்செயல்கள் இன்னும் தொடரும். எமது மக்களாகிய எபிரேயரை இத்தனை காலமும் கொடுமைப் படுத்திய எகிப்தியருக்கு, இதுவரை கொடுக்கப்பட்ட தண்டனைகளைப் பார்க்கிலும், பயங்கரமான அவதிகளைக் கொடுக்கப் போகிறேன்! ஆகவே நாளையும் மீண்டும் பார்வோனைக் காணப்போங்கள்!" என்றார்.

பார்வோன் மோசேயிடம் பழைய பல்லவியை மீண்டும் பாடினான். ஆண்டவர் ஏற்கனவே கொடுத்த கட்டளைப்படி மோசே தனது இரு கைகளையும் உயர்த்தினார். கருமேகம் சூழ்ந்தது போல் பல பக்கங்களிலிருந்தும் வெட்டுக் கிளிகள் பறந்து வந்தன. ஏற்கனவே தவளைகள், பேன்கள் மற்றும் கொசுக்கள் எங்கெங்கெல்லாம் பரவினவோ அதைபோல் வெட்டிக்கிளிகள் எங்கும் படர்ந்தன. கல் மழையிலிருந்து ஒருவாறு தப்பிப் பிழைத்திருந்த பயிர் பச்சைகள், புல் பூண்டுகள் அனைத்தையும் வெட்டுக் கிளிகள் உண்ணத் தலைப்பட்டன.

(தொடர்ந்து வரும்)

**திருமறை (12) விடை: ☛ ஆரோன்.**

**பரிசு பெறுவோர்:**

1. ஞா.பாக்கியராஜா, கோளாவில்-1, அக்கரைப்பற்று.
2. பிர்தௌஸியா ஹஸன், 40, சாந்தயெஹியா மாவத்தை, மாத்தறை.
3. வ. வசந்தி, மே/பா. கணேசன், டயகமவெஸ்ட், 3ம் பிரிவு, டயகம.
4. எம். தெய்வராணி, மார்காஷ் தோட்ட எஸ்டேட், இலக்கம்-14, நுவரெலியா.
5. வி. புஸ்பராணி, ஆக்றா டிவிசன், என்போல்ட் குரூப், லிந்துல்ல போஸ்ட்.

**திருமறை 14 வினா:-** எகிப்து மீது ஏவப்பட்ட தண்டனைகள் மூன்றைத் தருக?

ஜூன 27க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 14—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : அமெரிக்கா |
| தொழில் | : உலகைச் சுரண்டுவது |
| உபதொழில் | : உலகை மிரட்டுவது |
| பொழுது போக்குகள் | : மனித உரிமை பற்றி பேசுவது! சமாதானம் பற்றி உபதேசிப்பது! |
| சொத்துக்கள் | : அணுக்குண்டுகள் நியுத்திரன் குண்டுகள் போன்ற அழிவாயுதங்கள்! |
| நண்பர்கள் | : அடங்கி நடப்பவர்கள் மட்டும்! |
| எதிரிகள் | : தன்மானமுள்ள நாடுகளும், மக்களும்! |
| ஒரே சந்தோசம் | : சோவியத் யூனியனின் வீழ்ச்சி! |
| சமீபத்திய எரிச்சல் | : இந்தியாவின் அணுக்குண்டு |
| நம்புவது | : அடக்குமுறை அரசுகளை |
| விரும்புவது | : ஏனைய நாடுகளில் உள்நாட்டு பூசல்களை. |
| தேடுவது | : உலகெங்கும் தளம். |
| மறக்க விரும்புவது | : வியட்நாம், கியூபா போன்ற நாடுகளிடம் வாங்கிக்கட்டியதை! |
| மறக்க விரும்பாதது | : உலகை கட்டியாளும் இலட்சியத்தை. |

## கர்ம வீரர்கள்



**அம்மையார்:** பொதிக்குள் உள்ள கத்தரிகளும், கத்திகளும் உங்கள் கண்களுக்கு தெரிகிறதா?

**தமிழ்க் கட்சிகள்:** இல்லை அம்மா!

**அம்:** குட்டித் தேர்தல்களின் பின்னால் உள்ள திட்டங்கள் உங்கள் கண்ணில் தட்டுப்படுகிறதா?

**த.க:** இல்லைத் தாயே!

**அம்:** வகை தொகையற்ற கைதுகள் தென்படுகிறதா?

**த.க:** இல்லவே இல்லையம்மா!

**அம்:** பாலியல் வல்லுறவுகள்?

**த.க:** இல்லை, இல்லை, இல்லையம்மா!

**அம்:** காணாமல் போனோரின், போவோரின் உறவினர்களின் சோகமே உருவான முகங்கள் தென்படுகிறதா?

**த.க:** இல்லைத்தாயே இல்லை.

**அம்:** அப்படியானால் உங்கள் கண்களுக்கு என்ன தெரிகிறது?

**த.க:** வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் நாற்காலி தான் கண்ணில் தெரிகிறது தாயே!

## நேற்றுவரை உத்தமர்

நேற்றுவரை எங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்த கொள்ளைக் குன்று. எங்கள் கட்சியின் தூண் உத்தமர் அண்ணர் பூவுக்கரசு, ஒரு நீண்டநாள் மோசடியாளர், ஒழுக்கம் கெட்ட உன்மத்தர், நடத்தையிலே தவறுள்ளவர் என்பதை இன்று தெரிவித்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனென்றால் அவர் எங்கள் கட்சியைவிட்டு விலகியிருப்பதால் நாம் குற்றச்சாட்டை கூறியேயாக வேண்டும். விலகியிருக்காவிட்டால் நாம் ஏன் குற்றம் சாட்டப்போகிறோம்?

இப்படிக்கு-கானந்த சுந்தரி.

## கந்தசாமியும் முத்துத்தம்பியும்

**க:** என்ன, முத்துத்தம்பி, கப்பல் கடலில் மூழ்கினமாதிரி கடும் யோசனையில் இருக்கிறீர்?

**மு.த:** கப்பல் கடலில் மூழ்கினால் திரைப்படமாகலாம். கார் கடலில் மூழ்கினால் தினசரிகளில் செய்தியாகலாம். இந்த மனிதன் மூழ்கினால் என்ன செய்யலாம்?

**க:** மீனுக்கு உணவாகலாம் மிஞ்சிப்போய் கரையில் ஒதுங்கினால் கிரியை செய்யலாம்.



**மு.த:** உமக்கு ஒரு நக்கல். ரோட்டாலும் போக முடியேல்லை, காட்டாலும் போக முடியேல்லை, வீட்டுக்கு எப்படிபோய்ச் சேருறது என்று சுட்டுச் சோற்றோடு கதிர்காமம் போன சுப்பர் கலங்கிப் போன கதை தெரியும் தானே.

**க:** பழையகதையெல்லாம் உமக்குத்தானே தெரியும். ஏதாவது ஒரு பாதையால போய் சேரவேண்டியதுதானே, ஏன் கலங்கினவர்?

**மு.த:** காட்டாலே போனால் உறுமல் சத்தம். ரோட்டாலே போனால் செருமல் சத்தம். நின்று யோசிக்கலாம் என்றால் பொத்துப் பொத்தென்று பனங்காய்கள் அவர் தலையில் விழுகுது. பயணத்தை நிறுத்தினாலும் செல்லம்மாவுக்கு பதில் சொல்லி மாளாது. மனுசன் பாடு பெரிய பாடாய் போச்சுதாம்.

**க:** சரி, இதை ஏன் எனக்கு சொல்லுகிறீர்?

**மு.த:** அயல் வீட்டு ஆறுமுகம் கனடாவுக்கு பயணம் புறப்பட்டவர். வருசக்கணக்காக பயணம் இழுபட்டுக் கொண்டிருக்குது. இந்தா போய்ச் சேரலாம் என்ற மாதிரி இருக்குமாம், வெளிக்கிட்டால் எக்கச்சக்கமான தடைகளாம்.

**க:** ஏஜன்சிக்காரன் என்ன சொல்லுறானாம்?

**மு.த:** இந்தா போகலாம், அந்தா போகலாம் என்று காலக்கெடு சொல்லிச் சொல்லியே காலத்தை இழுத்துப் போட்டானாம்.

**க:** ஏஜன்சிக்காரர் உப்பிடித்தான் இழுப்பினம். இதையெல்லாம் நீர் ஏன் எனக்கு சொல்லுகிறீர்?

**மு.த:** எனக்கு விபரம் போதாது, வைபவம் தெரியாத ஆள் எண்டு அடிக்கடி சொல்லுவீர் அல்லோ, அதுதான் விட்டுக்காட்டினனான். பயணம் புறப்பட முன்னர் பலதும் பத்தும் யோசித்து புறப்படவேணும். அவசரப்பட்டுப்போட்டு நடுவழியில் நின்று நஷ்டப்படக்கூடாது. பிறகு நஷ்டத்தை முழுசா சொல்லவும் முடியாமல், மெள்ளவும் முடியாமல் அவதிப்பட வேண்டிவரும்.

**க:** நல்ல உபதேசம், இது யாருக்காக, இந்த உபதேசம், இது நல்ல உபதேசம் யாருக்காக?

**மு.த:** நாடுவிட்டு நாடு செல்லும் பயணிகள் கவனிக்க! எப்பவும் அரசியல் பேசக்கூடாதல்லோ. அறிவுரையும் கூறவேணும் தானே! என்ன ஓ.கே.யோ?

**க:** டபிள் ஓ.கே.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/21/NEWS/98)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# காளையும் – காளையும்

➡ முரட்டுக் காளையுடன் மோதி அதனை மடக்கிப் பிடிக்கும் போட்டி மெக்ஸிக்கோ நாட்டில் மிகப் பிரபல்யம் வாய்ந்தது. அந்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இளைஞர்கள் முரட்டுக் காளைகளுடன் மோதி அடக்கும் விளையாட்டுப்போட்டி நடைபெறுவதுண்டு.

இப்போட்டிகளில் ஈடுபடுத்துவதற்காக சிறு கன்றாக இருக்கும்போதே மாடுகளைப் பயிற்சி கொடுத்து முரட்டு சுபாவமுள்ளவைாக மாற்றுவார்கள்.

இவ்விளையாட்டில் பங்குபற்றும் காளைகளின் கொம்புகள் நன்றாகச் சீவப்பட்டு, மோத வரும் இளைஞனின் மார்பைக் குத்தித் துளைப்பதற்கேற்றவாறு வளர்க்கப்படும்.

இப்போட்டிகளில் பல இளைஞர்கள் காளையால் குத்தப்பட்டு வீரமரணமடைவது சர்வ சாதாரணம்.

மெக்ஸிக்கோ உதைப்பந்தாட்டத்தில் முன்னணியில் திகழ்கிறது. அடுத்து 'பேஸ்போல்' என்ற விளையாட்டும் முக்கியத்துவம் பெறுகிறது. இருப்பினும் முரட்டுக்காளையுடன் மோதும் போட்டிகளைப் பார்க்கவே மக்கள் அதிகமாகக் கூடுவார்கள்.

ஒவ்வொரு பெருநகரிலும் காளையுடன் மோதும் விளையாட்டுக்கான தள அரங்குகள் இருக்கின்றன. மெக்ஸிக்கோ சிட்டியில் உள்ள அரங்கில் 55ஆயிரம் பேர்வரை இருந்து பார்க்க இருக்கைகள் உள்ளன.



தமிழ் நாட்டில் உள்ள கிராமங்களில் தைப் பொங்கலை அடுத்து 'மஞ்சி விரட்டு' என்ற பெயரில் முரட்டுக் காளைகளை அடக்கும் போட்டிகள் நடைபெறுவதுண்டு. இப்போட்டிகளில் வெற்றிவாகை சூடும் இளைஞர்களுக்கு தங்கள் புத்திரிகளைத் திருமணம் செய்து வைக்க பெண்ணைப் பெற்றவர்கள் துடியாய்த் துடிப்பார்கள். அக்காளைகளை தங்கள் கண் வீச்சு வலையில் வீழ்த்த கன்னியரும் காத்திருப்பர். வீரக் காளைகளுக்கு அத்தனை மரியாதை.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


⬇ ரசியாவின் மிகப் பழையதும், அற்புதமான கலையம்சம் பொருந்தியதுமான செயின் பாஸில் கதீட்ரல் தேவாலயம் இதுதான்.

இந்த அழகான தேவாலயத்தை 1560ல் கட்டி முடிப்பித்தவன் படு பயங்கரமான மன்னன். அவன் பெயர்: நாலாம் ஐவன்.

கஸாக் நகரை கைப்பற்ற எட்டு நாள் போரிட்டதின் நினைவாக எட்டு தூபிகளை கொண்டதாக இதனை கட்டச் செய்தான். வெங்காயம் போன்ற வடிவத்தில் தூபிகள் கட்டப்பட்டிருப்பதைப் பாருங்கள்.

எனினும், இத் தேவாலயத்தின் கட்டட கலை இரகசியம் யாருக்குமே தெரியாது. இந்த அழகான தேவாலய சரித்திரத்தின் பின்னால் உள்ள மாபெரும் சோகம் அது. இதனை வடிவமைத்த கட்டடக் கலைஞர்கள் இருவரது கண்கள் குருடாக்கப்பட்டன. நாக்குகள் வெட்டப்பட்டன. கைகள் துண்டாடப்பட்டன. இதேபோல இன்னொரு தேவாலயத்தை உருவாக்கிவிடக்கூடாது என்பதற்காக அந்த கொடூர மன்னன் ஐவன் புரிந்த கொடுமை அது.

உலக அதிசயங்கள் மற்றும் பிரமாண்டங்களில் ஒவ்வொன்றிலும் அதனை உருவாக்கிய உழைப் பாளிகளின் கண்ணீரும், வியர்வையும், இரத்தமும் கலந்தே உள்ளன.

# பம்பரம்



⬆ சிறுவர் முதல் பெரியோர் வரை விரும்புவது பம்பரம். (பெண்களின் கண்களை பம்பரத்துக்கு ஒப்பிட்ட கவிஞனும் பம்பர ரசிகனே)

பண்டைய தமிழ் இலக்கியங்களில் அந்தப்புரங்களில் அரச குடும்பப் பெண்களின் பொழுதுபோக்குகளில் ஒன்று பம்பரம் சுழற்றுவது.

கிரேக்கம், சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் விதம் விதமான பம்பரங்கள் 1800ம் ஆண்டிலேயே இருந்துள்ளன.

படத்தில் மேலே சிவப்பு மற்றும் நீல வர்ணத்தில் இருப்பது அமெரிக்கப் பம்பரம். நடுவில் இருப்பவை மூன்றும் இந்தியப் பம்பரம். கீழே இடது பக்கம் இருப்பது மெக்ஸிக்கோ பம்பரம். வலது புறமிருப்பது ஒஸ்ரியா நாட்டு பம்பரம். பம்பரத்திற்கு சர்வதேச அளவில் ஒரு சரித்திரமே இருக்கிறது பார்த்தீர்களா. சினிமாப் பிரியர்களுக்கு பம்பரம் என்றதுமே, சுகன்யாவின் தொப்புளில் விஜயகாந்த் பம்பரம் விட்டகாட்சி நினைவுக்கு வந்தால் நாம் பொறுப்பல்ல.

# பல ரகம்





⬆ அபூர்வமான ரக நாய்கள் இவை. முதல் படத்தில் இருப்பது டெர்ரீஸ் இன நாய். இரண்டாவதாக, உரித்த கோழிக்கு துணி போர்த்த மாதிரி தெரிவது பூடில் இன நாய்.

நாய்களில் நூற்றுக்கு மேற்பட்ட ரகங்கள் உண்டு. சிலவற்றை கண்டால் பயம் வரும். படத்தில் உள்ளவை வியக்க வைக்கும் நாய்கள். பார்த்ததுமே நாமும் வளர்க்கலாம் என்று ஆசை வருகிறதல்லவா.

நாய்களை எட்டுவாரக் குட்டியாக இருக்கும் போதே கட்டளைகளுக்கு பணிந்து நடக்கப் பழக்கினால், மனிதரைவிட உபயோகமாக இருக்கும். ஒவ்வொரு நாளும் பல தடவை கற்றுக் கொடுத்தால் ஒரு மாதத்தில் 10கட்டளைகளுக்கு பணிந்து நடக்கப் பழகிக் கொள்ளும்.

# செம் பூமியில்






⬅ உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்ட திருவிழா களைகட்டிவிட்டது. பிரேஸில், இத்தாலி போன்ற ஜாம்பவானான அணிகள்கூட திணறுகின்றன. எதிர்பார்க்கப்படாத அணிகள் புகுந்து விளையாடுகின்றன.

சென்ற முறை உலகக் கோப்பையை கைப்பற்றிய அணி பிரேஸில் அணி. அந்த அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்த வீரர் ரொமாறியோ இம்முறை ஆடவில்லை. காலில் காயம் என்று தவிர்த்து விட்டார்கள்.

சர்வதேச கால்பந்துக் கழகம் 1997ல் வெளியிட்ட உலகின் தலைசிறந்த வீரர்கள் பட்டியலில் பிரேஸில் வீரர்கள் இருவர்தான் முதல் இரு இடத்திலும் உள்ளனர். ஒருவர் ரொபார்டோ கார்லோஸ் (படத்தில் இருப்பவர்) இன்னொருவர்: ரொனால்டோ.

10.06.98 அன்று ஸ்கொட்லாந்துடன் நடந்த முதல் போட்டியில் பிரேஸில் வென்றது. அப் போட்டியில் எதிர் அணிவீரர்களின் கால்களுக்கு இடையே கார்லோஸ் தந்திரமாக பந்தை கொண்டுசென்ற நெளிவு சுழிவுகளை மீண்டும் மீண்டும் காண்பித்தனர். சூப்பர் ஸ்டார் என்பதை காட்டிவிட்டார். இனிவரும் போட்டிகளிலும் கார்லோஸின் கால்களின் வித்தையைக் காணமுடியும்.

ஜூலை 12ம் திகதிவரை திருவிழா தொடரும். மொத்தம் 32 அணிகள் 'மோதுகின்றன. 30 நாட்கள் நடைபெறும் இத் திருவிழாவில் 64 ஆட்டங்கள் இடம்பெறும். ஃபிரான்சின் 10 விளையாட்டரங்கங்களில் 25 இலட்சம் மக்கள் நேரடியாகக் கண்டுகளிப்பர். 37 கோடிப் பேர் தொலைக்காட்சிகள் ஊடாகக் கண்டு மகிழ்வர்.

இத் திருவிழாவுக்காக ஃபிரான்ஸ் கால்பந்து போன்ற வடிவத்தில் முத்திரை வெளியிட்டு அசத்தியுள்ளது.

வேலை வெட்டிகள், குடும்பம் என்று எல்லாவற்றையும் மூட்டைகட்டிப் போட்டுவிட்டு, உதைபந்தாட்ட திருவிழாவுக்காக ஒரு மாதத்தை ஒதுக்கிவிட்டனர் உலகெங்கும் உள்ள உதைபந்தாட்ட வெறியர்கள்.

# சூப்பர் ஸ்டார்

# 07 வது பிறந்த தினம்

## 27.04.1998

சராசந்தன்-காஞ்சனா தம்பதியினரின் செல்வப் புதல்வி **டமிஷ்கா** தனது ஏழாவது பிறந்த தினத்தை 27.04.1998 அன்று தனது அன்பு அண்ணன் செல்வன் ஜீவிதன் உடன் மன்னார் இல்லத்தில் வெகு விமரிசையாகக கொண்டாடினார்.

அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் அனைவரும் செல்வி டமிஷ்காவை எல்லாம் வல்ல ராஜ ராஜேஸ்வரி அம்பாள் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வசந்த வாழ்க்கை வாழ வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

*தகவல்: மு. சராசந்தன்- மன்னார்*



டமிஷ்கா



இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், [illegible] இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] உள்ள சமலை அச்சகத்தில் ஜூன் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.